விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (01.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

## பெண்கள் எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும்

### எமது அரசாங்கத்தில் தீர்வு கிடைக்கும் – கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

நுண்கடன் உள்ளிட்ட பெண்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது அரசாங்கம் தீர்வினை வழங்குமென ஸ்ரீலங்கா 15

## நாடு முழுவதும் 60 – 70 கிலோ மீற்றர் வேகத்தில் - பலத்த காற்று வீசும்

(கொழும்பு)

நாடு முழுவதும் 60-70 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுமென வளிமண்டல வியல் திணைக்களம் 15

## மக்களின் பாதுகாப்புக்கே கோத்தா களமிறங்கினார்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

மக்களுக்கான பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்தவே, எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் பலமான வேட்பாளருடன் களமிறங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

### பருத்தித்துறையில்

## ஒரு தொகை ஆயுதங்கள் மீட்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதியில் ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின்போது மறைத்து வைக்கப்பட்டதாக கருதப்படும் ஆயுதங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய யுத்தத்திற்கு முன்னரான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட 15

## நாடு முழுவதும் திடீர் சோதனை

### 3,265 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட நான்கு மணி நேர விசேட சோதனை நடவடிக்கைகளின் போது 3265 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த சோதனை நடவடிக்கைகளின்போது போக்குவரத்து சட்டங்களை 15

### மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரம்

# மக்கள் பலத்துடன் புதியதொரு நாடாக இலங்கை மாற்றப்படும்

### அமைச்சர் சஜித் பிரேமதாஸ



(அம்பாறை)

**இலங்கை நாட்டை தனது தந்தை ரணசிங்க பிரேமதாஸவின் வழியில் முன்னெடுத்துச் செல்வதுடன் நாட்டில் இன, மத, ஜாதி, மொழி பேதமின்றி ஒற்றுமைப்பட்ட நாட்டுக்குள் மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்களை வழங்கி மக்கள் பலத்துடன் புதியதொரு நாடாக இலங்கையை மாற்றப் போவதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் செமட்ட செவண 267ஆவது அல்மினா மாதிரி கிராம வீடமைப்பு தொகுதியை நேற்று சனிக்கிழமை காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் காணப்படுகின்ற 13ஆவது மாகாண சபை அதிகாரம் சக்தியற்று காணப்படுகின்றது. இதனை சக்திமிக்கதாக மாற்றியமைக்க வேண்டும். இதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். தேர்தல் காலங்களில் மாத்திரம் இதனை பேசிவிட்டு பின்னர் மாகாண சபைகள் தொடர்பாக யாரும் கண்டு கொள்வதில்லை.

அரசியல் தலைமைகள் 13 பிளஸ் வழங்குவதாக வெளிநாட்டிலும் உள்நாட்டில் 13 மைனஸ் தொடர்பாகவும் பேசுகின்றனர். உலக நாடுகளுக்கு ஒரு கதையும் உள்நாட்டில் 15

## மாகாண சபைத் தேர்தலை நடத்தும் சாத்தியம் இல்லை

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியம் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், எல்பிட்டிய பிரதேச சபை தேர் 15

### காரைநகர் பகுதியில்

## கைவிடப்பட்ட 2 குண்டுகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் 15

## இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளின் விபரத்தை சமர்ப்பிக்குக

### ஆளுநர் சுரேன் ராகவன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலை கொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விபரங்களை இதற்காக தயாரிக்கப்பட்ட விசேட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உரிமை கோரலுக்கான தகுந்த ஆதாரத்துடன் அல்லது தகுந்த விளக்கத்துடன் மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்களை வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக ஆளுநரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் 15

### அடுத்து ஆட்சியமைக்கும் அரசின் மூலம்

## 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய ஜனாதிபதி மைத்திரி - மகிந்த இணக்கம்

(கொழும்பு)

அடுத்து ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் மூலம் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். ஜனாதிபதிக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற விசேட சந்திப்பின்போது இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் காரணமாக ஜனாதிபதி, பிரதமர் மட்டுமல்லாது சபாநாயகரும் நாட்டை ஆட்சி செய்ய ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று அதிகார தூண்கள் உருவாகி இருப்பது 15

### கல்வியை நவீனமயப்படுத்துவதன் மூலம்

## நாட்டை கட்டியெழுப்புவதே எமது இலக்கு – ரணில்

(கொழும்பு)

கல்வியை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தி அதனை மேம்படுத்துவதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



தென்கோவை

## திருவருள்மிகு கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்

*இருபாலை, கோப்பாய்.*

## விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி

**கற்பகன் மெய்யடியார்களே!**

நிகழும் மங்களகரமான விகாரி வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் (02.09.2019) திங்கட்கிழமை ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்திப் பிள்ளையாருக்கு காலை 06.00 மணி முதல் மாலை 04.00 மணி வரையும் பக்தர்கள் கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஷ்கரணியில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து தங்களுடைய கைகளால் தீர்த்தவாரி (நீர் ஊற்றுதல்) செய்வதற்கு கற்பகப்பிள்ளையார் திருவருள் கைகூடியுள்ளது. அன்று மாலை 04.00 மணி முதல் கற்பகப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகமும், விஷேட பூஜை வழிபாடுகளும் மாலை 06.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று எம் பெருமான் வீதியுலா வருகின்ற கண்கொள்ளாக் காட்சியும் நடைபெறும்.

**இருபாலை, கோப்பாய். இங்ஙனம் - தேவஸ்தானம்.**

# வாள்முனையில் பெண்ணிடம் சங்கிலி அறுக்க முயற்சி

## அராலி பகுதியில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூருக்குச் சென்று திரும்பிய அரச உத்தியோகப் பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் வாள் முனையில் சங்கிலி அறுக்கும் முயற்சி கடந்த வியாழக்கிழமை தோல்வியில் முடிவடைந்தது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் குறித்த பெண் உத்தியோகத்தர் கடந்த 29ஆம் திகதி நல்லூர் சப்பரத்திருவிழாவுக்கு அவரது மருமகளுடன் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

அராலி பாலத்திற்கு அருகாமையில் சென்று கொண்டிருந்த பெண்ணினை பின் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வாளைக்காட்டி வழி மறித்ததுடன் நகைகளை தருமாறு கேட்டு அச்சுறுத்தியுள்ளனர்.

அச் சமயம் வீதியால் வந்தவர்களைக் கண்டதும் பெண் மீது வாளினால் வீசிவிட்டு தப்பிச் சென்றனர் குறித்த வாள் வீச்சில் தெய்வாதீனமாக எவருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை. (ம-3,10,104)

# மரண அறிவித்தல்கள்



## பொன்னு தர்மகுலசிங்கம்

குமரகோட்டம் கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு தர்மகுலசிங்கம் நேற்று (31.08.2019) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், தங்கமலரின் அன்புக் கணவரும், ரதிகலா, வரன் (சுவிஸ்), கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில் வடக்கு. (C-7468)

தகவல் - குடும்பத்தினர்
**T.P. No : 077 602 2401**

## கோவிந்தசாமி செல்வராசா

(ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் – கிளிநொச்சி வலயம்)



யாழ் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 7ஆம் யூனிற் இராமநாதபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும், இல.441, ஆனந்தபுரம் கிழக்கு கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய கோவிந்தசாமி செல்வராசா (ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் - கிளிநொச்சி வலயம்) அவர்கள் கடந்த 30.08.2019 ஆம் திகதியன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தியாகராசா - தங்கம்மா (ஓய்வு நிலை அதிபர்கள்) தம்பதியரின் அன்பு மருமகனும், கலையரசி (ஆசிரியர் - கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்) யின் பாசமிகு கணவரும், தர்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி. வடக்கு பிரதேச செயலகம்), கிருஷிகன் (பல் வைத்தியர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை), தஜிவன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கோபிகா (றுகுணை பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கபிலன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்), கௌசிகா (பல் வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோபாலராசா (கோபால் போட்டோ - இராமநாதபுரம்), செல்வராணி, ஜெயராணி, இந்திராணி (ஆசிரியர் - கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), வசந்தராணி (பிரான்ஸ்), வதனராணி (இத்தாலி) மற்றும் தர்மராசா (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லக்ஸ்சாந்தி (அதிபர் - கிளி/மாயவனூர் வித்தியாலயம்), காலஞ்சென்ற கோபாலபிள்ளை, தர்மசூரியர் (சமாதான நீதவான்), புண்ணியமூர்த்தி (அதிபர் - கிளி / முருகானந்தா கல்லூரி), தேவபாலன் (பிரான்ஸ்), குணசேகரம் (இத்தாலி), பத்மகாந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற கலைச்செல்வி, கலைவதனி (கனடா), பிரேமகாந்தன் (அதிபர் - கிளி/முரசுமோட்டை அ.த.க. பாட சாலை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரமாத்மிகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 441, ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி. (C-7471)

தகவல் - குடும்பத்தினர்


# Job Opportunity
# பணியாளர்கள் தேவை



யாழில் ஆரம்பிக்கப்படும் புதிய தொழில் நிலையம் ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை.

தொழில்நுட்பம் தொடர்பான வாடிக்கையாளர் சேவை நிலையம் (Call center)

ஒன்றில் பணியாற்றுவதற்குத் தகுதியானவர்களை உரிய ஆவணங்களுடன் நேரடியாக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகைமை**

1. க.பொ.(உ/த) சித்தி அல்லது அதற்கு மேலான வேறு உயர் கல்வித் தகைமை
2. கணணி அறிவு
3. ஆங்கில அறிவு

மேற்படி தகைமை உடையவர்கள் உங்கள் சுயவிபரக்கோவையை கீழ் உள்ள மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்

**தொலைபேசி எண் : 071 864 3232**
**மின் அஞ்சல் : info@innsys.ca**

(054)

# தமிழினத்திற்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்!

## லண்டனில் காட்சிப்படுத்தல்





(லண்டன்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் லண்டனில் ஒன்றுகூடிய தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் தமிழினம் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையை எடுத்தியம்பும் காட்சிப் பதாகைகளும் வைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

லண்டன் Trafalgar Square பகுதியில் நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணி தொடக்கம் மாலை 4 வரை இடம்பெற்ற இப் போராட்டத்தில் லண்டன் வாழ் தமிழர்கள் கலந்து கொண்டதுடன் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் கோசங்களையும் எழுப்பினர்.

மேலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையின்போது வடக்கு- கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்தநடராஜா உரையாற்றினார்.

காணாமல் போனோர் அலுவலகம் மீதும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் நம்பிக்கை இல்லாமையை வெளிக்காட்டியுள்ளனர். ஆணைக்குழுக்களும் திணைக்களங்களும் தமிழர்களுக்கான தீர்வை தரப்போவதில்லை என்பதை இலங்கை மீண்டும் நிரூபித்து விட்டது. ஆகவே சர்வதேசம் தலையிட்டு இப்பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக பெற்றுத்தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் நாடுகடந்த அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7-281)

---

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க மைத்திரி, ரணில், மகிந்த இணக்கம்

## மு.கா.செயலாளர் காரியப்பர் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோருக்கு இடையில் பொது உடன்பாடு எட்டப்படலாமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

குறித்த மூவருக்கும் நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கான வாய்ப்பு இல்லாதமையால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் எனும் போர்வையில், தேர்தலை தாமதப்படுத்தலாமெனவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுகின்றமை குறித்து கருத்து தெரிவிக்கும் போதே நிஸாம் காரியப்பர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் திரைமறைவில் முயற்சிப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகையால் இவ்விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் கலந்துரையாடாமல் நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதனை கடுமையாக எதிர்ப்போம்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு ஜனாதிபதியாவதற்கு இனி வாய்ப்பில்லை.

இதனால் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அவர்களுக்குள் உடன்பாடு எட்டப்படுவதற்கு வாய்ப்பு காணப்படுகின்றது.

அந்தவகையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் உறுதி செய்யப்படலாம். அவ்வாறாயின் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே இதனைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுக்கும்.

மேலும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாமல் தாமதமடைவதற்கு வாய்ப்புள்ளது.

ஆகையால் இத்தகைய செயற்பாடு இடம்பெறுவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" எனத் தெரிவித்தார். (இ-7)

---

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் தேவை தீர்வுகளேயன்றி, அனுதாபமல்ல - ஓ.எம்.பி.ஆணையர்

(கொழும்பு)

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஓ.எம்.பி. ஸ்தாபிக்கப்படும் வரை காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் வழங்கிய முறைப்பாடுகள் எவற்றையும் உரிய அரச நிறுவனங்கள் கருத்திற்கொள்ளவில்லை. என்னுடைய கணவர் காணாமலாக்கப்பட்ட போது, நான் பொலிஸில் முறைப்பாடு செய்வதற்காகச் சென்றேன். அப்போது அவர்கள் எனது கணவருக்கு தூக்கத்தில் நடக்கும் வியாதி இருக்கிறதா என்று கேட்டார்கள்.

உண்மையில் அரச நிறுவனங்கள் எம்முடைய தேவை எதுவென்பதைப் புரிந்து கொள்ளவில்லை. கேள்விகளுக்கான பதிலே எமது தேவையாக இருக்கின்றது, மாறாக அனுதாபமல்ல என்று காணா மல போனோர் பற்றிய அலுவ லகத்தின் ஆணையாளர்களில் ஒருவரான ஜெயதீபா புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலவருட காலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு உதவுவதற்கான எவ்வித கட்டமைப்புக்களும் இருக்கவில்லை. தற்போது அவ்வெற்றிடத்தை காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் பூர்த்தி செய்துள்ளது. இவ்வலுவலகம் ஸ்தாபிக்கப்படும் வரை காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் வழங்கிய முறைப்பாடுகளை உரிய அரச நிறுவனங்கள் எவையும் பெரியளவில் கருத்திற்கொள்ளவில்லை.

உண்மையில் அரச நிறுவனங்கள் எமக்கு எது தேவை என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. எம்மைப் பார்த்துப் பரிதாபப்படத் தேவையில்லை. எமக்குப் பதிலும், தீர்வுமே வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(கொழும்பு)

சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலாத்துறையில் ஈடுபட்டிருக்கும் நபர்களுக்கு, நிவாரணம் வழங்க அண்மையில் அரசாங்கம் முன்னெடுத்த முடிவுகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.



இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் வீழ்ச்சியைச் சந்தித்த சுற்றுலாத்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதியால், விசேட உப செயற்குழுவொன்று அண்மையில் நிறுவப்பட்டது.

இதன் ஊடாக பல்வேறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் நன்மைகள் இதுவரை சுற்றுலாத்துறையினருக்குக் கிடைக்கப்பெறவில்லை என்றும் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இந் நிலையில், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நிதி அமைச்சு, சுற்றுலா சபை அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் சுற்றுலாத் துறைசார் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இலகு கடன் வசதிகள் வழங்குதல், குத்தகைத் தவணைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்பட்டதுடன், நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முடிவுகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இதுதொடர்பாக சுற்றுலாத் துறை சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதன் பின்னர், குறித்த விடயங்களை ஒருங்கிணைப்பு செய்வதற்கு நிதி அமைச்சு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் இரண்டு பிரதிநிதிகளை நியமிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இந்தக்கலந்துரையாடலில் ஜோன் அமரதுங்க, மங்கள சமரவீர ஆகிய அமைச்சர்களும் நிதி அமைச்சு, சுற்றுலா சபை, உள்ளிட்ட அலுவலகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (இ-7)

---

# நகைச்சுவைக் கதாபாத்திரத்தை ஜனாதிபதி ஏற்பது நல்லதல்ல

## கோத்தாவின் பேச்சாளர் கெஹலிய

(கொழும்பு)

அரசியல் யாப்பு மாற்றம் குறித்து நான்கரை வருடங்கள் கடந்த பின்னர் கருத்துத் தெரிவிப்பது நகைச்சுவையாகவுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல எம்.பி.தெரிவித்தார்.

நாட்டுக்குப் பொருத்தமான அரசியல் யாப்பொன்றை இப்போதாவது கொண்டுவர வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருந்த நிலையில் இதற்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி நகைச்சுவை கதாபாத்திரத்தை ஏற்கக் கூடாது. புதிய அரசாங்கமொன்று அமைக்கப்படும் போதுதான் புதிய அரசியல் யாப்பு மாற்றம் குறித்து பேசப்படுவது அரசியல் வழமையாகும்.

இதுவரையில் எம்து நாட்டின் வரலாற்றில் அரசாங்கத்தின் இறுதிக் காலத்தில் அரசியல் யாப்பு மாற்றம் குறித்து பேசப்பட்டது இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை-நியூசிலாந்து மோதும் இருபது-இருபது போட்டி இன்று

## கடும் பயிற்சியில் இலங்கை அணி



நியூசிலாந்துக்கு எதிரான டி20 தொடருக்காக இலங்கை வீரர்கள் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வரும் புகைப்படங்கள், இலங்கை கிரிக்கெட் டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் நியூசிலாந்து அணி, இன்று தொடங்கும் டி20 தொடரில் விளையாட உள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. அதனைத் தொடர்ந்து, மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடர் இன்று பல்லேகல்லவில் தொடங்குகிறது.

இந்த தொடருக்கு முன்பாக, கடந்த 29ஆம் திகதி நடந்த பயிற்சி ஆட்டத்தில், நியூசிலாந்து அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

எனவே, டி20 தொடரை கைப்பற்றும் முனைப்புடன் இலங்கை அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை மின்னொளி வெளிச்சத்தில் இலங்கை வீரர்கள் வலைப் பயிற்சி மேற்கொண்ட புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை அணியின் மூத்த வீரரும், வேகப்பந்து வீச்சாளருமான மலிங்க ஆக்ரோஷத்துடன் பந்து வீசுகிறார். அவரைப் போல் பிற வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டனர். இந்த புகைப்படங்களை இலங்கை கிரிக்கெட் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

# அணித்தலைவர் சிறப்பாக விளையாடாததே உலகக்கிண்ணத்தில் சிக்கலை கொண்டு வந்தது

## பங்களாதேஷ் வீரர் சகிப் அல் ஹசன்

கேப்டன் மோர்டசா பார்ம் இன்றி சிறப்பாக விளையாடாதது உலகக்கிண்ண தொடரில் மிகப்பெரிய பாதகமாக அமைந்து விட்டது என ஷகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது. இதில் பங்காளதேஷ் அணியின் ஆல்ரவுண்டரான ஷாகிப் அல் ஹசன் 9 போட்டிகளில் 10 விக்கெட்டுக்களுடன் 606 ரன்கள் குவித்தார். இந்தத் தொடரில் அதிக ரன்கள் குவித்தவர்கள் பட்டியலில் 3-வது இடம் பிடித்தார்.

என்றாலும் மற்ற வீரர்கள் சிறப்பாக விளையாடாததன் மூலம் பங்களாதேஷ் அணியால் 8-வது இடத்தையே பிடிக்க முடிந்தது.

பங்களாதேஷ் அணி 8-வது இடத்தை பிடிக்க, அணியின் கேப்டனின் மோசமான பார்ம் தான் காரணம் என்று ஷகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஷகிப் அல் ஹசன் கூறுகையில் “உலகக்கிண்ணத்தில் நீண்ட தூரம் செல்ல வேண்டும். ஒவ்வொரு வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் தான் அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்பதை நான் உறுதியாக நம்பினேன்.

உலகக்கிண்ணத்தில் நாங்கள் நினைத்த விடயங்கள் நடக்கவில்லை. ஒரு வீரர் சிறப்பாக விளையாடாதபோது, அணி எப்படி விளையாடியது என்பதை காட்டிலும், தன்னுடைய செயற்பாடு எப்படி இருந்தது என்பது குறித்து யோசிக்க வேண்டும்.

இது உலகக்கிண்ணத்தின் போது எங்களுக்கு பிரச்சினையாகியது. இதே விடயம் மோர்டசாவுக்கு நடந்தது. கப்டன் சிறப்பாக விளையாடாத போது, அவருக்கும் பிரச்சினை. அணிக்கும் பிரச்சினை. கப்டன் சிறப்பாக விளையாட வேண்டும். அதற்கு மாற்று வழி ஏதும் கிடையாது” என்றார்.



### அமெரிக்க ஓபன் டெனிஸ்

# 4 வது சுற்றுக்கு தகுதி பெற்றனர் ஜோகோவிச், செரீனா வில்லியம்ஸ்

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச், செரீனா ஆகியோர் 3-வது சுற்றில் வெற்றி பெற்று 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் முதல் நிலை வீரரும், நடப்பு சம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) 3-வது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த டெனிசை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ஜோகோவிச் 4-வது ரவுண்டில் 23-வது வரிசையில் இருக்கும் வாவ்ரிங்காவை (சுவிட்சர்லாந்து) சந்திக்கிறார். அவர் 3-வது சுற்றில் லொரன்சியை (இத்தாலி) 6-4, 7-6, (11-9), 7-6 (7-4) என்ற கணக்கில்



வீழ்த்தினார்.

மற்ற ஆட்டத்தில் 5-ம் நிலை வீரரான மெட்வதேவ், (ரஷியா), அலெக்ஸ் மினாவுர் (ஆஸ்திரேலியா) ஆகியோர் வென்று 4-வது சுற்றில் நுழைந்தனர். 7-வது வரிசையில் உள்ள நிஷிகோரி (ஜப்பான்) 3-வது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

23 கிராண்ட்சிலாம் பட்டம் வென்றவரும், 8-வது வரிசையில் உள்ளவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), 3-வது சுற்றில் கரோலினா முச்கோவாவை (செக்குடியரசு) எதிர் கொண்டார்.

இதில் செரீனா 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்றார். 4-வது சுற்றில் அவர் பெடரர் மேட்ரிக்கை (குரோஷியா) சந்திக்கிறார்.

மற்ற ஆட்டங்களில் 2-வது வரிசையில் உள்ள பேர்ட்டி (ஆஸ்திரேலியா), 3-வது இடத்தில் இருக்கும் பிளிகோவா (செக் குடியரசு), 5-ம் நிலை வீராங்கனை சுவிட் மோலினா (உக்ரைன்) மேடிசன் கெய்ஸ் (அமெரிக்கா) சோண்டா (இங்கிலாந்து), வா்ங் (சீனா) ஆகியோர் வென்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

# அஸ்வினைப் புறக்கணித்து ஜடேயா தெரிவு செய்யப்பட்டது எதற்காக?

## விளக்கமளித்தார் ரவி சாஸ்திரி



வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக சரியான ரெக்கார்ட் வைத்திருக்கும் அஸ்வினை உட்கார வைத்து விட்டு ஜடேஜாவை அணியில் தேர்வு செய்ததைப் பற்றி கடும் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் ஜடேஜா ஏன் என்று ரவி சாஸ்திரி விளக்கம் அளித்துள்ளார்.

அதாவது அஸ்வினைத் தேர்வு செய்யாதது ‘அதிர்ச்சியளிக்கிறது’என்று சுனில் கவாஸ்கர் உள்ளிட்டோர் அதிர்ச்சி தெரிவித்திருந்தனர்.


**இந்நிலையில் ரவிசாஸ்திரி கூறியிருப்பதாவது:**

ஜடேஜாவின் சாதனைகள் தான் காரணம். அவர் இந்திய அணிக்கு என்ன கொண்டு வருகிறார் என்பதுதான் முக்கியம். தற்போது உலகின் சிறந்த பீல்டர் அவர், பேட்டிங் பார்மில் கடுமையான முன்னேற்றம் காட்டியுள்ளார்.

மேலும் இந்த 2 டெஸ்ட் போட்டிகளுக்கான பிட்சைப் பாருங்கள், பிளாட் ட்ராக்காக உள்ளது. இங்கு ஸ்பின்னர்களுக்கு பெரிதாக எதுவும் பலன் இருக்காது என்று கருதினோம். அதனால் இங்கு கட்டுப்பாட்டுடன் வீச வேண்டிய தேவையிருக்கிறது.

முதல் டெஸ்ட்டில் ஜடேஜாவை தேர்வு செய்யக் காரணம், ஒருவேளை நாம் முதலில் பவுலிங் செய்ய வேண்டியிருந்தால் பிட்சின் ஈரப்பதம் ஜடேஜாவின் பந்து வீச்சு முறை மே.இ.வீரர்களை கொஞ்சம் கடினப்படுத்தியிருக்கும். முதல் செஷனிலேயே அவரைப் பயன்படுத்த முடியும்.

அதனால்தான் ஜடேஜாவை தேர்வு செய்தோம். அஸ்வின் உலகத்தரம் வாய்ந்த ஸ்பின்னர், ஆகவே அவரையோ, குல்தீப் யாதவையோ உட்கார வைப்பது என்பது கடினமான முடிவாகும்.இவ்வாறு கூறினார் ரவிசாஸ்திரி.



## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி.**சபிதா மெய்யழகன்**

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தது அம்மா
அருகில் நீ இருப்பதாய் உணர்கிறோம் தாயே
மீண்டும் உன் அன்பு முகம் காண
ஓடோடி வாராயோ?

தோற்றம்: 03.11.1966 மறைவு 02.09.2016

(037)

கிருஷ்ணபதி
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

பிரிவால் துயருறும் – மா.மெய்யழகன் கணவர்
மெ.இங்கிதை மகள்– க.பாலகிருஷ்ணன் தந்தை


# 4236 டிப்ளோமாதாரிகளுக்கு 8ஆம் திகதி ஆசிரியர் நியமனங்கள் - கல்வி அமைச்சு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பட்டம் பெற்ற 4 ஆயிரத்து 236 டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

இவ்வாறு வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்களுள் ஆயிரத்து 404 தமிழ் மொழி மூல ஆசிரியர் நியமனங்களும் 428 ஆங்கில ஆசிரியர் நியமனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2015/2017 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட குழுவிற்கே இவ்வாறு நியமங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)






# மரண அறிவித்தல்

## யக்கோப்பிள்ளை சிமியோன்

பிறப்பு 11-03-1935 இறப்பு 27-08.2019

குடத்தனையை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட யக்கோப்பிள்ளை சிமியோன் 27.08.2019 இயற்கை எய்தினார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி யக்கோப்பிள்ளையின் அன்புமகனும், சின்னத்துரை பொன்னரியத்தின் அன்புமருமகனும், காலஞ்சென்ற மனுவேல்பிள்ளையின் சகோதரனும், விக்ரோறியாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மரியகொறற்ரா(மணி), ஸ்ரெனிஸ்லாஸ்(வட்டன்), ஏவின்சன், பவளரதி, லோறன்ஸ் ஜோண்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராயப்பு, ரெறன்ஸ், ஜெசி, சித்ரா, நேசமலர், பாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசான், ஜெரிக், சகானா, ஏஞ்சஸ், நிறூஜன், லிவின்சன், ஆகாஸ், ஜெக்ஷன், ஜொனார்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 02.09.2019 நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்து காக்கைதீவு சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-** (040)

இராயப்பு (மருமகன்) - 077 807 7862, 076 523 4022,
ஸ்ரனிஸ்லாஸ் (வட்டன்) (மகன்) கனடா - 0016 479 457 042
லோறன்ஸ் (மகன்) கனடா - 0014 162 927 942,
ஏவிஞ்சன் (மகன்) இத்தாலி - 0039 351 176 087
பவளரதி (மகள்) பிரான்ஸ் -0033 695 945 949
ஜோன்சன் (மகன்) கனடா - 0016 475 210 778

எம்.இராயப்பு,
14/1,அடைக்கலநாயகி வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.


## இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று . நிறைவேறும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** தொலைபெசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல் நலன் சீராகும், தொழில் மேன்மையுண்டு, மற்றவர்களின் மனநிலையை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் • அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், சுபசெலவுகள் கூடும்.

**கும்பம்:** நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம், விரயங்கள் கூடும் நாள், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவர், போசன சுகமுண்டு.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் .நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வரம்தரும் தெய்வங்களை நாடிச்செல்வீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நாவன்மையால் நல்லபெயர் கிடைக்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**இராசி பலன்** – கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சதயம், பூரட்டாதி | | |
| | | | சூரி, புத, சுக், செவ் |
| சனி, கேது | குரு | | சந் |

**01.09.2019**

ஆவணி 15, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
துதியை நண்பகல் 11.59 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.24 மணிவரை
சுபநேரம் 9.05-10.35மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
இஸ்லாமிய வருடப்பிறப்பு 1441
மூன்றாம் ஆவணி ஞாயிறு

வளவன்

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெறுவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், போசன நன்மையுண்டு.

**துலாம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்து செலவுகளால் திணறுவீர்கள்.

**கன்னி:** விரும்பிய உணவுப்பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.


## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை வரை தினந்தோறும் மாலை 6.30 மணியளவில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

3 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் இளஞ்சைவப்புலவர் த.மனோஜ்குமார் "திருவாக்கும் செய்கருமம்", 4 ஆம் திகதி இளஞ்சைவப் புலவர் சைவசின்மயர் க.கைலவாசன் "கருவறையின் தேவ ரகசிகம்", 5 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன். சந்திரவேல் "அபிராமி என்னும் அருமருந்து", 6 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் இளஞ்சைவப் புலவர் ச.நவநீதன் "விழாக்களும் விரதங்களும்", 7 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் கா.கமலநாதன் "திருநீற்று உருவான நாயகி", 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் ச.முகுந்தன் "தா்மம் தலைகாக்கும்", 9 ஆம் திகதி சிவநெறிச்செம்மல் சைவ சின்மயர் நித்தியபாபுதரன் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே", 10 ஆம் திகதி இளஞ் சைவப்புலவர் ஆன்மீகத் திலகம் க.கைலநாதன் "சரணாகதி", 12 ஆம் திகதி சிவநெறிச் செம்மல் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் "ஆலய வழிபாட்டு முறைகள்" எனும் தலைப்புக்களில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

குறிப்பு: சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படும். (இ-7)



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழா, நிலையத் தலைவர் த.ஹரிசாந்த் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், மாநகர சபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை மாநகர சபை முதல்வ ரால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை வடக்கு இலந்தை வனப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாட்கள் நடைபெறும். எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் வேட்டைத் திருவிழாவும் இரவு 9 மணியளவில் தீ மிதித்தலும் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணியளவில் தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## ஆண்டு நிறைவு விழா

(கொடிகாமம்)

நாவற்குழி காந்தி சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணியளவில் காந்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் இ.இரட்ணகரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், நாவற்குழி மகா வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் திருமதி. வ.மேகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)




## ஆவணிச் சதுர்த்தி திருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த ஆவணி சதுர்த்தித் திருவிழா நாளை 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.


இதில் காலை 6.15 மணி முதல் சகஸ்ர (1008) சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம்பெறும். நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் இடம்பெறும்.

மாலை 5 மணியளவில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதல் இடம்பெறும்.

தொடர்ந்து வருடாந்த உற்சவத்தின் போது இடம்பெற்ற சைவ சமய அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (இ-5)

# ஊடக ஜாம்பவான் மதியழகன் எழுதிய நூலை பல்கலை.மட்டத்தில் பாடமாக ஏற்றுக்கொள்ளலாம்

## கலாநிதி ரகுராம் பரிந்துரை





(யாழ்ப்பாணம்)

இலங்கை ஊடகத்துறையில் ஜாம்பவானாகத் திகழும் "வி.எஸ். மதியழகன் சொல்லும் செய்திகள்" என்ற ஒளி.ஒலி, செய்திப் பரிமாணம் சார்ந்த நூல் பல்கலைக்கழக மட்டத்தில் ஊடகத் துறை சார்ந்த பாடமாக ஏற்றுக் கொள்ளும் தகுதிகள் அத்தனையையும் உள்ளடக்கியிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஊடகக் கற்கைப் பிரிவின் தலைவருமான கலாநிதி எஸ்.ரகுராம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கை நெறி விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு ஆய்வு மாணவர்கள் மத்தியில் பல்துறைசார் ஊடகவியலாளர் வி.எஸ்.மதியழகனால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அனுபவ கருத்தாய்வுக் களத்தில் பங்குபற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிரேஷ்ட ஊடகவியலாளரான வி.எஸ்.மதியழகன் தினபதி, சிந்தாமணிப் பத்திரிகை இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக் காட்சிச் சேவை மற்றும் இலங்கை றூபவாஹினி கூட்டுத்தாபனங்களில் பணி செய்த 50 வருட கால அனுபவத்தைக் கொண்டவர்.

பல்துறை சார் அனுபவங்களைக் கொண்ட குறித்த ஊடகவியலாளரைப் போன்று இளம் ஊடகவியலாளர்களும் ஊடகத் துறை சார்ந்தவர்களும் புதிய உத்திகளைக் கைக்கொண்டு புதிய சவால்களை வெற்றி கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் வி.எஸ்.மதியழகன் தெரிவிக்கையில், பத்திரிகை, இலத்திரனியல் ஊடகங்களில் தடம் பதிக்கும் இளைஞர், யுவதிகள் உள்ளூர் சர்வதேச மட்டத்திலான பட்டப்படிப்புகளை மேற்கொண்டு சமூகப் பொறுப்புடன் சம்நிலை பேணி ஊடகத்துறையில் ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும்.

ஊடகத்துறையில் வரும் தாக்கங்களைத் தொழில்சார் தகுதியுடனும் அர்ப்பணிப்புச் சிந்தனையுடனும் துணிவுடனும் எதிர்கொள்ள முன்வர வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.ஊடகக் கற்கைநெறி விரிவுரையாளர்களான எஸ்.தினேஸ், எஸ்.பூங்குழலி, ஆ.சேவிஷா மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (இ-10)

## ஞானவேள்வி ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயாமிஷன் நடத்தும் ஞானவேள்வி ஆன்மீகச் சொற்பொழிவு எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் கொழும்பு சின்மயா மிஷன் சுவாமி குணாதீதானந்த சரஸ்வதி வழங்கும் "ஒரு துளி அமிர்தம்" ஆன்மீகச் சொற்பொழிவு காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நல்லூர் சின்மயா மிஷனில் நடைபெறும்.

மாலை நேரச் சொற்பொழிவு "உன்னை அறிந்தால் உலகில் வாழலாம்" எனும் தலைப்பில் மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெறும். (இ-5)

## மாரி காலத்திற்கு முன்னர் குளங்கள் தூர்வாரப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நகர சபையின் பதிவில் காணப்படுகின்ற குளங்கள் அனைத்தும் வருகின்ற மாரி காலத்திற்கு முன்னராக தூர்வாரப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்தார். சாவகச்சேரி நகர சபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது காலநிலை மாற்றத்தின் காரணமாக மழைவீழ்ச்சி வெகுவாகக் குறைவடைந்து வருகிறது. நாம் எம்மிடம் உள்ள நன்னீர் தேக்கங்களைக் கொண்டு நீரை சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர எல்லைக்குள் நகர சபையின் பதிவில் ஓரிரு குளங்களே காணப்படுகின்றன.

ஆகவே அவற்றை ஆழப்படுத்தி மழை நீரைச் சேமிக்க வேண்டும். தென்மராட்சியின் பல இடங்களிலும் கோடை காலங்களில் பொதுமக்கள் விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கான தேவையான நீரின்றி அல்லல் படுகின்றனர் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (5-30)

## "எமது ஆட்சியில் உண்மை எடுத்துரைக்கப்படும்"

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களை அரசு ஏமாற்றிக் கொண்டிருக்கிறது -வாசு



(கொழும்பு)

யுத்த காலத்தில் காணாமல் போனோரது உறவினர்களை ஏமாற்றும் செயற்பாடுகளையே இந்த அரசாங்கம் முன்னெடுக்கின்றது. காணாமல்போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகளின் மீது தமிழ் மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது.

எமது ஆட்சியில் நிச்சம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை எடுத்துரைக்கப்படும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


### சொர்க்கம் திருமண சேவை

சொர்க்கம் திருமண சேவை நிறுவனத்தின் யாழ்.காரியாலயத் திறப்பு விழா புரட்டாதி முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று யாழ்.கிளை திறந்து வைக்கப்படுகிறது. 39 வயதுள்ள கனடா மணமகனுக்கு இலங்கையில் மணமகள் தேவை. நெதர்லாந்தில் வசிக்கும் 25 வயதுடைய சுவாதி நட்சத்திரம் அழகிய பெண்ணுக்கு லண்டன், சுவிர்சர்லாந்தில் மணமகன் தேவை.

**0014 166 661 855**
**0014 377 728 129, 076 236 4188** (C-7451)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### வீடு வளவு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடத்தில் 3 1/2 பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
**076 007 4520** (031)

### உள்ளூர் தயாரிப்புக்கள்

பரணி தானிய தோசை மா மற்றும் தானிய இடியப்பமா தரமான பொருட்களைக் கொண்டு சுத்தமான முறையில் தயாரிக்கப்படுகிறது.

**ஹெயார் ஒயில்**

பரணி ஆவாரம் பூ ஹெயார் ஒயில் பொடுகு, பேன், இளநரை, முடி உதிர்தல், தலைமிடி, முடி கருமையாகுதல், நீண்டு வளர்தல், பலவகையான மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

T.P: 077 957 2935 (042)

### பகிரங்க அறிவித்தல்

கால்நடை பிடியாளர்களினால் பிடிக்கப்பட்டு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட N.K குறியுள்ள 4409 0992 0033, 4409 0992 0034 காதுதோடுடைய வெள்ளை நிற மாடுகள், S.S குறியுள்ள சிவப்பு நிற மாடு, K.M குறியுள்ள சிவப்புநிற மாடு, வி.ஆ குறியுள்ள வெள்ளை நிற மாடு, K.N குறியுள்ள மாடு, என்பவற்றின் உரிமையாளர்கள் பிரசுர திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் பிடிகூலி, கட்டாக்காலியாக விடல் கட்டணம், பயிரழிவு நட்டம், பராமரிப்பு பணம் என்பவற்றை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 021 206 1907**

நிறைவேற்று செயலாளர்,
கமநல சேவை குழு, உடையார்கட்டு. (050)

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம் யாழ்ப்பாணம்

**2018/2019 வரிமதிப்பாண்டுக்கான புதிய வருமானவரி விபரத்திரட்டுக்களை பூரணப்படுத்தல் தொடர்பான இலவச தெளிவூட்டல் கருத்தரங்கு**

2018/2019 வரிமதிப்பாண்டுக்கான புதிய வருமான வரி விபரத்திரட்டுக்களை பூரணப்படுத்தல் தொடர்பான இலவச தெளிவூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 07.09.2019 சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில், உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் வரிசெலுத்துநர்கள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் பங்குபற்றி பயன்பெற முடியும். ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் பங்குபெற விரும்புபவர்கள் முன்கூட்டியே தங்கள் பதிவினை மேற்கொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அலுவலகம்:- 021 221 7333
அ.பிரணவபவா:- 076 149 2810
க.பிரதீஸ்வரன்:- 077 923 5685

ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
இல. 711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (இ)

### கல்யாணமாலை

#### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 4ஆம் பாதம்<br>கி.பா: 181/4 உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:சாரதி (விவசாய அமைச்சு<br>(G.C.E(A/L)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/9989 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'1"<br>தொழில்/தகைமை:அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/10041 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 46<br>உயரம்:-5'9"<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் (mech.Engineer)<br>தொ.இ: B/9990 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி பாதம் 1<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தொழில்/தகைமை:Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது அவுஸ்திரேலிய குடியுரிமை விரும்பத்தக்கது<br>தொ.இ: G/10044 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1 ஆம் பாதம்<br>கி.பா: 72 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மேசன் கென்றாக்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/9992 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2 ஆம் பாதம்<br>உயரம்: 5'7"<br>கி.பா: 33 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: டாக்டர்<br>எதிர்பார்ப்பு: டாக்டர்<br>தொ.இ: G/10045 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டைபாதம் 4<br>கி.பா: செவ்.1 இல் உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:M.B.B.S Doctor<br>எதிர்பார்ப்பு: profeesional qualified<br>தொ.இ: B/9994 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4 ஆம் பாதம்<br>கி.பா: 32 1/21 இல் செவ்<br>உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: கணித ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் வெளிநாடு அல்லது தனியார் துறை<br>தொ.இ: G/10048 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



**கேட்க வாருங்கள் (02.09.2019)**
கண்ணைக் கொத்திய காக்காப் பிள்ளையாரே!
இன்னும் இன்னும் தாமதம் ஏனப்பா—ஈசுர விநாயகரே!

- அரசியற் போராட்டம்
- ஆயுதப் போராட்டம்
- ஆன்மீகப் போராட்டம்

எமது நாட்டுப் பிரச்சினை சம்பந்தமான ஆன்மீகப் போராட்ட மனுவின் (இறை விண்ணப்பம்) (08.11.1991) முக்கிய கோரிக்கைகளாவன:
1.கொழும்பு அரசியல் சூறாவளி
2.இடைக்கால அரசியல் சமாதானத் தீர்வு
3.இடம்பெயர்ந்து அலைந்து திரியும் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

பறாளாய், சுழிபுரம்.

**பாற்குடம் ஏந்தி கேட்க வாருங்கள்**
**ஆன்மீகப் போராட்ட 28ம் வருட பாலாபிஷேக விசேஷ பூசை வழிபாடுகள்**

கோரிக்கைகள் நிறைவேறிடவே பாலபிஷேகம் செய்திடுவோம்
காலம் :- 02.09.2019 திங்கள் விநாயகர் சதுர்த்தியன்று
பாலாபிஷேக நேரம் :- மு.ப. 9.00 மணி - மு.ப 11.00 மணிவரை

**விசேஷ சதுர்த்திப் பூசை**

பி.ப 3.00 மணியளவில் ஆரம்பமாகி அபிஷேகங்கள் விசேஷ பூசை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.
பி.ப 6.00 மணியளவில் விநாயகர் தீர்த்த வாரி சங்கமம்.
சோழியூரான்—பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும்) (மனுதாரர்) (033)



# யாழில் ஓ.எம்.பி. அலுவலகம் முன் கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)


சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று முன்தினம் காணாமல் போனார் பற்றிய யாழ்.பிராந்திய அலுவலக (ஓ.எம்.பி) முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐ.நா. சபையின் பிராந்திய அலுவலகத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளருக்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை ஒப்படைத்தனர். (இ-9)



## போர்க் குற்றச்சாட்டுக்குள்ளான

# சவேந்திர தலைமையில் பாதுகாப்புக்கருத்தரங்கு அமெரிக்க, ஐரோ.இராஜந்திரிகள் புறக்கணிப்பு



(கொழும்பு)

இராணுவத்தின் ஏற்பாட்டில் நடந்த கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கை, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள் புறக்கணித்தனர்.

இலங்கை இராணுவத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கு- 2019 பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமானது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்புரை நிகழ்த்த, பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொட சிறப்புரையாற்றினார்.

இதையடுத்து, பல்வேறு நாடுகளில் இருந்து வந்த நிபுணர்களும், உள்நாட்டு வளவாளர்களும் உரையாற்றினர்.

இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் 42 நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 800 பேர் பங்கேற்றதாக இராணுவம் தெரிவித்தது.

எனினும், ஆரம்ப நிகழ்வில் அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகள், பாதுகாப்பு ஆலோசகர்கள் கலந்து கொள்ளவில்லை.

புதிய இராணுவத் தளபதியாக - போர்க்குற்றச்சாட்டுக்குள்ளாகியிருக்கும், லெப். ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளதற்கு ‘அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையிலேயே புதிய இராணுவத் தளபதியின் தலைமையில் நடக்கும் இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகளும், பாதுகாப்பு ஆலோசகர்களும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பலாலியிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு சேவையில் ஈடுபட பிட்ஸ் எயார் தயார்

(கொழும்பு)

கொழும்பு-இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து, இலங்கையின் தனியார் துறை விமான நிறுவனமான பிட்ஸ் எயார் (FITS AIR) நிறுவனம், முதலாவது வெளிநாட்டு பயணிகள் விமான சேவையை ஆரம்பித்தது.

இரத்மலானையில் இருந்து இந்தியாவின் விசாகப்பட்டினம் விமான நிலையத்துக்கான இந்த விமான சேவை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பலாலி, மட்டக்களப்பு விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததும், இங்கிருந்து பயணிகள் விமான சேவைகளை ஆரம்பிக்கவும், பிட்ஸ் எயார் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் இரத்மலானையிலிருந்து புறப்பட்ட, பிட்ஸ் எயார் நிறுவனத்தின் 70 ஆசனங்களைக் கொண்ட ATR 72 விமானம், காலை 9.10 மணியளவில் விசாகப்பட்டினத்தை சென்றடைந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்த அணி சார்பில் டில்ஷான் களமிறக்கம்



(கொழும்பு)

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், துடுப்பாட்ட வீரருமான திலகரத்ன டில்ஷான் அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடவுள்ளார்.

டில்ஷான், எதிர்வரும் பொதுத் தேர்தலில் களுத்துறை அல்லது காலி மாவட்டத்தில் போட்டியிடலாம் எனக் கூறப்படுகிறது.

டில்ஷான் சில மாதங்களுக்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 30 பாடகர்களின் இணைவில் உருவான பாடல்

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் தமிழ் கலைஞர்களுக்காக முதன்முறையாக வரலாற்று பாதையில்தடம் பதிக்கும் சரித்திர பாராட்டு விழா நாளை 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்தப் பாராட்டு விழா நடத்தப்படவுள்ளது.

கொழும்பு - நெலும் பொக்குண (தாமரைத் தடாகம்) அரங்கில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான பல்வேறு துறைசார்ந்த தமிழ் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளதுடன் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

குறித்த விசேட நிகழ்வுக்காக கருப்பாடலும் (Theme Song) உருவாக்கப்பட்டுள்ளதுடன், இப்பாடலை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 30 பாடகர்கள் இணைந்து பாடியுள்ள நிலையில், இலங்கையின் பிரபல இசையமைப்பாளர் சுருதி பிரபா இசையமைத்துள்ளார். (இ-7)



# நல்லிணக்க வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் ஜனாதிபதியைப் பாராட்டிய பேராயர் ஜஸ்ரின்




(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்த கன்டபெரி பேராயர் அதி வண. ஜஸ்டின் வெல்பெ ஆண்டகை நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்ததுடன், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பாராட்டினார்.


மிகுந்த மரியாதையுடன் பேராயரை வரவேற்ற ஜனாதிபதி, இலங்கை விஜயம் நாட்டுக்கு ஆசீர்வாதமாகுமென குறிப்பிட்டதோடு, அவரது வருகைக்கு தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பேராயருடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், நாட்டின் அனைத்து மதத்தினரிடையேயும் பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வைக் கட்டியெழுப்பி அனைத்து மதத்தினரின் வரப்பிரசாதங்களையும் உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பாராட்டினார்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து அதி வண. ஜஸ்டின் வெல்பெ ஆண்டகை ஜனாதிபதிக்கு ஆசீர்வாதம் வழங்கியதுடன், இந்நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் நினைவுப் பரிசில்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. (இ-7)

# வைக்கோல் புகையால் விபத்து

## ஒருவர் படுகாயம்





(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பெரியகுள வீதியில் வைக்கோலை தீயிட்டுக் கொளுத்தியதால் ஏற்பட்ட புகையால் எதிரே வந்த வாகனத்தை கவனிக்க முடியாது சாரதிகள் விபத்தில் சிக்கினர்.


இந்த விபத்துச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புளியம்பொக்கணைப் பகுதியில் இருந்து வட்டக்கச்சி நோக்கி தேங்காய் ஏற்றிவந்த பட்டா ரக வாகனம் வட்டக்கச்சியில் இருந்து புளியம்பொக்கணை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

# காரைதீவு மீனவருக்கு அதிர்ஷ்டம்





(காரைதீவு)

மட்டு.காரைதீவில் நேற்று மீனவர்களுக்கு பல இலட்சக் கணக்கான பாரைக்குட்டி மீன்கள் பிடிபட்டுள்ளன.

இதன்போது, அப்பகுதியைச் சேர்ந்த நமசிவாயம் என்ற மீனவரொருவருக்கு 10 ஆயிரம் கிலோ கிராம் பாரைக்குட்டி மீன்கள் பிடிபட்டன.

அண்மைக்காலமாக ஒரு கிலோ கிராம் மீன் 350 ரூபாவிற்கு விற்கப்பட்டு வந்த நிலையில் நேற்று கடலோரத்தில் மீன் இலவசமாக வழங்கப்பட்டதுடன் ஊருக்குள் மீன் விற்பனை செய்பவர்கள் ஒரு கிலோ கிராம் மீன் 150 ரூபாவுக்கு விற்பனை செய்தனர்.

இதன் காரணமாக கடற்கரையை நோக்கி பெருமளவான பொதுமக்கள் விரைந்ததுடன் மீன் கொள்வனவில் ஈடுபட்டனர்.

மேலும், வலையில் இருந்து தவறிய மீன்களை மாத்திரம் எடுத்து ஒரு இலட்சம் ரூபாவுக்கும் மேல் பொதுமகன் ஒருவர் விற்பனை செய்துள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் நீண்ட நாட்களுக்குப் பிறகு இவ்வாறு மீன்கள் அகப்பட்டுள்ளதால் அப்பகுதி மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (இ-7)

# ரணில் பதவி விலக வேண்டும் சட்டத்தரணிகள் போர்க்கொடி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து ரணில் விக்கிரமசிங்க உடன் விலகி விட்டு, அடுத்த கட்டத்திலுள்ள கட்சி உறுப்பினர்களுக்கு கட்சித் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும் என ஐக்கிய சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியது.

நீண்ட காலம் கட்சித் தலைமைத்துவத்திலுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவொரு தேர்தலையும் வெற்றிகொள்ளும் வாய்ப்பு காணப்படாதுள்ளதாகவும் வெற்றிபெறக் கூடிய ஒரு தலைவருக்கு கட்சி தலைமையை ஒப்படைக்குமாறும் அச்சங்கம் வலியுறுத்தியது.

ரணில் விக்கிரமசிங்கவின் காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான வாக்கு வங்கி பாரியளவில் வீழ்ச்சியடைந்ததாகவும் அவர் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அச்சங்கம் போர்க்கொடி தூக்கியது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அச்சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சஜித்தை வேட்பாளராக நிறுத்தும்வரை ஆதரவுக்கூட்டங்களை நிறுத்தமாட்டோம்

## அசோக அபேசிங்க திடம்



(கொழும்பு)

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் வரையில் அவருக்கான ஆதரவுக் கூட்டங்களை நிறுத்தமாட்டோம் என இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கட்சியிலுள்ள சிலருக்கு சஜித்துக்குள்ள ஆதரவை விளங்க வைக்கவே, இந்த ஆதரவுக் கூட்டங்களை நடத்துகின்றோம் எனவும் தெரிவித்த அசோக அபேசிங்க, எதிர்வரும் 6 ஆம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ள சஜித் ஆதரவுக் கூட்டத்துக்கு எந்தத் தடை வந்தாலும் நடத்தியே தீருவோம் எனவும் தெரிவித்தார்.

கட்சிக்கு அவப்பெயர் வரும் வகையில் அறிவிப்புக்களை விடுக்காதிருக்கவும் கட்சியின் அனுமதியின்றி கூட்டங்களை நடத்தாதிருக்கவும் வேண்டும் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் கட்சி உறுப்பினர்களிடம் நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்புக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தமிழகத்தில் கரையொதுங்கிய இலங்கைப்படகு!

## தீவிரவாதிகளின் ஊடுருவலா?

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் அருகே மன்னார் வளைகுடா மனோலி தீவில் கரையொதுங்கிய படகின் மூலம் மர்ம நபர்கள் ஊருடுவினார்களா? என்பது குறித்து தமிழக பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழக ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அந்தச் செய்தியில், "மண்டபம் மரைன் பொலிஸார் மற்றும் மண்டபம் வனச்சரக அலுவலர் தீவுகளில் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மனோலி தீவில் 22 அடி நீளமான இலங்கை பைவர் கிளாஸ் படகு ஒன்று கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

குறித்த படகை மீட்ட மரைன் பொலிஸார் சுங்கத் துறையிடம் ஒப்படைத்தனர். இப்படகில் 4 பேர் வந்திருக்கக் கூடும் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டது.

அவர்கள் படகில் இருந்த இயந்திரம் மற்றும் டீசல் கானுடன் வேறு ஒரு படகில் மண்டபம் கரையில் இறங்கித் தப்பித்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டது.

சில நாட்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து பாகிஸ்தான் பயங்கரவாதிகள் உள்ளிட்ட 6 பேர் தமிழகத்திற்குள் ஊடுருவியதாக தகவல் வந்தது.

இந்நிலையில், தற்போது மண்டபத்தில் ஊடுருவியவர்களைக் கண்டுபிடிக்க மத்திய மாநில உளவுத்துறை பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக" அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்களிடம் கல்வித் தகைமையை எதிர்பார்க்க முடியாது

## நகர சபை உறுப்பினர் கஜிதன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் போது கல்வித் தகைமையை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமாகிய க.கஜிதன் தெரிவித்தார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

சாவகச்சேரி நகரசபையில் தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்களாக கடமையாற்றி வருபவர்களது பதவியை நிரந்தரமாக்கும் போது அவர்களிடம் கல்வித் தகைமையை எதிர்பார்ப்பது தவறு. சுகாதாரத்தொழிலாளர்கள்வெயில் மழை பாராது நகரை சுத்தப்படுத்த வேலை செய்கின்றனர். அவர்களிடம் முழுமையான கல்வித் தகைமை பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

சுகாதாரத் தொழிலாளர்கள் எவரும் பாதிக்காத வகையில் நியமனம் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் மூன்று வருடங்களுக்கு மேலாக தற்காலிக சுகாதாரத் தொழிலாளர்களாக பணியாற்றி வருபவர்களை நிரந்தர நியமனம் வழங்கும் போது அவர்களுக்கு க.பொ.த சாதாரண தர கல்வித் தகைமை தேவை இல்லை. எட்டாம் தரமே போதும் என சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் தற்போது க.பொ.த சாதாரண தரம் வரைப் பயின்ற எவரும் சுகாதாரத் தொழிலாளியாக கடமையாற்ற முன்வர மாட்டார்கள்.

அவர்களுக்கு உயர் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிக் கொடுப்பனவுகளுடன் பல்வேறு தொழில் பயிற்சி நெறிகள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையினர் சுகாதாரத் தொழிலாளர்கள் விடயத்தில் ஒருசில சலுகைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# எப்.பி.ஐ. மற்றும் புலனாய்வு நிறுவனங்கள் உரிய அங்கீகாரத்துடனேயே இலங்கை வருகை

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் எப்.பி.ஐ. உள்ளிட்ட ஏனைய புலனாய்வு நிறுவனங்கள் உரிய அங்கீகாரத்துடனேயே இலங்கைக்கு வருகை தந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே இந்த நிறுவனங்களின் அதிகாரிகள் இலங்கைக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

விசாரணைகளின் போது தடய மாதிரிகளை அவர்கள் பெற்றிருந்தால் அது சட்டரீதியான முறைகளுக்கு அமைவாகவே பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவே தடய மாதிரிகள் எப்.பி.ஐ. அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

இதனால், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்கு எந்தத் தடையும் ஏற்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், ருவான் குணசேகர மேலும் தெரிவித்தார்.



இலங்கை உள்விவகாரத்தில் அமெரிக்காவின் தேவையற்ற தலையீடு தொடர்பாக கூட்டு எதிரணி எம்.பிக்கள் தொடர்ந்து குற்றம் சாட்டிவரும் நிலையில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மகன் தாக்கி தந்தை பலி!

(புத்தளம்)

வீட்டில் ஏற்பட்ட தகராறில் மகன் தாக்கியதில் 54 வயது தந்தை உயிரிழந்ததாக புத்தளம். பள்ளம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. ஆடிகாமம் பெரியமடு பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீரியாகம கங்கானம்லாகே தர்மசிறி என்பவரே இச்சம்பவத்தில் பலியாகினார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக அவரது 31 வயது மகனை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரான மகன் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் திருமணம் செய்து கொண்டதுடன் அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தந்தைக்கும் மகனுக்கு வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது கோபமடைந்த மகன் தந்தையை கொடூரமாக தாக்கினார். தாக்குதலில் கீழே விழுந்த தந்தை அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்தது. (இ-7)

## ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல் நிவாரண அறிக்கை அரசிடம் கையளிப்பு

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு துன்புறுத்தல்களை அனுபவித்த ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்க நியமிக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை கையளித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கையை, அதன் தலைவர் திலகா ஜெயசுந்தர, ஊடக அமைச்சின் செயலாளர் சுனில் சமரவீரவிடம் நேற்று முன்தினம் கையளித்தார். (இ-7)

## குண்டுதாரியின் உடற்பாகங்களை தோண்டியெடுக்க மன்று உத்தரவு ஹர்த்தால் கைவிடப்பட்டது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - கள்ளியங்காடு இந்து மயானத்தில் தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்கள் புதைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ் உணர்வாளர் அமைப்பால் மட்டக்களப்பில் நாளை முன்னெடுக்கத் தீர்மானித்திருந்த ஹர்த்தால் கைவிடப்பட்டது.


ஹர்த்தால் கைவிடப்பட்டமை குறித்து தமிழ் உணர்வாளர் அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

மட்டக்களப்பு அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க சட்டமா அதிபரால் தொடுக்கப்பட்ட வழக்கில், குறித்த பயங்கரவாதியின் உடற்பாகங்களை கள்ளியங்காடு இந்து மயானத்திலிருந்து அகற்றுவதற்கு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை கோரியிருந்த அரச அதிபர் மா.உதயகுமாரின் கோரிக்கைக்கு அமைய மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் அரச சட்டத்தரணி யாதவன், நடைபெற்ற போராட்டங்களையும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள ஹர்த்தால் போராட்டத்தையும் காரணம் காட்டி உடற்பாகங்களை அகற்றக் கோரி வாதிட்டார்.

இவ் வழக்கை விசாரித்த மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த உடற் பாகங்களை அரச சட்ட வைத்தியரின் உதவியுடன் அகற்றி பொருத்தமான இடத்தை கண்டறியும் வரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

## பலத்த காற்றால் பல வீடுகளுக்குச் சேதம்



(புத்தளம்)

புத்தளம் - ஆனமடுவ - ஆடியாகம பகுதி ஊடாக வீசிய பலத்த காற்றால் பல வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டது. நேற்று அதிகாலை இவ்வாறு பலத்த காற்று வீசியது.

இதனால் ஏழு வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டதோடு, குழந்தையொன்றும் காயமடைந்து ஆனமடுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. பலத்த காற்றால் பல மரங்களும் முறிந்து விழுந்த நிலையில், அவற்றை அகற்றுவதற் காக இராணுவத்தினரின் உதவி பெறப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 100 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 150 | 140 | 200 |
| தக்காளி | 150 | 150 | 140 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 110 | 100 |
| கோவா | 60 | 80 | 80 | 50 | 80 |
| கரட் | 80 | 120 | 150 | 90 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 60 |
| புடோல் | 100 | 80 | 80 | 50 | 80 |
| வாழைக்காய் | 140 | 120 | 160 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 | 100-120 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 130 | 140 | 115 | 140 |
| பாகற்காய் | 140 | 160 | 160 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 60 | 100 |
| பயற்றங்காய் | 150 | 140 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 90 | 70 | 80 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 180 | 140 | 140 | 170 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 90 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 220 | 250 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 80 | 40 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 200 | 350 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 120 | 200 | — | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 25 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 60 | 130 | 60 |

## வேட்பாளர் தெரிவில் ஐ.தே.மு.விற்குள் வேறுபட்ட நிலைப்பாடுகளே தவிர முரண்பாடுகள் எதுவும் இல்லையாம்!

## ராஜகருணா புது விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதில் ஐக்கிய தேசிய முன்னணிக்குள் எந்த முரண்பாடும் கிடையாது. வேறுபட்ட நிலைப்பாடுகளே உள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சபாநாயகர் கருஜெயசூரிய ஆகியோரில் யாரை வேட்பாளராகத் தெரிவு



செய்தாலும் அவரை வெற்றிபெறச் செய்வோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கடற்படையினரின் தாக்குதலில் நான்கு மீனவர்கள் படுகாயம்!

(புல்மோட்டை)

திருகோணமலை- புல்மோட்டை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் நான்கு பேர் கடற்படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் புல்மோட்டை - நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த அப்துல் ஹமீத் நிஜாமுதீன் (வயது-49), முகம்மது அனிபா முகமது அலியாஸ் (வயது-25), சகீர் முகம்மது சமீர் (வயது-19) மற்றும் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் முஹம்மது இம்ரான் (வயது-20) எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புல்மோட்டை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது குறித்த மீனவர்களைத் துரத்திக் கொண்டு சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வேளை ஒருவருக்குக் காலில் காயம் ஏற்பட்டதாகவும் மற்றவர்கள் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தியதுடன், கடற்படையினரின் உத்தரவை மீறி தப்பியோட முற்பட்டதாகவும் கடற்படையினர் குற்றம் சாட்டினர்.


இதேவேளை கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவரின் தொடைப்பகுதியில் காயம் காணப்படுவதாகவும் அப்பகுதியில் இரும்புத் துண்டொன்று இருப்பதாக எக்ஸ்ரே மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் இவருக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடற்படையினர்,மீனவர்கள் நான்கு பேரையும் கைது செய்து துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், மீனவர்கள் சட்ட விரோதமான மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி கடற்படையினரின் சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாமல் தப்பியோட முயன்றதாகவும் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்தனர்.

இதனையடுத்துத் தாக்குதலுக்குள்ளான சந்தேக நபர்களை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஜனாதிபதித் தேர்தல்

# பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானம்



(ஹற்றன்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அடுத்த வாரம் முதல் பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்தது. ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், குழுவொன்றை நியமித்தது.


மத்திய மாகாண முன்னாள் அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் ஆகியோர் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இந் நிலையில், மலையக மக்களின் முன்னேற்றம் குறித்து பல்வேறு கோரிக்கைகளை, முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் வேட்பாளர்களுடன் கலந்துரையாட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்தது.

இதற்கமைய, தற்போதே சில கட்சிகளிடமிருந்து பேச்சு வார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார். (இ-7)

# ஒழுக்காற்று நடவடிக்கை எனக்கு எதிராக அல்ல

## கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராகவே எடுக்கப்பட வேண்டும் - ரத்ன தேரர்



(கொழும்பு)

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது எனக்கு எதிராக அல்ல மக்கள் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்களுக்கு எதிராகவே என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களான குறித்த தேரருக்கு எதிராகவும், விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி என்பது தனக்கு முக்கியமான ஒன்று அல்லவெனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் எடுக்கப் போகும் தீர்மானங்கள்தான் நாட்டுக்குப் பயனுள்ளதாக இருக்கும் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் தினம் அறிவிப்பு

(எல்பிட்டிய)

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிததார்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலை உடனே நடத்துமாறு, தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியால் எல்பிட்டிய பிரதேச சபையில் முன்வைக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அக்கட்சியின் செயலாளர் தாக்கல் செய்த மனு தொடர்பான தீர்ப்பை அறிவித்த போதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அதனைத் தொடர்ந்தே மகிந்த தேசப்பிரிய இந்த அறிவிப்பை விடுத்தார். (இ-7)

# இலங்கை இராணுவத்தில் 6 புதிய மேஜர் ஜெனரல்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஆறு பிரிகேடியர் தர அதிகாரிகள், மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டனர். இராணுவத் தளபதியின் பரிந்துரைகளுக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பதவி உயர்வை வழங்கினார்.

பிரிகேடியர் டி.ஆர் தர்மசிறி, பிரிகேடியர் ஜே:எம்.யு.டி ஜயசிங்க, பிரிகேடியர் சி.கே. ஹந்துன்முல்ல, பிரிகேடியர் ஏடி எல்வத்த, பிரிகேடியர் சுமித் அத்தபத்து ஆகியோர், 2019 ஜூலை 30 ஆம் திகதியிலிருந்து மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டனர்.

பிரிகேடியர் ஏ.ஐ. மாரசிங்க, 2019 ஒகஸ்ட் 15ஆம் திகதியிலிருந்து தற்காலிக மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார்.

பதவி உயர்த்தப்பட்ட அதிகாரிகளில், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்தவும் உள்ளடங்கியுள்ளார். (இ-7)



நாட்டுக்காக ஒன்றிணைவோம் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கரணவாயில் அண்மையில் சிரமதானம் நடைபெற்றது.
(படம்:- மகாலிங்கம்)

# சிங்கராஜ வன எல்லைக்குள் மணல் அகழ்வதற்கு அனுமதி

## கடும் கண்டனம்

(இரத்தினபுரி)

உலக உரிமைச் சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சிங்கராஜ வன எல்லைக்குள், மணல் அகழ்வதற்காக புவிச்சரிதவியல், கனியவளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளமைக்கு, இரத்தினபுரி மாவட்ட கமத் தொழில் இணைப்புக்குழுக் கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இணைப்புக் குழுக் கூட்டம், நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் அனைவரும் மேற்படி விடயத்துக்கு எதிராகக் கடும் கண்டனத்தை முன்வைத்தனர்.

இரத்தினபுரி இணைப்புக் குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, சிங்கராஜ வனத்தினுள் அல்லது அதன் 500 மீற்றர் எல்லைப் பகுதிக்குள் மணல் அகழ்வதற்குத் தடைவிதிக்கப்பட்டது.

எனினும்,இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம், ஏனைய இணைப்புக் குழுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களையும் மீறி இப்பகுதியில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், இந்நடவடிக்கைக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவில் நிலவும் சலசலப்பு சாதாரணமானதொன்றே-ருவான்



(பியகம)

நெருங்கி வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் நெருக்கடி நிலைமை சாதாரணமான ஒன்று என இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

எந்தவொரு தேர்தலுக்கு முன்னரும் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்படுவது இயல்பான தொன்றே. இது ஒரு பெரிய விடயமல்ல எனவும் ருவான் தெரிவித்தார். பியகம பகுதியில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

# குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

(அக்கராயன்)

சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்குப் பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரர்களும் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

சிங்கள மொழி/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல் மற்றும் 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.

நிகழ்நிலை விண்ணப்பங்களை நேற்று முன்தினம் 30 ஆம் திகதியிலிருந்து 20.09.2019 வரை சுகாதார அமைச்சின் www.health.gov.lk இணைய முகவரியூடாகச் சமர்ப்பிக்கலாம்.

இணைய வசதி இல்லாதவர்கள் அல்லது விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அவர்களது பகுதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்புகொண்டு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாய், சேய் நலனைப் பேணுவதில் முக்கிய பங்காற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதால் அப்பகுதிகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் அனைவரையும் இந்த அரிய சந்தர்ப்பத்தினைத் தவறவிடாது பயன்படுத்துமாறு சமூக நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 5 ஆம் வட்டாரம் இரணைப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சுவாக்கின்பிள்ளை செபாஸ்ரியாம்பிள்ளையின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மீன்பிடி தொழிலுக்கான பைவர் வள்ளம் ஒன்றினை தந்துதவுமாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தினால் வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நேற்று முன்தினம் புதுமாத்தளன் கடற்கரையில் வைத்து வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் 75,000 ரூபா பெறுமதியான பைவர் வள்ளம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

# பூநகரியில் உள்ள குளங்கள்

## சீரான முறையில் புனரமைக்கப்படவில்லை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரு குளங்களான கரியாலைநாகபடுவான் குளம், குடமுருட்டிக் குளம் ஆகியவற்றில் கடந்த பத்தாண்டுகளில் நிறைவான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என இக்குளங்களின் கீழான விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கரியாலைநாகபடுவான் குளத்திற்கான நீர் வரவினை அதிகரிக்க வேண்டும். ஏனெனில் இக்குளத்திற்கு நீர் வரவு குறைவாகக் காணப்படுகின்றது. மழை காலங்களில் குளத்திற்கு நீர் வராமல் வேறு திசைகளில் நீர் சென்றடைவதாகவும் இதற்கான வேலைத் திட்டங்களை கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இதேபோன்று குடமுருட்டிக் குளத்திலும் வேலைத் திட்டங்கள் இடம்பெறவில்லை. குளத்தின் அணைக்கட்டு பல இடங்களில் துவாரங்கள் ஏற்படும் போதெல்லாம் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் மண் மூடைகள் அடுக்கப்பட்டு அணைகட்டிப் பாதுகாக்கப்படும்.

இந்நிலையில் இரு குளங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் மாவட்டத்தின் விவசாய முயற்சிகளை சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

வன்னேரிக்குளம், தேவன் குளம், கரியாலைநாகபடுவான் குளம் என்பவற்றினை இணைத்து அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும். அதேபோன்று குடமுருட்டிக் குளத்தின் அணைக்கட்டினைப் புனரமைத்து நீர்ப்பாசன வாய்க்கால்களை புனரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன? உண்மை தெரியும் வரை போராட்டம் தொடரும்

## மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் உறுதி

(மன்னார்)

காணாமல் போன உறவுகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியப்படுத்தப்படும் வரை கேட்டுக்கொண்டே இருப்போம் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் விக்டர்சோசை தெரிவித்துள்ளார்.



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கான விசேட நிகழ்வு மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நேற்று அல்ல பல வருடங்களாகவே நாங்கள் எங்கள் உறவுகளை தேடுகின்றோம். ஒரு சில நிகழ்வுகளை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். 2009-2010 ஆம் ஆண்டுகளில் எமது முன்னை நாள் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையின் நல்ல முயற்சிகளையும் அந்த நேரத்தில் பல மக்கள் எங்கள் கண் முன்னால் நாங்கள் தான் எமது உறவுகளை கொடுத்தோம் என அழுது மன்றாடினார்கள். எமது மாவட்டத்தில் இவர்களை யார் கொண்டு சென்றார்கள். இவர்களுக்கு யார் பொறுப்பு என எல்லோருக்கும் தெரியும்.


இன்றுவரை நாம் தேடுகின்றோம். அது மட்டும் அல்ல பலர் பல இடங்களுக்குச் சென்று அங்கு இருக்கின்றார்கள், இங்கு இருக்கின்றார்கள் என்று கூறி எமது மக்களை பல்வேறு கோணங்களில் திசை திருப்பி சென்றுள்ளனர். ஆனால் எதற்கும் பதில் வரவில்லை. ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் காலத்தில் அவர் இப் பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு சென்று எமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு முடிவு வேண்டும். அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்றாவது சொல்லுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். அவர்களை ஒரு கணமாவது நாங்கள் பார்க்க வேண்டும். அவர்கள் இருக்கின்றார்களா? என்பதுதான் எங்கள் கேள்வி. எங்களுக்கு எத்தனை ,வசதிகளை அவர்கள் செய்து தந்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்த 10 வருடங்களில் அவர்கள் பல்வேறு ஆணைக்குழுக்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் எந்த, ஆணைக்குழுவும் எங்களுக்கு உருப்படியான பதிலை வழங்கவில்லை.

பல ஆணைக்குழு முன் நாங்கள் முன்னிலை ஆகி எங்கள் கோரிக்கைகளை முன்வைத்தோம். ஐ.நா. வரை தமிழர்களுடைய மனசாட்சி தட்டியுள்ளது. ஆனால் இன்னும் அது கேட்கப்படவில்லை. வருகின்ற செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வு உள்ளது. அங்கே நம் தமிழர்களின் குரல் கேட்கும். ஆனால் நிறையக் கதைப்பார்கள். அரசாங்கத்திடம் நிறையக் கதைப்பதாக, அரசாங்கத்திற்கு எச்சரிக்கைவிடுப்பதாக, கேள்விகள் கேட்பதாக தெரிவிக்கப்படும். ஆனால் அதற்கு உருப்படியான பதில்களைத் தருவார்களா? என்பது உலக மனசாட்சியை நாம் தட்டிக் கொண்டே இருப்பதில் தான் உள்ளது.

எனவே எமது பிள்ளைகள், எமது உறவினர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்ற தீர்வை சொல்லும் வரை கேட்டுக்கொண்டே இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# அங்கஜன் எம்.பியால் அமைக்கப்பட்ட நூலகம் ஒரு வருடமாக திறக்கப்படவில்லை



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தினை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை கரைச்சி பிரதேச சபை மேற்கொள்ளவில்லை என வன்னேரிக்குளம் வட்டார மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த கட்டடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நிதிப் பங்களிப்பில் உருவாக்கப்பட்டு கட்டட வேலைகள் நிறைவடைந்து ஓராண்டுகள் கடந்த நிலையிலும் குறித்த நூலகக் கட்டடத்தினை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை கரைச்சி பிரதேச சபை மேற்கொள்ளவில்லை.

ஏற்கனவே வன்னேரிக்குளம் வட்டாரத்தில் கரைச்சி பிரதேச சபையினர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்ற குறைபாட்டை இவ்வட்டார மக்கள் தெரிவித்து வரும் நிலையில் நூலகக் கட்டடத்தினை திறந்து வைப்பதிலும் கரைச்சி பிரதேச சபை இழுத்தடிப்புகளை மேற்கொள்வதாகவும் குறித்த கட்டடத்தினை திறந்து வைப்பதற்கு கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னேரிக்குளம் வட்டார மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-350)






வவுனியா பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சி.சுபாஷினி வவுனியா பிரதேச செயலாளர் ஊடாக வெளிச்சம் அறக்கட்டளைக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கடந்த செவ்வாய்க்கிழமை பிரான்சில் தமது 9 ஆவது திருமண நாளைக் கொண்டாடிய கேசவன் நிஜாயினி தம்பதியர் வறுமைக்கோட்டுக்குட்பட்ட இரு மாணவிகளுக்கு துவிச்சக்கரவண்டிகளும் அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களும் வெளிச்சம் அறக்கட்டளையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

வாய்ப்புகள் அமையாது.நாம்தான் அமைத்துக் கொள்ள வேண்டும்.

– சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அவர்களைச் சாட்டி இவரும் இவரைச் சாட்டி அவர்களும்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் (30) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணத்தில் நடந்த பொது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அதில் தமிழ் மக்களை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஏமாற்றிவிட்டது எனப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் தமிழ் மக்கள் அதீத கவனம் செலுத்துவர் என்பது உண்மை.

அதேநேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தமிழ் மக்களின் விடயத்தில் கருசனை கொண்டிருக்கவில்லை என்ற மனக்கிலேசம் இருக்கவே செய்கிறது.

அரசியல்கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கவில்லை.

அதிலும் குறிப்பாக ஆனந்தசுதாகரன் என்ற தமிழ் அரசியல் கைதியின் பிள்ளைகள் தங்கள் தாயை இழந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து எங்கள் அப்பாவை விடுதலை செய்யுங்கள் எனக் கெஞ்சினர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரி உங்கள் அப்பாவை விடுதலை செய்வேன் என உறுதிமொழி அளித்தார்.

எனினும் அந்த உறுதிமொழி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஆக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தனது அதிகாரக் குறைப்பால் எதனையும் செய்ய முடியவில்லை என்று கூறிவிட முடியாது.

மாறாக தனது அதிகாரத்துக்குட்பட்ட சில விடயங்களையேனும் தமிழ் மக்களுக்குச் செய்திருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என ஜனாதிபதி மைத்திரி கூறுவதிலும் நிறைந்த உண்மை உண்டு.

அதாவது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் இதுவரை தப்பிப் பிழைத்து நிற்கிறது என்றால், அதற்கு மூலகாரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அவ்வாறு தமக்குப் பக்கபலமாக நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக, தமிழ் மக்களுக்கு நன்மை செய்யாமல் கூட்டமைப்பை தனிப்பட்ட முறையில் கவனித்தல் என்ற மிக மோசமான செயற்பாடு கையாளப்பட்டது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது.

உண்மையில் இத்தகைய செயற்பாடுகள் ஊழல் அற்ற, நேர்மையான ஆட்சிக்குப் பெரும் பங்கமாகும். ஊழலை ஒழிக்க வேண்டியது அரசாங்கத்தின் தார்மீகக் கடமை.

ஆனால் அந்தத் தார்மீகக் கடமையில் இருந்து தவறுகின்றதான நடவடிக்கைகள் இடம்பெற்றன எனும்போது, அது தமிழினத்துக்குச் செய்யப்பட்ட கடும் துரோகத்தனம் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

தவிர, தமிழர் தாயகத்தில் நடக்கின்ற அத்தனை பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோல அரசாங்கம் நடந்து கொள்கிறது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்வதுபோல அரசாங்கம் பற்றி எந்த விமர்சிப்பும் இல்லாமல் மௌனம் காக்கிறது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் அரசாங்கமும் ஜனாதிபதியும் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டனர் என்பதே உண்மை.

இந்த உண்மையை மறைப்புச் செய்ய ஜனாதிபதி அரசாங்கத்தையும் அரசாங்கம் ஜனாதிபதியையும் மாறிமாறிக் குற்றம் சுமத்தி தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர் என்பதே நிஜம்.

# 215 டிப்ளோமாதாரர்கள் ஆசிரியர்களாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் 215 டிப்ளோமாதாரர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆளுநர் சுரேன் ராகவன் உரையாற்றுகையில், ஆரம்பகால கல்வி என்பது மிகவும் முக்கியமானது. விழுந்திருக்கின்ற இந்த தேசத்தின், விளிம்பிலே இருக்கின்ற மக்களை திரும்பவும் வாழ வைப்பதற்காகவும், வருகின்ற சந்ததியின் ஆரம்பக்கல்வியை உங்கள் கைகளில் இந்த மாகாணம் இன்றுகொடுக்கின்றது. எனவே இந்த பொறுப்பை இறை பக்தியுடனும் சமுதாய நோக்கத்துடனும் செய்து இந்த தேசத்தை திருப்பவும் கட்டியெழுப்பும் பணியை செவ்வனே செய்ய வேண்டும் என்பது தான் எனது வேண்டுகோள் என்று இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் 148 ஆரம்பக்கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கான நியமனமும் 67 உடற்கல்வி டிப்ளோமாதாரர் ஆசிரியர்களுக்கான நியமனமும் ஆளுநர் அவர்களினால் வழங்கப்பட்டன.

(ம-3)

# பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு பத்து வருட சிறைத்தண்டனை

## கல்வி அமைச்சின் செயலாளர் மாயாதுன்னே

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களை சித்திரவதைக்குள்ளாக்குவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம். ரி.கே.மாயாதுன்னே இதனைத் தெரிவித்துள்ளார்.

2018 - 2019 கல்வி ஆண்டிற்காக பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சித்திரவதைக்கு உட்படுத்தும் அல்லது அவ்வாறான செயற்பாட்டுடன் தொடர்புபடும் மாணவர்களையும் இந்த செயற்பாட்டிற்கு ஒத்தாசை வழங்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் யாராக இருப்பினும் அவர்களையும் உயர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொடூர பகிடிவதையில் ஈடுபடுபவர்களுக்கு 10 வருட சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒத்துழைப்புகளை பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் மா அதிபர் வழங்குவதாகத் தெரிவித்துள்ளதாகவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம். ரி.கே. மாயாதுன்னே கூறியுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகள் காரணமாக வருடாந்தம் 2000 மாணவர்கள் பல்கலைக் கழகங்களை விட்டு விலகிச் செல்வதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

# உயர்தரப் பிரிவு வகுப்புக்கள் 16 ஆம் திகதியே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி நடைபெறுவதால் பாடசாலையின் உயர்தரப் பிரிவுகள் அனைத்தும் 16.09.2019 திகதியே ஆரம்பமாகும்.

ஏனைய வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங் கட்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் வல்லை, உடுப்பிட்டி, பொக்கணை, தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, வளலாய், **Suganth International** காக்கைதீவு, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியன், கீவில் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளம், கமலாம்பிகை அரிசி ஆலை, முதலைக்குத்தி, வட்டுப் பித்தன்மடு, புதுகாமம், நொச்சிக்குளம், கள்ளிக்கட்டைகாடு, செம்மண்தீவிலிருந்து நானாட்டான் வரை, அளவக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மண்தீவு **Ware House**, நறுவிலிக் குளம், வங்காலை, தோம ஸ்புரி, வங்காலைகடற்படைமுகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# கொக்குவில் இந்துக்கல்லூரியின் உ/த மாணவர்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் வடக்கு வளாகத்தில் க.பொ.த (உ/த-2019) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி நடைபெறுவதன் காரணமாக க.பொ.த (உ/த-2020, 2021) சகல துறைகளையும் சேர்ந்த மாண வர்களுக்கான கல்லூரிச் செயற்பாடுகள் எதிர்வரும் 16/09/2019 திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதனையும், தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரைக்குமான வகுப்புக்களுக்கான மூன்றாம் தவணைக்கல்விச் செயற்பாடுகள் திட்டமிட்டவாறு 2/7/2019 ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(ம-3)

# ஆத்திசூடிப் பிள்ளையாருக்கு நாளை சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ஒருவருக்கும் உதவி செய்யவில்லைஎன்றால் சேவை செய்யலாம். அதன் மூலம் ஆண்டவனுக்கு தொண்டு செய்தவனாகிறாய்.
- நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதுமாகும்.
- அறிவாற்றலைப் பயன்படுத்தாமல், கண்மூடித்தனமாக கடவுளை நம்புகிறவனை விட, தன்னுடைய பகுத்தறிவை பயன்படுத்தி கடவுளை நம்பாமலிருக்கும் ஒருவனுக்கு மன்னிப்பு கிடைத்து விடும்.
- வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் தேவை. இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருக்க வேண்டும்.
- மக்களுக்கு அவர்களுடைய தெய்வீகத்தன்மையை போதிப்பதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்துவது என்று சுட்டிக் காட்டுவதுமே நமது லட்சியமாக இருக்க வேண்டும்.
- நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் தான் உலகம் சிறப்பும் தூய்மையும் பெறும். அதற்காக நம்மை நாம் முதலில் தூய்மைப்படுத்திக் கொள்வதுடன், பரிபூரணமாக்கிக் கொள்ள வேண்டும்.

# மகத்தான சாதனைக்கு காத்திருக்கும் ஹோலி



இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் ஹோலி, புதிய சாதனையொன்றை படைக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்.

இந்தியக் கிரிக்கெட் அணி, தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதல் போட்டி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், அந்த போட்டியில் இந்திய அணி அபார வெற்றிபெற்றது.

இந்த நிலையில் தற்போது, இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்றும் முனைப்பில் உள்ளது.

அவ்வாறுஇந்தடெஸ்ட்தொடரை இந்திய அணி, கைப்பற்றி விட்டால், அதிக டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்ற இந்திய தலைவர் என்ற மகத்தான சாதனையை விராட் ஹோலி பதிவு செய்வார்.

மகேந்திர சிங் டோனி தலைமையில், இந்திய அணி 60 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 27 போட்டிகளில் வெற்றியும், 18 போட்டிகளில் தோல்வியையும் பதிவு செய்துள்ளது. 15 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

இதற்கமைய தற்போது அதிக டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்ற இந்திய தலைவராக டோனி உள்ளார். இந்த சாதனையை முறியடிக்க தற்போது ஹோலி தயாராகவுள்ளார்.

விராட் ஹோலி தலைமையில் இந்திய அணி 47 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 27 போட்டிகளில் வெற்றியையும், 10 போட்டிகளில் தோல்வியையும் பதிவு செய்துள்ளது. 10 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. இந்த சாதனையை விராட் ஹோலி முறியடிப்பாரா? என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். (ஐ)

# தலைமைப் பயிற்சியாளர் பதிவியிலிருந்து ராகுல் நீக்கம்



இந்திய ஏ கிரிக்கெட் அணி மற்றும் 19 வயதுக்குட்பட்டோருக்கான தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து ராகுல் டிராவிட் நீக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான ராகுல் டிராவிட், இந்திய ஏ மற்றும் **U19** அணிகளுக்கான தலைமை பயிற்சியாளராக செயற்பட்டு வந்தார்.

இந்நிலையில் தான் தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவராக டிராவிட் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, இரட்டை பதவிகளில் ஒரே சமயத்தில் வகிக்கக் கூடாது என்று விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், ராகுல் டிராவிட் வகித்து வந்த தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

அவருக்கு பதிலாக இந்தியா ஏ அணியின் பயிற்சியாளராக சிதான்சு கோடக்கும், 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் பயிற்சியாளராக பராஸ் பாம்ரேயும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அடுத்த சில மாதங்களுக்கு பயிற்சியாளர் பதவியில் இருப்பார் என்று கூறப்படுகிறது. பந்துவீச்சு பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரமேஷ் பவாரும், பீல்டிங் பயிற்சியாளராக டி திலிப்பும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**U19** அணிக்கு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள பாம்ரே, ஏற்கனவே டிராவிட்டிடம் இணைந்து பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

தற்போது அவருக்கு துணையாக இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ரிஷிகேஷ் கனிட்கரும், அபேய் ஷர்மாவும் செயற்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓய்வு முடிவைத் திரும்பப்பெற்று மீளக் களமிறங்கும் அம்பதிராயுடு



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் அம்பதி ராயுடு, தன்னுடைய முடிவை திரும்ப பெறுவதாக ஐதராபாத் கிரிக்கெட் சங்கத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

2019 உலகக் கோப்பைக்கு புறக்கணிக்கப்பட்ட பின்னர் ஓய்வு பெறுவதாக அறிவித்த அம்பதி ராயுடு, ஐதராபாத் கிரிக்கெட் சங்கத்தின் (எச்.சி.ஏ) நிர்வாகிகள் குழுவின் (கோ.ஏ) உறுப்பினர்களில் ஒருவரான பி.சி.சி.ஐ.யின் பேராசிரியர் ரத்னக்கர் ஷெட்டிக்கு விளையாட்டின் அனைத்து வடிவங்களிலும் விளையாட தயாராக இருப்பதாக கடிதம் எழுதியுள்ளார்.


இதுகுறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், ஓய்வில் இருந்து வெளியே வந்து அனைத்து வடிவங்களிலும் விளையாட விரும்புகிறேன்.

"சென்னை சுப்பர் கிங்ஸ், வி.வி.எஸ். லக்ஷ்மன் மற்றும் நோயல் டேவிட் (அடுத்த மாதம் விஜய் ஹசாரே கோப்பை வரை எச்.சி.ஏ.தேர்வுக் குழுத் தலைவர்) ஆகியோர் கடினமான நேரத்தில் மிகவும் ஆதரவாக இருந்தனர். மேலும் என்னிடம் போதுமான கிரிக்கெட் உள்ளது என்பதை எனக்கு உணர்த்துவதில் கருவியாக இருந்தனர்" என அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

திறமையான ஐதராபாத் அணிக்காக விளையாடும் வாய்ப்பை எதிர்நோக்கி காத்திருக்கிறேன்.

எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி முதல் ஐதராபாத் அணியுடன் இணைந்து கொள்ளத் தயாராக உள்ளேன் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தேசிய பரா மெய்வல்லுநர் போட்டிகளில் 800 மாற்றுத் திறனாளிகள் பங்கேற்பு




தேசிய பரா மெய்வல்லுநர் போட்டிகளில் இம்முறை 45 கழகங்களைச் சேர்ந்த சுமார் 800 மாற்றுத் திறனாளி வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

நடப்பு ஆண்டுக்கான தேசிய பரா மெய்வல்லுநர் போட்டிகள், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

தேசிய பரா ஒலிம்பிக் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த தேசிய பரா மெய்வல்லுநர் போட்டிகளில், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி வீரர்களும் பங்குபற்றவுள்ளனர்.

மேலும், பார்வை குறைபாடுடையவர்கள், உடல் ரீதியாக குறைபாடுடையவர்கள் மற்றும் சிந்தனைக் குறைபாடுடையவர்கள் என மூன்று வகையான வீரர்களுக்காக 190இற்கும் மேற்பட்ட சுவட்டு, மைதான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் டுபாயில் நடைபெறவுள்ள, உலக பரா மெய்வல்லுநர் போட்டிகளுக்கான தகுதிகாண் போட்டியாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டோனியின் வைரலாகும் புகைப்படம்



தென்னாபிரிக்க தொடரில் டோனி விளையாடுவாரா, மாட்டாரா? என்ற கேள்வி ரசிகர்களிடம் எழுந்துள்ள நிலையில், அவர் அமெரிக்காவில் இருப்பதாக புகைப்படம் ஒன்று வெளியாகி வைரலாகி வருகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான டோனி, தற்போது வரை தனது ஓய்வு முடிவு குறித்து மௌனம் காத்து வருகிறார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் இருந்து தன்னை விலக்கிக் கொண்ட அவர், இந்திய இராணுவத்தில் இணைந்து பணியாற்றினார்.

இந்திய அணி அடுத்ததாக தென்னாபிரிக்கா சென்று விளையாட உள்ளது. இந்த தொடரிலாவது டோனி விளையாடுவாரா? என அவரது ரசிகர்கள் கவலையில் உள்ளனர். ஒருபுறம் இளம் வீரர்களான சஞ்சு சாம்சன், இஷான் கிஷான் ஆகியோருக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில், டோனி எங்கே இருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்ற ரசிகர்களின் கேள்விக்கு தற்போது பதில் கிடைத்துள்ளது. சக வீரரான கேதர் ஜாதவுடன் அமெரிக்கா சென்றுள்ள டோனி, அங்குள்ள கிளப் ஒன்றில் கோல்ப் விளையாடியுள்ளார்.

இதனைப் புகைப்படமாக எடுத்து கேதார் ஜாதவ் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படத்தைக் கண்ட டோனியின் ரசிகர்கள், சமூக வலைத்தளங்களில் வைரலாக்கி வருகின்றனர். (ஐ)

## நாடு முழுவதும்...

தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம், கம்பஹா மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டிலும் இவ்வாறு பலத்த காற்று வீசுமென அத்திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவித்துள்ளது. (ம-3)

## ஒரு தொகை...

கிளைமோர் குண்டு, மோட்டார் ரவைகள் மற்றும் பல வகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான தேடுதல் நடவடிக்கையில், யுத்தத்தின்போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மாகாண சபைத்...

தலை ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த மகிந்த தேசப்பிரிய, இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியம் இல்லையென தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலை உடனடியாக நடத்துமாறு உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தமையையடுத்து தேர்தல்கள் ஆணையக தலைவர் மாகாண சபை தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியம் இல்லையென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பெண்கள் எதிர்...

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய மேலும் கூறியுள்ளதாவது, "பாராளுமன்றில் பலமான அரசாங்கமொன்று இல்லாத காரணத்தினாலேயே, ஸ்ரீ லங்கா பொதுஜன் பெரமுன ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட சில காலத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, நாம் வரலாற்று வெற்றியை பெற்றோம்.

இதன் ஊடாக நாட்டிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை நாம் கைப்பற்றியுள்ளோம்.

இதற்கு எமது கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பசில் ராஜபக்ஷதான் பிரதான காரணம் என்பதை நான் இவ்வேளையில் கூறிக் கொள்கிறேன்.

எமது எதிர்கால அரசாங்கத்தில் மகிழ்ச்சியான சமூகத்தையும் வளர்ச்சியடைந்த நாட்டையும் உருவாக்குவதே எமது பிரதான நோக்கமாக இருக்கிறது.

எமது நாட்டில் பெண் பிரதிநிதித்துவத்தை இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். இன்று பெண்களின் கல்வி வீதம் அதிகரித்து விட்டது.

இதனை இன்னும் ஊக்கப்படுத்த வேண்டும். நாம் இதற்கான செயற்பாடுகளை என்றோ ஆரம்பித்து விட்டோம். இதன் ஊடாகத்தான் அரச இயந்திரத்தை பலப்படுத்த வேண்டும்.

எனினும், நுண்கடன் போன்ற செயற்பாடுகளால் பெண்கள் இன்று பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

இதற்கெல்லாம் எமது அரசாங்கத்தில் ஒரு தீர்மானத்தை நாம் எடுப்போம்" என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மக்களின் பாது...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிருக்கான மாநாடு நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார். மகிந்த மேலும் கூறியதாவது,

"2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் நான் தோல்வியடைந்து, மெதமுலனவிற்கு சென்றபோது, பெண்கள்தான் அதிகளவாக கவலையடைந்தார்கள்.

எமது வீட்டுக்கு வந்தவர்களிலும் பெண்கள்தான் அதிகளவில் இருந்தார்கள். நாம் இந்நாட்டின் அனைவர் தொடர்பிலும் அன்று சிந்தித்து செயற்பட்டமையால்தான் இத்தனை அன்பு கிடைத்துள்ளது.

அவ்வாறான ஒரு அரசாங்கமும் நாம்தான். மக்களின் பாதுகாப்பு எல்லாம் எமது காலத்தில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

எனினும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் மீண்டும் மக்களுக்கு அச்சமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. யாரும் அச்சப்படாதீர்கள். நாம் என்றும் மக்களுடன் மக்களாக இருக்கிறோம்.

இந்த அரசாங்கம் மக்களுக்காக எதை செய்தது? இராணுவத்தினருக்கு எதிரான செயற்பாடுகளைத்தான் முன்னெடுத்தது.

இவ்வாறான சுமைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கத்தான் நாம் மீண்டும் களமிறங்கியுள்ளோம். மக்களுக்கு நாம் ஏன்றும் பொய்யான வாக்குறுதிகளை வழங்க மாட்டோம்.

பொய்யான வாக்குறுதிகளை வழங்கினால் அது அந்த அரசாங்கத்துக்கு இறுதி காலம் தான். இந்த அரசாங்கம் பெண்களுக்கு எதை செய்தது? ஒன்றுமில்லை" எனக் குறிப்பிட்டார். (ம-3)

## 19ஆவது திருத்...

அரசாங்கத்தில் பிரச்சினைகள் ஏற்பட காரணமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றும் முன்னர், அதில் அடங்கியிருந்த சரத்துக்கள் தொடர்பாக உன்னிப்பாக ஆராய்ந்திருக்க வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மக்கள் பலத்து...

ஒரு கதையுமாக இடத்துக்கு இடம் மாறுபட்டு ஏமாற்றுக் கதைகளை பேசி வருகின்றனர். நான் அவ்வாறு அல்ல சொல்வதைச் செய்வேன் என்னை மக்கள் நம்பலாம்.

இந்த நாட்டை நான் ஒருபோதும் பிரிவினைக்கு இட்டுச் செல்லாதும் மத ரீதியாகவோ, இன ரீதியாகவோ, மொழி ரீதியாகவோ பிரிவினைகளை ஏற்படுத்தும் அரசியல் கலாசாரத்தை அடியோடு ஒழித்து நாட்டு மக்களை பிரிவினையில் இருந்து மீட்டு எடுத்து ஒரே நாட்டுக்குள் இலங்கை மக்கள் என்ற மன உறுதியுடன் நாட்டை ஒற்றுமைப்படுத்தி மகிழ்ச்சியான அழகிய தேசமாக இலங்கை நாட்டை கட்டியெழுப்புவேன் எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்து இருந்தார். (ம-3)

## நாடு முழுவதும்...

மீறிய 4667 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நேற்று அதிகாலை 2.00 மணி முதல் காலை 6.00 மணி வரையான 4 மணி நேரம் நாடு முழுவதும் குறித்த விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இதற்காக, 14695 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ம-3)

## நாட்டை கட்டி...

குளியாபிட்டியில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப கல்லூரியின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர் தெரிவித்ததாவது,

இன்று நாட்டில் முதலாவது தொழில்நுட்ப கல்லூரி ஸ்தாபிக்கப்படுகிறது. கொரிய அரசாங்கத்தினால் இந்த கல்லூரி அமைக்கப்படுகிறது. இதற்காக கொரிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தக் கல்லூரியை கல்வியை நவீனமயப்படுத்தவும், கல்வியை நவீனமயப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கான வேலைத்திட்டமாகவே நாம் கருதுகின்றோம் என அவர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

## இராணுவம்...

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களினால் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படும் யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றை துரிதகதியில் மீளகையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்தின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விபரங்களை காணிகளின் உரித்தாளர்கள் அறியத்தருவதன் மூலம் அக்காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு உரிமை கோருபவர்களிடம் மீளக்கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனடிப்படையில் இதற்காக தயாரிக்கப்பட்ட விசேட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உரிமை கோரலுக்கான தகுந்த ஆதாரத்துடன் அல்லது தகுந்த விளக்கத்துடன் மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

குறித்த விண்ணப்பப் படிவத்தினை ஆளுநர் செயலகம், யாழ் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் வடமாகாண சபையின் https://np.gov.lk/ என்ற இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

காணி உறுதியின் பிரதியுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்களை இணைத்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 09ஆம் திகதிக்கு முன்னர் "காணி கோரல்" வட மாகாண ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, சுண்டுக்குளி , யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஜனாதிபதி முறைமையை நீக்குவது நாட்டுக்கு ஆபத்து – அக்மீமன தேரர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது ஒழிப்பதன் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்படுவதாகவும், இது நாட்டுக்கு ஆபத்தானது எனவும் அக்மீமன தயாரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில், இந்த அரசாங்கம் ஜனாதிபதி முறைமையை இப்போதாவது மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கைவிடப்பட்ட...

ஒரு நெல் வயலில் கைவிடப்பட்ட 2 வெடிகுண்டுகள் நேற்று முன்தினம் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கடற்படைக்கு கிடைத்த தகவல்களின்படி, காரைநகர் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த 2 வெடிகுண்டுகளும் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த 2 வெடிகுண்டுகளும் கடற்படை வெடிகுண்டு அகற்றும் பிரிவினால் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

செவன
திகதி 2019/08/31
சீட்டிழுப்பு இலக்கம் 214
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 21 38 43 66

கொவிசெத
திகதி 2019.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 2226
ஆங்கில எழுத்து R
வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 22 49 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 31-08-2019
சீட்டிழுப்பு இலக்கம் 970
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 2 7 1 1 4 5

சுபிரி வாசனா
திகதி 2019/08/31
சீட்டிழுப்பு இலக்கம் 1456
23 10 39 45 58 01 08

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1032
சீட்டிழுப்பு திகதி 31/08/2019 நீலம்
R 01 14 37 60
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 31.08.2019 வெற்றி இல 2603 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 05 15 33 61 தனுசு
ரூ.500 பரிசுக்காக 9127
ரூ.100 பரிசுக்காக 418
விசேட இல.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 717 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.31
விசேட இலக்கம் 7428
வெற்றி இலக்கங்கள் 01 06 45 68 L

சனிதா
சீட்டிழுப்பு இல: 3229 வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.31
ரூ. 58,382,915/-
09 17 43 66 B 13

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூபாய் 100), சில்லறையாகவும் (ரூபாய் 110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
தொடர்புகளுக்கு :021 222 2567 (C-7456)

## Day Classes

# 2020 A/L
**Science and Maths**

ஆரம்பம்: 02.09.2019
8.00 am


Chemistry : Ka.Subeesan
Physics : R. Raakulan
Maths : G.Inkaran
Biology : K.kalaivanan

(022)

**The Science Corner**
Clock Tower Lane, Jaffna. 0774307829


# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை அரவிந்தன்



வராத்துப்பளை, புலோலியைப் பிறப்பிடமாகவும், புற்றளையினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை அரவிந்தன் அவர்கள் 31.08.2019 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், குமுதினி (பரிசாரகர், மந்திகை ஆதார வைத்தியசாலை) யின் பாசமிகு கணவரும், அபிநந்தன் (A/L 2013 கணிதப் பிரிவு - யா/நெல்லியடி மத்திய கல்லூரி), அதுர்சன் (யா/புற்றளை மகா வித்தியாலயம்), ஆரபி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), அம்சவிர்தன் (யா/புற்றளை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரன் (கிராம சேவகர் - உடுப்பிட்டி), பாலசரஸ்வதி, நவநீதன் (தபாலதிபர் - கரணவாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2019) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை. (C-7457) தகவல் - குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி (சிறுவர் நீதிமன்றம் முன்பாக) யாழ்ப்பாணம் எனும் இடத்தில் 2 பரப்பு 12.02 குழி வெற்றுக்காணி விற்பனைக்குண்டு விலை நேரடியாகப் பேசித் தீர்க்கப்படும். தொடர்புகளுக்கு :
(053) 076 462 2711, 077 968 1813

## கார் விற்பனைக்கு

CAC XXXX தொடரிலக்கம் கொண்ட 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட Toyota PREMIO வகை Pearl White கார் விற்பனைக்குண்டு. மொத்தமாக 25,000 Km மட்டுமே பாவிக்கப்பட்டது.
தொடர்புகளுக்கு : 077 345 9377 (C-7396)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER
070 330 5500
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-7373)
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை


# நீரிற்கு 11 கோடி ரூபாய் நிதி

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் அடிப்படை அபிவிருத்திப் பணிகள் துரிதமாக பூர்த்தி செய்யப்படும் என்று போக்குவரத்து அமைச்சின் பதில் செயலாளர் திருமதி மல்காந்தி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பிராந்திய விமான நிலையத்திற்கு இருக்க வேண்டிய அனைத்து வசதிகளும் இந்த விமான நிலையத்தில் ஏற்படுத்துவதே நோக்கமாகும்.

விமான நிலையத்திற்கு தற்காலிக நீர் விநியோகத்திற்காக 11 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய அடிப்படை வசதிகளுக்காக சிவில் விமான சேவை அதிகார சபையும் போக்குவரத்து அமைச்சும் இணைந்து நிதி வழங்குகிறது. (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499 (C-7320)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## விற்பனைக்கு

வவுனியாவில் வாகனம் isusu ELF 41-XXXX, தவசிக்குளம் G.S அலுவலகத்திற்கு அண்மையில் காணி மற்றும் கொங்கிறீட் கல்லடிக்கும் மெசின் 02 விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
(045) 077 532 5968

தூரிகையின் புதிய பிரிவு மகளிருக்கான
## பயிற்சி நெறிகள்

**2.9.2019** திங்கள் காலை 10 மணி முதல் ஆரம்பமாகின்றன

கேக் ஐசிங் அலங்கரிப்பு, ஃபேஷியல் மணப்பெண்,மகளிர் ஒப்பனைகள் கூந்தல் தொடர்பான பயிற்சிகள் தையல், உடைகளில் அலங்காரமிடல் துணிஅச்சிடல், ஓவியக்கலைப் பயிற்சி

இம்முறை பயிலுநர்கள் பயிற்சியின் இறுதியில் தூரிகையின் நிறுவனங்களில் களப் பயிற்சிக்கும் அனுமதிக்கப்படுவர்

1. பயிற்சியை பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்
2. இலகுவான தவணை முறைக் கட்டணம்
3. திறமையாக செயற்படுவோர்க்கு எமது நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்பு

பயிற்சிகளில் கலந்து கொள்வோர் 2.9.2019 அன்று காலை 10 மணிக்கு தூரிகை- நாவலர் மடம் நெல்லியடி நிறுவனத்திற்கு சமூகந்தரவும் (C-7470)

**தூரிகை** நுண்கலை வளாகம்
மத்திய கல்லூரி வீதி நெல்லியடி
பிரதான வீதி,நாவலர்மடம் நெல்லியடி
0779143171 / 0775259954

## SMART SCIENCE CENTRE
நீராவியடி, யாழ்ப்பாணம்.

# Day Classes
## 2020 (A/L)

அலகுரீதியான கடந்தகால வினா விடைத் தொகுப்புகளுடனான மீட்டல் வகுப்புக்கள்

இரசாயனவியல் - S.P.Thass (B.sc)
இணைந்த கணிதம் - T.S.Rankan (B.sc)
பௌதிகவியல் - T.K.Kajan (B.sc)
(051)

ஆரம்பம் : 02.09.2019 4.00 P.M

தொடர்புகளுக்கு : 077 653 1177, 077 632 5885

## இம் முறை க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியவர்களுக்கான அரியதோர் வேலைவாய்ப்பு

- எமது Export நிறுவனத்தில் உங்கள் மாவட்டத்தில் இருந்து 50 நபர்களை 06 விதமான பதவிகளுக்கு நியமிக்கவுள்ளோம்.
- 03 மாத கால தகுதிகாண் காலத்தின் போது நாளொன்றுக்கு 750 - 1500 ரூபாயும் பின்னர் மாதம் ஒன்றுக்கு 55000 ரூபாயும் பெற்றுக்கொள்ளமுடியும்.
- ஆர்வமுள்ளவர்கள் உங்கள் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை 077 985 8580 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.

Call No : 077 517 9034 (052)

## வாகன சாரதி தேவை

கோண்டாவிலில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றின் விநியோக சேவையில் ஈடுபடும் வாகனத்திற்கு சாரதி தேவை.
(வயதெல்லை 35ற்கு மேல்)
தொடர்புகளுக்கு :
(036) 077 200 9196

## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது) (C-7319)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● மானிப்பாய் ● திருகோணமலை ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
0768226240
V2 TRAVELS


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

## சங்குநாதம்

நாதம் 232

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 01.09.2019 தொலைபேசி : 021 222 3378





# பதவியின் அந்தலையில்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

நல்லூர்க் கந்தப் பெருமானின் திருவிழாவும் சிறப்பாக நடந்து முடிந்து விட்டது. பண்டிதர் பரமலிங்கத்திடம் ஒரு நிறைவு தெரிந்தது.

என்ன இருந்தாலும் கடந்த வருடங்களில் நல்லூரில களவு நடக்கவில்லை. ஆனால் இந்த முறை எவ்வளவோ சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் சங்கிலி பறிக்கிற கூட்டம் கோயிலுக்குள்ள நுழைந்து விட்டுது.

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கவலை வெளியிட்டார். கங்காணியாரின் நியாயபூர்வமான கவலைக்கு விதானையார் விசுவலிங்கம் பதிலளித்தார்.

**விதானையார்:** கடந்த வருடங்களில கடமைகளில ஈடுபட்டிருந்த பொலிஸார் களவு நடக்கக்கூடாது என்பதில மிகவும் விழிப்பாக இருந்தனர். ஆனால் இந்த முறை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதம் குண்டு வைத்து விடும் என்பதிலேயே கவனம் செலுத்திச்சினம். இதால களவு பற்றி அவர்கள் கவனம் செலுத்தவில்லை.

**மூப்பர்:** அப்ப எங்கட பொலிஸார் ஒரு விடயத்தைத்தான் கவனிப்பினம் போல.

**சாத்திரியார்:** உண்மைதான். குண்டுத்தாக்குதல் தொடர்பில கவனம் செலுத்திற அதே முன்னுரிமையோட களவு விடயத்திலும் பொலிஸார் கவனம் செலுத்தியிருக்க வேணும். ஆனால் களவு பற்றிப் பொலிஸார் கவனம் செலுத்தவில்லை. இதனாலதான் இந்த முறை நல்லூர்த் திருவிழாவில 60 பவுண் நகைகள் களவு போயிருக்குது.

**சிறாப்பர்:** சரி..சரி... நடந்து முடிந்த கதைகளைக் கதைத்துப் பிரயோசனம் இல்லை. எங்கட அரசியலைப் பற்றிக் கதைத்தால்கூட பிரயோசனமாக இருக்கும். சிறாப்பர் கனகசபை இவ்வாறு கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் விழித்துக் கொண்டனர். தேர்தல்கள் வரப்போற இந்தக் காலகட்டத்தில நீங்கள் விழிப்பாக இருக்க வேணும். அரசியல் வேண்டாம், அரசியல் வேண்டாம் என்று அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டால் அந்தப் பிரச்சினை எங்களைக் கைவிடப் போவதில்லை. எனவே அரசியலின்ர சூக்குமத்தையும் நாங்கள் ஆராயத்தான் வேணும் என்பது போல ஆலடியில் இருந்தவர்களின் மனநிலை அமைய, சிறாப்பர் கனகசபையின் கருத்தை ஆலடி மாநாடு அங்கீகரித்தது.

**சாத்திரியார்:** ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் வந்து போனவரல்லோ. அவற்ற வருகையால எங்கட மக்களுக்கு ஏதேனும் பிரயோசனம் இருக்குதோ.

(சாத்திரியார் சதாசிவம் கேள்வி எழுப்பினார்)

**மூப்பர்:** ஒரு சில நடவடிக்கைகள் மக்களுக்கு நன்மைதான். ஆனால் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண வருகையின்போது பொதுமக்களை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்திற்கு வரச்சொன்னவியளாம். ஆனால் அந்த மக்களை பிற்பகல் 3 மணிக்குத்தான் ஜனாதிபதி சந்திப்பதற்கான ஏற்பாடுகள் இருந்ததாகக் கேள்வி.

**பண்டிதர்:** என்ன? பிற்பகல் 3மணிக்கு நடக்கிற கூட்டத்திற்கு பொதுமக்கள் காலை 9 மணிக்கே கூட்ட இடத்தில நிற்க வேணுமோ. இதென்ன நாசமறுப்பு.

**விதானையார்:** எங்கட அதிகாரிகள் நிலைமைகளை எடுத்துக்கூறவேண்டும். ஒவ்வொருவருக்கும் இருக்கிற நாளாந்த வேலைகள் பற்றி அரச அதிகாரிகள் சிந்திக்க வேணும்.

ஆடு, மாடு, கோழி, சமையல், சாப்பாடு இப்படியான வேலைகள் மக்களுக்கு இருக்கும். இதை விட்டிட்டு கையெழுத்திட்டால் மாதம் சம்பளம் வரும் எண்ட நிலை சாதாரண பொதுமக்களுக்கு இல்லை என்பதைப் புரிந்து கொண்டு செயற்படாத வரையில் சனங்களைக் காயப்போடுகிற வேலைகளும் நிற்காது.



## மாணவர்களைக் குழப்பியடித்த இந்து நாகரிகப் பரீட்சை

**வாத்தியார்:** இங்க யார் ஆட்களை மதிக்கினம். தங்கட அலுவல்கள் நடந்து முடிந்தாப் போதும் எண்ட நிலைப்பாட்டிலதான் எல்லாம் இருக்குது. அண்மையில தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கத்தை சந்திக்கிற சந்தர்ப்பம் கிடைச்சுது. அவர்களுக்கு நடைமுறைப் பிரச்சினைகள் ஏராளம் இருக்குது. இது தொடர்பில விளக்கமாக ஆளுநரோட சந்தித்துக் கதைக்கலாமெண்டால், அச்சந்திப்புக்கு ஆளுநர் நேரம் ஒதுக்கித்தரவில்லை எண்டு கவலைப்பட்டினம்.

தமிழர் ஒருவர் ஆளுநராக இருக்கிற போது எங்கட பிரச்சினைகளைக் கதைத்து அதற்குத் தீர்வு பெறலாமெண்டால் சந்திக்கவே முடியவில்லை எண்டால் என்ன செய்யிறது.

**கங்காணி:** எதிலும் விசுவாசம், நேர்மை, மனச்சாட்சி இருக்க வேணும் பாருங்கோ.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள். எனக்கெண்டால் நீங்கள் சொல்லுறுதின்ர உட்பொருள் விளங்கல்ல.

**கங்காணி:** 2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை நடந்ததல்லோ. இதில இந்து நாகரிகப் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களுக்கு மனம் வெறுத்துப் போய்ச்சுது. படித்தது ஒன்று பரீட்சைக்கு வந்தது வேறொன்று எண்டால் அந்த மாணவர்களின்ர மனம் குழம்பும்தானே.

**வாத்தியார்:** இந்து நாகரிகப் பாடத்தைப் படிக்கிறது கௌரவக் குறைவு எண்டு நினைக்கிற இந்தக் காலகட்டத்தில கொஞ்ச மாணவர்களாவது இந்து நாகரிகப் பாடத்தைப் படிக்கினம் எண்டால் அதுக்கும் முடிவு கட்டுவதாகத் தானே பரீட்சை வினாத்தாளைத் தயாரித்திருக்கினம்.


**சிறாப்பர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இந்துக் கற்கைகள் பீடம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதால அந்தக் கற்கை நெறிக்கு அதிக மாணவர்களைச் சேர்த்துவிடக் கூடாது எண்ட நோக்கத்திலயும் இந்து நாகரிகப் பரீட்சை வினாத்தாளை குழப்பமாகத் தயாரித்திருப்பினம் போல...

இப்படி சிறாப்பர் கூற, எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம் என்று வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஜனாதிபதி- கூட்டமைப்பு அங்கும் இங்கும்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது. இச்சந்திப்பு முக்கியமானது எனக் கருதப்பட்ட போதிலும் அதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரோ அல்லது கூட்டமைப்பின் பேச்சாளரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனோ கலந்து கொள்ளவில்லை.

தவிர, கூட்டமைப்பின் ஓர் அங்கமான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனும் இச்சந்திப்பைத் தவிர்த்திருந்தார்.

கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தனராயினும் முடிவுகள் பெரிதாக எட்டப்படவில்லை என்ற செய்தி மட்டுமே சந்திப்பின் விளைவாக இருந்தது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் இரா.சம்பந்தர், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளாதமை ஜனாதிபதி மைத்திரியை அவமதிக்கின்ற நடவடிக்கை என்றே பார்க்கப்படவேண்டும். கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் தன்னைச் சந்திக்காமல் புறந்தள்ளிய போது, கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒரு நல்ல முடிவை ஜனாதிபதி தெரிவிப்பார் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பாதுகாக்கின்ற கூட்டமைப்பின் தலைமை, ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்காமல் புறந்தள்ளி வருவதையும் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியைச் சந்தித்தாக வேண்டும் என்ற அடிப்படையில் சந்திப்பு நடந்தது என்பதையும் சுட்டுவதான செயற்பாடு நடந்தேறியது.

இதை நாம் கூறும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது அவர் கலந்து கொண்ட நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் செயற்பாட்டைப் பார்க்கும் போது முன்னுக்குப் பின் முரண்பாடு தெரிகிறது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பின் போது கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களான இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளாமை ஆரோக்கி யமான செயல் அல்ல என்ற குற்றச்சாட்டில் இருந்து விடுபடுவதற் காகவே ஜனாதிபதியின் யாழ்ப்பாண நிகழ்வுகளில் எம்.ஏ. சுமந்திரன் பங்குபற்றினார் என அனுமானிக்க முடியும்.

இந்த அனுமானிப்பை அவரின் உரையும் நிரூபணமாக்கியுள்ளது. அதாவது ஜனாதிபதி மைத்திரி இன்னும் செய்வார் என்று சிலர் நம்புகின்றனர் என எம்.ஏ. சுமந்திரன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த உரையில் இன்னும் சிலர் என்பது ஜனாதிபதியைச் சந்தித்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சுட்டுவதாகக் கருதமுடியும். எனவே ஜனாதிபதி மைத்திரியை கூட்டமைப்பினர் சந்திப்பதில் எம்.ஏ.சுமந்திரனுக்கு உடன்பாடி ல்லை என்பது புரிகிறது.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு விருப்பமில்லாத எதையும் செய்ய விரும்பாத கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரும் ஜனாதிபதியைச் சந்திக்க விரும்பவில்லை என்பது புலனாகிறது.

எனினும் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவ்ணபவன், சிவமோகன், சிறீநேசன், யோகேஸ்வரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்தாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்துள்ளனர் என்ற முடிவுக்கு நாம் வருவதிலும் தவறில்லை.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி மைத்திரியுடனான உறவை தவிர்த்து, அவருடன் பகையை வளர்த்துக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிபூரண ஆதரவாளர்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டமை தமிழினத்திற்குச் செய்த கெடுதி என்பது நிறுதிட்டமான உண்மை.

எனினும் இந்த உண்மையைக் கூட தமிழ்மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஜனாதிபதியின் யாழ்ப்பாண நிகழ்வுகளில் பங்கேற்று தங்களை நியாயஸ்தர்களாகக் கூட்டமைப்பின் தலைமை காட்டிக்கொள்ள முற்பட்டமையானது, யுத்தத்தால் நொந்து போயுள்ள தமிழ்மக்களை ஏமாற்று கின்ற செயல் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை.

எது எவ்வாறாயினும் தேர்தல்கள் நெருங்குகின்ற நேரத்தில் கூட்டமைப்பின் தலைமை நடந்து கொண்ட முறைமைகள் சரியல்ல என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு அதனை வெளிப்படுத்துகின்ற பணியைக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிவைக்க முடியும்.

இவை ஒருபுறமிருக்க; ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ்ப்பாண வருகைக்கு மிகுந்த முக்கியத்துவத்தைப் படைத் தரப்பினர் கொடுத்திருந்தனர். ஒரே நாளில் எட்டு நிகழ்வுகளில் ஜனாதிபதி மைத்திரி பங்குபற்றுவதான ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தன.

இந்த ஏற்பாடுகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாயினும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் பொதுமக்களை அசௌகரியப்படுத்தவில்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும். ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் சர்வசாதாரணமாக, மிகக் குறைந்த பந்தோபஸ்து ஏற்பாடு களுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரியின் கடந்த 30 ஆம் திகதிய யாழ். விஜயம் வித்தியாசமானதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மிகத் தீவிரமாகியிருந்தன.

ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்திற்குப் பின்பான பாதுகாப்பு மிகத் தீவிரமாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் அது நடைபெற்றதா? அல்லது புதிய இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா பதவியேற்றதன் காரணமாக பந்தோபஸ்து நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி ஒரு வித்தியாசமான சூழ்நிலை உருவாக்கப்பட்டதா? என்ற கேள்விகளும் உண்டு.

எதுவாயினும் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயமும் அவர் ஆற்றிய உரையும் தமிழ் மக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் எதனையும் செய்யவில்லை என்பதைப் பகிரங்கமாகக் கூறுவதாக இருந்தது என்பதைத்தான் நாம் இங்கு ஈண்டு கவனிக்க முடியும்.


அதேவேளை ஜனாதிபதி மைத்திரி ஆற்றிய உரையை உன்னிப்பாகச் செவிமடுத்தவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடலாம் என்ற ஊகங்களைத் தெரிவிக்கின்றனர்.


யார் எந்தத் தேர்தலில் போட்டியிட்டாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசியல்வாதிகளை நம்புதல் என்பதை விடுத்து, தமது பலத்தை நிரூபிக்கின்ற விடயத்திலேயே கவனம் செலுத்த வேண்டும். இதுவொன்றுதான் தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுத்தரும் என்ற சூழ்நிலை உள்ளது. இதற்காகவே தமிழ்மக்கள் பேரவை மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியை செப்டெம்பர் 16 ஆம் திகதி நடத்தவுள்ளது. தமிழ்மக்களின் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து தமிழ் மக்கள் பேரவை நடத்தும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் பங்கேற்பதன் மூலம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க முடியும்.

ஆக, சர்வதேசத்தின் தலையீடு ஒன்றுதான் எங்களுக்கு விடிவைப் பெற்றுத்தரும் என்பதால் அனைத்துத் தமிழ் மக்களும் தங்களின் மிக முக்கியமான தார்மீகக் கடமையாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அனைவரதும் விருப்பம்.

**விதுரன்**

# நல்லூர்க்கந்தனின் தேர்ப்பவனிக் காட்சி









## எது பலம்?

தற்காலத்தில் கஷ்டமும் சோதனைகளும் நிறைந்த வாழ்க்கை வாழுகின்றோம். ஆனால் இறைவனை பூரணமாக நினைப்பவன் மட்டும் திருப்தியாக வாழ்கின்றான். ஜடாமுடி தரிப்பதாலும் இறை நாமத்தை உச்சரிப்பதாலும் மட்டுமே ஒருவன் பத்தனாகி விட முடியாது.

**"அஸதோ மா ஸத்கமய**
**தமசோமா ஜயோதிர்கமய**
**ம்ருத்யோர்மா அம்ருதம் கமயேதி"**

இதனுடைய கருத்து பரம்பொருளே! நீ எம்மை தீய வழியில் இருந்து விலக்கி நல் வழியில் அழைத்துச் செல். எங்களை இருளில் இருந்து ஒளிக்கு அழைத்துப்போ. இறப்பிலிருந்து அகற்றி வீடு பேறு எனும் இன்பமயமான முக்தி நிலைக்கு இட்டுச்செல் என்பதே. சோதனைகள் நிறைந்த கால கட்டத்திலும் இறைவனை நினைக்கும் அளவிற்கு மனதை தயார் செய்து கொள்ள வேண்டும்.

இராமாயணம், மகாபாரதம் இரண்டிலுமே இடம்பெறுபவர் அனுமன். இராமாயணத்தைப் பற்றி அறிந்த அர்ச்சுனன் அனுமனிடம் இலங்கை செல்வதற்கு பாலம் கட்ட அவ்வளவு சிரமப்பட்டீர்களே நானாக இருந்தால் என் அம்புகளினாலேயே பால்த்தை எளிதில் கட்டியிருப்பேன் என்றான். அவரது கர்வத்தை கண்ட அனுமன் திகைத்து எங்கே அப்படியோர் அம்பு பாலத்தை கட்டு பார்க்கலாம். இராமனின் அருளால் நாங்கள் அமைத்த பாலத்தில் வானரசேனையே நடந்து சென்றது. நீ அமைக்கும் பாலம் என் ஒருவனை தாங்குகிறதா? என்று பார்ப்போம் என்றார். அர்ச்சுனனும் உடனடியாக ஓர் அம்பு பாலத்தை உருவாக்கினான். அதன்மீது அனுமன் ஓர் அடி வைத்ததுமே அது நொறுங்கிப்போனது. அர்ச்சுனன் தலை குனிந்தான். தன் தவறுக்கு வருந்தினான். கிருஷ்ணனில் ஆதரவால் தான் தன் வில்லாற்றல் பயனளித்தது என உணர்ந்தான்.

கிருஷ்ணர் அவன் மீது பரிதாபம் கொண்டு இன்னொருமுறை அம்பு பாலம் கட்டு எனப் பணித்தார். அவரை வணங்கிவிட்டு மீண்டும் தன் அம்புகளால் பாலத்தை எழுப்பினான் அர்ச்சுனன். இம்முறை அனுமனால் அதை சிதைக்க முடியவில்லை. காரணம் கிருஷ்ணரின் திருவருள்.

ஆக அற்ப விடயங்களில் நம் கவனத்தைச் சிதறவிடாமல் இறை குறித்த சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அவர் நம்மைத் தாங்கிப்பிடிப்பார். வாழ்க்கை எளிதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமையும். நினைப்போம் இறைவனை.

**-சிவனடியான்-**



ஜெ.பிரவீஸ், தரம் 2,
பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்,
பருத்தித்துறை.

## சிந்தனைத்துளிகள்

- தோல்வி அடைந்தவனுக்கு பல வழிகள் இருக்கலாம் ஆனால் வெற்றி அடைந்தவனும் ஒரே வழி உழைப்பு.
- அறிவுள்ளவன் தன் குழந்தைக்கு சகல வித்தைகள் பயிலும் வாய்ப்பை தேடித்தருவான்.
- ஏமாற்றும் மனைவி, போலியான நண்பன், சோம்பேறி வேலைக்காரன் ஆகியவர்களுடன் வாழ்வது ஒரு கொடிய விஷப் பாம்புடன் வாழ்வதை போன்றது. இது நிச்சயம் மரணத்தை தரும்.
- கஞ்சனுக்கு பிச்சைக்காரன் எதிரியாவான். தவறு செய்யும் மனைவிக்கு கணவன் எதிரி ஆவான். அறிவுரை கூறும் பெரியார்கள் முட்டாளுக்கு எதிரி ஆவார்கள் . பூரண நிலவு ஒளி திருடர்களுக்கு எதிரி ஆகும்.








**தமிழரின் பிரச்சினை தீருமென்று நீர் நினைக்கிறீரோ வியாசரே?**

**தியாகங்களை மதிக்காமல் உதாசீனம் செய்யும் உறவுகளை என்ன சொல்ல?**

**சாமந்திப் பூவின் மகத்துவம் என்ன?**

**சங்கர்** — **மாதகல்**

**சிரிப்பு மருந்து என்கிறார்கள் சிலரின் சிரிப்பு வருத்தத்தைக் கூட்டுதே?**

சிரிப்பு மனிதனை மாண்புறச் செய்யும். ஆணவச் சிரிப்பு மனிதனை மிருகமாக்கும். மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்திக்காட்டுவதில் மிக முக்கியமானது இந்த சிரிப்பு.அந்த அருமருந்தை வைத்திருக்கும் மனித குலத்தில் எப்படி இந்த ஆணவச் சிரிப்பு புகுந்து கொண்டதோ புரியவில்லை.

நாவினால் சுட்டவடு என்பது ஆணவச் சிரிப்பையும் சேர்த்துத்தானோ என்னவோ.

**சியான்** — **வதிரி**

**தியாகங்களை மதிக்காமல் உதாசீனம் செய்யும் உறவுகளை என்ன சொல்ல?**

அதுதான் எம்மிடையே இருக்கும் பெரும் பலவீனம். ஒருவர் எம்மில் எவ்வளவு அன்பு செலுத்துகிறார் என்பதை உணர்ந்து கொள்வதேயில்லை. ஆனால் அந்த அன்பை சர்வசாதாரணமாக உதாசீனம் செய்து விடுகிறார்கள்.

மனது கண்ணாடிபோன்றது. ஒருமுறை உடைந்து விட்டால் ஒட்டிவிடமுடியாது. மீறி ஒட்டினாலும் உடைவுகள் உறுத்திக்கொண்டே இருக்கும். இதைப் புரிந்து கொண்டு நடப்பதுதான் உச்சமானது.

**தமிழினி** — **கைவேலி**

**வாழ்க்கையில் முன்னேற நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன?**

வீழ்ந்தவுடன் எழ வேண்டும். மீண்டும் வீழ்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்துடன் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கவேண்டும்.

நாம் பயணிக்கும் பாதை கல்லோ முள்ளோ எமது பயணத்தை நிறுத்திவிடக்கூடாது. எப்போதும் வெற்றியை மட்டும் எண்ணத்தில் கொண்டு செயற்பட வேண்டும். தோல்வி வந்தால் ஏற்றுக்கொண்டு வெற்றிக்காய் பாடுபடவேண்டும்.

இதைச் செய்தால் வாழ்க்கையை வெல்வது வெறும் தூசுபோன்றது.

**திகழன்** — **யாக்கரு**

**பிரதமரை நம்பும் கூட்டமைப்பின் தலைமை ஜனாதிபதியைச் சந்திக்காதது ஏன்?**

ஆமைபிடிப்பார் மல்லாத்துவர் யாம் அது சென்னால் பாவம் என்றொரு பழமொழியுண்டு. அதே நிலைதான் இப்போது நமக்கும் வந்திருக்கிறது. தலை, கால்களை உள்ளிழுத்து ஓட்டில் மறைந்த ஆமையை ஓடாது என நம்பி கரையில் வைத்துவிட்டுச் சென்றால் ஆமை மீண்டும் கடலுக்குள் சென்று விடும்.

ஏதோ நாம் நம்முடைய வேலையை மட்டும் பார்ப்போம்.

**கவி** — **இணுவில்**

**ஆலமரத்தின் விதைகள் அனைத்தும் முளைத்தால் நிலை என்ன?**

அதுதான் இயற்கை. ஒரு ஆலமரத்தின் கீழ் விழுந்து கிடக்கும் கோடான கோடி விதைகளும் முளைக்கத் தொடங்கினால் இந்த உலகத்தில் ஆலமரம் மட்டும் தான் இருந்திருக்கும்.

ஆலமரம் தான் விழுதுவிட்டு தன்னை நிலை நிறுத்திக் கொண்டு தன் பரம்பலை செய்கிறது. ஆலம் பழத்தை பறவைகள் உண்டு செரிமானம் அடைந்து எச்சமாய் வெளிவரும் விதைகளே முளைத்தெழுகிறது.

ஆனால் எம்மினமோ எமது எல்லைகளை நிர்ணயிக்க குடிப்பரம்பலை செய்யாது குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல ஒருபரப்புக் காணிக்குள் நான்கு வீடு கட்டி நாசமறுத்துக் கொண்டிருக்கிறது.

அதனால் பேரினவாத குடியேற்றங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**பானுப்பிரியா** — **தொண்டைமானாறு**

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?**

ஐ.தே.க ஆட்களுக்கே அது சரியாத் தெரியாத போது நமக்கு எப்படித் தெரியும் சொல்லுங்கள்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**ரம்போராகவன்** — **தொல்புரம்**

**அமேசன் காட்டில் தீ பரவக் காரணம் என்ன?**

உலகின் நுரையீரல் எனப்படும் அமேசன் காடுகளினால் தான் உலகின் 90 வீதமான காபுனீரொட்சைட்டு உறிஞ்சி ஒட்சிசன் வழங்கப்படுகிறது.

அமேசன் மழைக்காடுகளின் அளவு இந்தியாவின் தமிழ்நாட்டைப்போல 42 மடங்கு என்றால் சிந்தித்துப் பாருங்களேன். அரியவகை மூலிகைகளைத் தன்னகத்தே கொண்டு உலகிற்கே மழை தருவித்த காட்டை பன்னாட்டுக் கம்பனிகளின் பேராசைக்காக அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அழிவு அமேசன் அழிவல்ல. உலக அழிவின் ஆரம்பம். இதை தடுக்காவிட்டால் உலக அழிவைத் தடுக்க முடியாது.

**செழியன்** — **வேலணை**

**நேர்மையாகப் பயணித்தால் நல்ல பெயர் கிடைக்குமோ?**

ஒரு வேலை செய்கின்றோம் என்றால் அதில் நூறு வீத அர்ப்பணிப்புச் செலுத்தி அந்த செயலை முடிக்கப் பழக வேண்டும்.

விட்டுக் கொடுப்பு மிக முக்கியமானது. உங்கள் விட்டுக்கொடுப்பு இன்னொருவருக்கு நன்மை அளிக்கும் எனின் அதை தயங்காது செய்ய முன்வரவேண்டும்.

வஞ்சனை செய்து வெல்வதிலும் நேர்மையாக நின்று தோற்பது மேல் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டால் வெற்றி எம்மைத் தேடிவரும்.

அது உங்கள் பெயரை வரலாற்றில் பொறிக்கச் செய்யும்.

**கலை** — **மிருசுவில்**

**தமிழரின் பிரச்சினை தீருமென்று நீர் நினைக்கிறீரோ வியாசரே?**

அப்படித் தீர்க்கப்படுமென விதியிருந்தால் 2009 என்ற கொடிய ஆண்டு வந்திருக்காது. முள்ளிவாய்க்காலில் இரத்த ஆறு ஓடியிருக்காது. இலட்சக்கணக்கான எம் உறவுகள் இன்று எம்முடன் கூடிக்குலாவி இருந்திருப்பர்.

என்ன செய்ய, எல்லாம் தமிழருக்குத் தான். வெயிலுக்குப் பயந்து நிழலுக்காக தென்னையின் கீழ் நின்றவனுக்கு தேங்காய் தலையில் விழுந்த கதை போல தமிழரின் நிலை மாறிவிட்டது.

இனி தமிழருக்கான தீர்வு என்பது எட்டாக்கனி.

**சுதன்** — **குப்பிளான்**

**பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதியானால் எப்படியிருக்கும்?**

பாதுகாப்புச் செயலாளராக தனது பணியை எவ்வாறு செவ்வனே செய்தாரோ அதேபோல் ஜனாதிபதியானாலும் தனது பணியை செவ்வனே செய்வார் என்று நம்புவோமாக.

**கோகிலன்** — **வரணி**

**சாமந்திப் பூவின் மகத்துவம் என்ன?**

செவ்வந்திப்பூ என அழைக்கப்படும் சாமந்திப்பூ இலங்கை, இந்தியாவில் எப் பிரதேசத்திலும் வளரக் கூடியது.

கோபம், எரிச்சல், விரக்தி, பயம் போன்றவற்றைப் போக்கும் குணம் இதற்குண்டு.

மன அழுத்தம், மன உளைச்சல் உள்ளவர்கள் இந்தப் பூவின் அடுக்குகளை உற்றுப் பார்ப்பதனால் அவை நீங்கும்.

இன்னும் பல மருத்துவக் குணம் கொண்ட இம் பலர்களை வீட்டின் முற்றங்களில் இப்போது காண்பது அரிதாகி விட்டது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## துதிசெய்து இறையை வேண்டித் துவங்கிடும் இக்காலத்தில்...

மினி பஸ்ஸில் மிகையாய்
மக்களை ஏற்றி மிருகங்களாய்
இனியொரு விதியில்லாமல்
ஏறியும் நிற்க முடியாபோதும்
தனிப்பெரும் கொடுமையாக
தன்னலம் சுரண்டல் பேர்கள்
மனிதரை மனிதராக மதித்து
மானுடம் தளைத்தாலென்ன

அமெரிக்கன்மா அமர்த்தி
அழுத்துதல் போல மூச்சே
இமியும் விட வருமோ என
ஏக்கத்தில் பயணிக்கும் மனிதரில்
இரக்கத்தைக் காட்டிடுங்கள்
மக்களை மாக்களாக்கி மரணம்
மதித்திடாத மனத்தினாலே
மிதிபலகையில் பத்துப்பேரும்

மீதம் ஒரு கையால் தொங்குவோரும்
விதிசெய்யும் விளையாட்டுக்கு
விண்ணப்பம் செய்வராமோ பயணம்
துதிசெய்து இறையை வேண்டி
துவங்கிடும் இக்காலத்தில் அவலம்
பதித்தொரு பயணமாயின் பல
விபத்துகள் நிகழ்ந்து மரணம் வந்து
பக்கத்தில் யமனோடு நிற்குமாமே

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்





## பாப்பாவும் பாரதியும்

பாட்டுக்கொரு புலவன் பாப்பா- அந்தப்
பாரதியைப் பாடவேண்டும் பாப்பா
தமிழுக்கொரு புலவன் பாப்பா- அவனைத்
தரணியில் நாம் போற்ற வேண்டும் பாப்பா

தமிழ்மொழிபோல் இனிய மொழி பாப்பா-இந்தத்
தாரணியில் இல்லையென்றான் பாப்பா
அமிழ்தின் இனியதென்றான் பாப்பா- எங்கள்
அன்னை தமிழ்மொழி என்றான் பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு என்ற
கவிஞனைப் பாடவேண்டும் பாப்பா
மாலை முழுதும் விளையாட்டு- என்று
மாணவர்க்குச் சொல்லிவைத்தான் பாப்பா

பயந்து ஒதுங்காதே பாப்பா- ஒருபோதும்
பாவச்செயல் செய்யாதே பாப்பா
துணிந்து நிமிர்ந்து நில்லு பாப்பா- ஒரு
துன்பம் உனை அணுகாது பாப்பா

முண்டாசுக் கவிஞனவன் பாப்பா- நல்ல
முத்து முத்தாய்க் கவிதை சொன்னான் பாப்பா
அதை விண்டுரைக்க முடியாது பாப்பா- அவன்
வேகம் நமக்கில்லையடி பாப்பா!

பாரதியைப் படித்திட வேண்டும்- நீ
பண்போடு வாழ்ந்திட வேண்டும்
நல்லவனாய் வாழ்ந்திட வேண்டும்- உன்னை
நானிலம் போற்றிட வேண்டும்

பாரதி-தாசன், கந்தபேரின்பம்

## நோய் தீர்க்கும் பழவர்க்கம்

தானே கனியும் கனியைக்
கல்லாலடித்துக் கனிய வைக்கும்
பொல்லாத மனிதம்; இரக்கம் சிறிதும்
இல்லாத பொழுது உயிரைக் கொல்லும்
கொடிய மருந்தை பழத்தில் விசிறிப்
பழுக்கச் செய்து பாதையோரம்
பழக்கடை போட்டு; அதற்கும்
விளக்கம் சொல்லி வியாபாரம்
செய்யும் அக்கிரமம் சகிக்கவோ?
ஐயகோ!பழமுண்ணவும் முடியுமோ?

பண்டிகைக் காலத்தில் வாழைக்காய்களை
தொகையாய்க் கட்டிக் கடையோரம்
வண்டியிலே கொண்டுவந்து மொத்த வியாபாரம்
செய்வதில் கடும் உற்சாகம் தெரியும்
ஒரே நாளில் காய்களெல்லாம் மஞ்சளாகும்
உற்சவங்களில் பல் விலையில் விற்பதற்கும்
அர்ச்சனைப் பொருட்கள் தயாராகும்
நோய் நொடியில் படுப்பவரும் துடிப்பவரும்
விற்றமின்கள் கூடிவரவேண்டும் என்றும்
பெற்றவர்கள் தேடிவரும் பழவர்க்கம்

க.குகன், முள்ளியவளை

## சமத்துவம்

மேல் வீட்டு மரக்கறித் தோட்டத்தில்
கோட்டுச் சூட்டுடன் பொம்மை...
கீழ்வீட்டு பொம்மைகள்
கிழிந்த கோமணத்தோடு!
உயர்வும் தாழ்வும்
ஒரு முகட்டில்
இதுதான் நியதி நம் நாட்டில்!
சமத்துவம் பேசும் சான்றோரே
சாதியம் பார்க்கும்
சபையோரே
சற்றுச் சிந்தியுங்கள்!

விவேகானந்தனூர் சதீஸ்

## புறக்குடத்து நீராய்

வாழத் தெரிந்தவர்களும்
வால் பிடிக்கத் தெரிந்தவர்களும்
வாழும் ஊரில்
வாள் எடுத்து வீரம் பேசி
பயன் ஏது வந்துவிடப் போகிறது

தூய உள்ளத்தோன் என்பது
வெறும் தூறல் மட்டுமே தவிர
தலை துவட்டுவதற்கு- அது
துவாய் ஆகிவிடாதே!

பாவி பாவி என்பார் ஊரில்
அவன்தான் பணக்காரனாய் இருப்பான்
பாவப்பணம் பாவம் என்பார்
அவன் பார்போற்ற வாழ்வானே
ஒழிய பரதேசியாய் போகான்

ஏவிவிட பலர் உண்டு
புத்திசொல்லி தட்டிக் கொடுத்தான்
இங்கு ஆட்கள் இல்லை
ஏனென்றால்
நல்லவர்க்குத்தான் இங்கு பஞ்சமாச்சே


மேகம் முட்டும்
பின் மழை பொழியும்
பயிர் தாகம் தீரும்
ஊர் பச்சைப் பசேலாகும்.
இப்போது அது வெறும்
கதைகளும் கவிகளுமாக...

ஏன்...
இங்கு எதுவுமே நிரந்தரமில்லைதான்
ஆனாலும்
குறுகிய இந்த வாழ்வை
கொஞ்சம் நேர்மையாய் வாழலாமே

நரகத்தை நம்பாதவர்க்கு
இவை எவையும்
புறக்குடத்து நீராய்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 462



## விவசாய அசேதனத்தால்

கழுத்து உளையக் குஞ்சு
கடும் தாகம் தீர்ப்பதற்கு
செழுமை தந்த நீரூற்று
சீரழிந்து உப்புக்கரித்ததுவாய்
அழுக்கடையச் செய்தோமே
அதி விவசாய அசேதனத்தால்
உழுதுண்டு வாழ்வதற்கே
உரிய மழை தானேதுனக்கு

வாகை வளவன்
நாரந்தனை

## மௌனத்தின் தேடல் -463



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தாகம் தீர்ந்தது

வாட்டும் வரட்சியால்
நம் கிணறுகள் எல்லாம்
இன்று வற்றி விட்டன
வீதியில் யாரோ
ஒரு புண்ணியவான்
அன்று அமைத்த நீர்க்குழாய்
இன்று இந்தச் சிறுவனின்
தாகம் தீர்க்குதடா

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## அப்பு எம் உயிர்

பிருதிவி அப்பு தேயு வாயு
பிரமாண்ட ஆகாய ஐம்பூதம்
உருண்டு சுழலும் பிரபஞ்ச
உட்பொருளில் ஒன்றான
அப்பு எனும் உயிர் காக்கும்
ஆதாரம் உலகிற்கே நீர்
தப்பாது எம் உயிரான குருதி
தரிப்பதற்கே மூலம் தண்ணீரே!

கந்தன்மைந்தன்
காவலூர்

## இருக்கும் இடத்தை நாடு

தாகத்தின் அதிகத்தால்
தவித்த சிறுவன்
தண்ணீர் அருந்த
குழாயைத் திறக்க
நா நனைக்க
நீர் சொட்ட
நீரற்ற குழாயை
நீ ஏன் திறந்தாய்?
அரசியல் தீர்வுக்காய்
ஏங்கும் தமிழர்
நிலைபோல் ஆனது
இன்று உன் நிலை
தாகம் தீர நீர்பருக
நீர் இருக்கும்
இடத்தை நாடு
இலவுகாத்த கிளியாய்
ஏங்காதே இன்றும்

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

## பாலகன் அறிவான் நீரின் பெருமை

வரண்டு விட்ட
நாவிற்கு
நீர்வேண்டும் தம்பி
நீர்கொடுக்கும் குழாயை
பிடுங்கி எடுத்து
மிகச்சிறிதான
நீரை மட்டும்
குடிக்கின்றாய்
போலும்
எடுத்துவிட்ட குழாயை
பொருத்திவிடடா தம்பி
உன் பின்னால்
தாகத்துடன்
வருபவர்கள்
நிலை குறித்து
பொருத்திவிடடா தம்பி

அபி குலமாலிகா
சங்கானை

## தாகம் தீர்ந்துவிடாது

தண்ணீர்க் குழாயும்
எட்டவில்லை
தண்ணீரும் கிட்டவில்லை
சிந்தி வழியும் நீரைக் குடித்து
தாகம் தீர்ந்துவிடாது
ஏதும் அறியாத
இந்தப் பாலகனுக்கு
தண்ணீர் கொடுப்பார் யாரோ?

ச.பிரநிதன், மட்டுவில்

## ஓரறிவென்றா...

முன்னைய காலங்களில்
மும்மாரி பொழிந்து மண்
தன்மானம் காத்து பச்சை
தளிர் மூடிச் செழித்ததனை
இன்றுணரா மாந்தர்க்கு
ஏன் மரங்கள் ஓரறிவென்றா
தன்னலத்திற்காக தறித்ததால்
தண்ணீர் இப்பிஞ்சுக்காகிடுமா

த.சிவகாமி
நல்லூர்

## வறண்ட நிலமாக்கி

குளங்களிலே நீரில்லை
குழாய்களிலும் நீரில்லை
வளங்கொழித்த மண்ணை
வறண்ட நிலமாக்கிய நாம்
அளப்பரிய காடுகளை அழித்து
அநியாயம் அனல்கொட்டி
புளங்குதற்கே நீரிலையா
புனர்வாழ்வு கிட்டிடுமா?

தவகந்தன், தாவடி

## மழைத்துளி

விதைவிழும் பூமியெங்கும்
மழைத்துளிக்காய் காத்து
இருக்கும் அரும்பு! முளை
வந்து முகில்களை யாசிக்கும்
பூத்துக்காய்த்து இயற்கை
மகிழ்விக்கும்! ஆபாசமில்லை
பாசம் மட்டுமே அவற்றுக்கு
உண்டு, உலகை வாழவைப்பதில்
இயற்கை அன்னையை காப்போம்!

இ.ஜெ.பாலன்

# அங்கேயும் மனிதர்கள்

இஞ்சேருமப்பா கொண்ணர் வாறார் போல் கிழக்கு. ஒருக்கா வெளியில் வாரும். ஏனண்ணே இந்த வெயிலுக்கால். நல்லாய் களைச்சுப் போனியள் போல கிடக்கு. ஓமடி பிள்ளை கனநாளாய்ப் போச்சு. இங்கை வந்தும் அதுதான். நான் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு எண்ணெய் வாங்க வந்தனான். உங்களையுமொருக்காப் பார்த்திட்டுப் போகலாமெண்டுதான். எங்கை இவை பிள்ளையளைக் காணேல்ல. சாந்தி இப்பதானண்ணே அறநெறி வகுப்புப் பிள்ளையளுக்குப் பாடம் சொல்லித் தரவெனப் போனவள். மங்கை பல்கலைக்கழகம் போய்விட்டாள். மலர் வாசிகசாலைக்குப் போய் வாறன் எண்டு போனவள் இனி வந்திடுவாள்.

என்னடி பிள்ளை ஏதாவது பிரச்சினையே? முகமெல்லாம் வாடிக்கிடக்கு. என்ன சம்பந்தி பேசாமல் யோசனையிலிருக்கிறியள். ஒன்றுமில்லையப்பா. கடும் வெயிலாக் கிடக்கு என்ன?

வெயிலுக்கால் வந்த எனக்கு களைப்பில்லை. வீட்டில் இருக்கிறவருக்கு வெயில் கடுமையாயிருக்காம். கேளடி பிள்ளை கதையை. அதொன்றும் இல்லை அண்ணே கேட்பார் இல்லாமல் போனதால் மரங்களைக் கண்டபடி வெட்டி எறிஞ்சதாலை வெயில் வெளியிலயும் சரி வீட்டுக்கையும் சரி வெக்கையாகத்தானே இருக்கு. அது தான் முகம் வாட்டமாயிருக்கார். போங்கோ கிணற்றடியில் போய் முகத்தைக் கழுவி விட்டு வாங்கோ.

ஏன் அவரைக் கலைக்கிறாய், இப்படி முகவாட்டத்தோடை உங்களை நான் ஒரு நாளும் காணேல்ல. பிரச்சினையென்றால் சொல்லி அழுவாய் அல்லது ஆலோசனை கேட்பாய். இன்று உங்கடை நடத்தை சரியில்லை.

அதை விடண்ணே. இப்ப கால்மூட்டு உளைவுகள் எப்படியிருக்கு? நல்ல மூலிகைத் தைலம் தருவினயே. பூசிவிட்டால் 2-3 நாட்களில் வலி பறந்திடும். நீ பேச்சை மாற்றாதை. எனது கால் மூட்டு வருத்தம் கடைசிவரை என்னோட கூட வரும் போல தான் கிடக்கு. எண்ணெய் பூசினால் குணமாகும். குணமாகிட்டுத்தானே என்று கவனிக்காமல் விட்டால் பழையபடி வலியெடுக்கும். அது இருக்கட்டும். நீங்கள் என்னட்டை மறைக்கின்ற பிரச்சினை என்ன என்று சொல்லுங்கோ. சம்பந்தி எழும்பிப் போக வேண்டாம். இருங்கோ என்ன விடயத்தை விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் கஷ்டப்படுகிறியள்.

ஏனண்ணே நீங்கள் ஒன்றும் அறியவில்லையோ? மாலதி உங்களுக்கு ஒன்றும் சொல்வதில்லையோ? அவள் எப்படி இருக்கிறாள்? இஞ்சை பார் பிள்ளை. சுற்றிவளைக்காதை என்ன விடயம் என்று கூறினால்தானே எனக்கு விளங்கும்.

வேந்தன் மாலதியோட கதைக்கிறவனே? மாலதி எப்பவும் போல சந்தோசமாக இருக்கிறாள் தானே, பேரன் தனுஷ் இப்பவும் குழப்படி தானோ? அதெல்லாம் நல்லாயிருக்கினம். ஏன்வேந்தனுக்கு என்ன? சம்பந்தி நீங்களென்றாலும் கூறுங்கோ இப்படி அசட்டுத்தனமாய் இருந்தால் என்ன செய்யிறது.

எல்லாத்தையும் உங்கட தங்கச்சிகிட்ட கேட்டிட்டு முடிவெடுங்கோ?என்னப்பா? என்ன நடந்தது? வேந்தன் பழையபடியும் பிரச்சினைக்க மாட்டிக் கொண்டாரா? சொல்லுங்கோ? எனக்கு நெஞ்சு பதறுது.

அண்ணை ஆவேசப்படாதை. அதொன்றும் இல்லை. எல்லாம் சரி வரும். நீ வருத்தக்காரன் அமைதியாய் இரு. பொறுமையாய்க்கேள். இவர் ஆறுமுகத்தாற்ற பெடியன் லண்டனில் இருந்து வந்து நிக்கிறானாம். நேற்று இவரை வழியில் கண்டு கதைக்கேக்க அப்பா வேந்தனின் சுக நலன்களை அவரிடம் கேட்டிருக்கிறார். கனகாலமாய் எங்களோடை அவன் கதைக்கவில்லை. தங்கைமாரிலே உயிரை வைச்சிருக்கிறான். அவளவையோடையும் கதைக்கேல்ல. அது சரி கிடக்கட்டும். ஆறுமுகத்தாற்ர பெடியன் என்ன கூறினவன் அதைச் சொல்லு முதலில். வேந்தன் சுகமாயும் வசதி வாய்ப்புக்களுடனும் இருக்கிறானாம்.



சிறுகதை

ம்ம். என்னன்டண்ணே சொல்லுறது? நீங்கள் இவனிலை வைத்திருந்த மதிப்பு மரியாதையைக் குறைச்சுட்டான் போலக் கிடக்கண்ணே. உந்த ஒப்பாரியள விட்டுட்டு விடயத்தை சொல்லு என்னவாம்.

அவன் அங்கையொரு வெள்ளைக்காரப் பெட்டையோட திரியுறானாம். உதே சங்கதி உவன் ஆறுமுகத்தாற்ர பெடி உங்களுக்கு நல்லா உரு ஏத்தியிருக்கிறான். நீங்களும் உங்கடை மகன் அப்பிடி நடப்பானோ என எண்ணிப் பார்க்காமல் நல்லாய்க் குழம்பிப் போனியள். அப்படியே உன்ரை பிள்ளையளை வளர்த்தனீங்கள். எண்ணிப் பார்க்க மாட்டியளே? ஆறுமுகத்தாரைப்போலத்தானே பிள்ளையும் குழப்பக்காரனாயிருப்பான் போலக்கிடக்கு. உவன் ஏதாவது உதவி கேட்டிருப்பான். வேந்தன் இவையளின்ர குணமறிந்திருக்கிறதாலே குடுக்காமல் விட்டிருப்பான். அதுதான் புரளி கிளப்பி விட்டிருக்கிறான்.

அங்கை வெள்ளைக்காரப் பெட்டையளும் வேலைக்குப் போய் வருங்கள். கூட வேலை செய்யிற பிள்ளைகளுடன் இவர் போயிருப்பார். என்ன கல்யாணமே கட்டிட்டார். இல்லை இலங்கையிலிருந்து அகதிகளாய் பெடியங்கள் வருவானாம். நாங்கள் கல்யாணம் கட்டலாம் என்று அங்கத்தேப் பெட்டையள் அலையுதுகளாமோ? விசர்க் கதைகளை விட்டுட்டு எழும்புங்கோ. தண்ணி பென்னி வைத்துக் குடித்து விட்டுப் பார்க்கிற அலுவல்களைப் பாருங்கோ. அங்கை பார் மலரும் வாறாள். நீங்கள் கவலைப்படாமல் பிள்ளைகளைப் பாருங்கோ. பிள்ளைகளுமெல்லோ கவலைப் படுங்கள். முதலில் எழும்பிப் பார்க்கிற கருமங்களைப் பாருங்கள் நான் வாறன்.

அண்ணே தண்ணிபென்னியும் குடிக்காமல் இந்த வெயிலுக்கால் வெளிக்கிடுறியள். கொஞ்சம் இருங்கோ சமைக்கிறன் சாப்பிட்டுட்டுப் போங்கோ அண்ணே. இல்லையடி 2.30 மணி பஸ்ஸை விட்டால் 5 மணிக்குத்தான் மற்ற பஸ். நான் போறன். அண்ணியும் அங்கை காத்திருப்பா. ரவுனுக்கை கொஞ்சம் நெத்தலிக் கருவாடும் வாங்கிப் போகவேணும். மாலதி வழிக்கு வழி சொல்லிவிட்டவள்.

ஓமண்ணை நெத்திலியில நிறைய அயடீனும் மக்னீசியமும் இருக்குது. வளருகிற பிள்ளைகளுக்கும் வயதானவர்களுக்கும் மிக நல்லது. மாமா எப்ப வந்தனீங்கள்? நான் நூலகத்திற்குப் போய் வாறன். இருங்கோ மாமா சாப்பிட்டுப் போகலாம். இல்லை பிள்ளை வேலைகள் இருக்கு. பிறகொரு நாளைக்கு வாறன் சரிதானே.

சரி மாமா. மாலா இங்கை வாடி பிள்ளை. வேந்தன் உன்னோட ஏதாவது கதைச்சவரோ? ஏதாவது என்றால் என்ன அப்பா? இல்லை அங்கை வேலையள் எப்படி? கடும் குளிரெண்டு அறியுறன். அதுபற்றி... வேறு ஏதாவதும்..?

ஏனப்பா தயங்குகிறீர்கள். என்ன விடயம். இல்லை இவன் ஆறுமுகத்தான்ரை பெடியன் யாழ்ப்பாணம் வந்து நிற்கிறானாம். மாமாவுக்கு ஏதோ சொன்னவனாம் அது பற்றித்தான். ஓ அதுவா இவ்வளவு விரைவாக வந்து சேர்ந்துவிட்டதா செய்தி?

என்ன உனக்கு ஏதோ தெரியும் போல். ஓம் அப்பா எல்லா விபரமும் சொல்லியிருக்கிறார். அங்கையொரு வெள்ளைக்காரப் பெட்டையை கல்யாணம் கட்டியிருக்கிறார் என்றே கதைக்கினம். அது பெட்டையில்லையப்பா மனுஷி. 41-45 வயசுள்ள மனுஷியப்பா.

என்ன பிள்ளை சொல்லுறாய். தனித்துத் தனித்துச் சொல்லிக்கொண்டிருக்க எனக்கேலாது. ஒரு ஆட்டோ பிடியுங்கோ மாமி வீட்டை போவம். எல்லோருக்கும் முன்னால சொல்லுறன் உங்களைப் போலத் தான் அவையளும் தவிச்சுக் கொண்டிருப்பினம். ஓமடி பிள்ளை அவை இன்றைக்குச் சமைக்கவும் இல்லைப் போல. ஆளுக்கொரு மூலையில் இருந்து யோசித்துக் கொண்டிருக்கின. அதுவும் நல்லாய்ப் போச்சு. போகேக்கை 2-3 பார்சல் சோறும் கட்டிக்கொண்டு போவம்.

என்னடி பிள்ளை. நாங்கள் பதற்றத்தில இருக்கிறம். நீ செல்லம் கொஞ்சிக் கொண்டிருக்கிறாய். பொறுங்கோ பொறுங்கோ எல்லாம் சொல்லுறன். எல்லோரையும் சேர்த்து வைச்சுச் சொல்லுறன் அமைதியாயிருங்கோ.

மாமி என்ன யோசிக்கிறியள். மலர் இங்க வாடி. எங்கை நிற்கிறாய். தண்ணீரும் கொண்டுவா அக்கா. ஆட்களையும் கூப்பிடு. மாமா எழும்புங்கோ. கைகால் கழுவிக்கொண்டு வாருங்கோ. சாப்பிடுவம்.

என்ன பிள்ளை இதெல்லாம்?.என்ன இதெல்லாம்? இண்டைக்குச் சமைக்கவில்லையென்பது எனக்கு நல்லாய்த் தெரியும். அதுதான் வறேக்கை பார்சல் சாப்பாடு எடுத்து வந்தனான். உங்களுக்கு உங்கட பிள்ளையில நம்பிக்கை இல்லையோ? யாரும் ஏதாவது கூறினால் உடனே நம்பி விடுவீங்களாக்கும்.

மங்கை நீ பல்கலைக்கழகம் போய்ப் படித்தாலும் நீயும் குழம்புவியா? அண்ணே உன்னில் தானே உயிராய் இருக்கிறார். அவரை இந்தளவுதான் எல்லோரும் புரிந்து வைத்திருக்கிறீர்கள்.

இல்லை பிள்ளை. நீங்கள் அறிந்தவை உண்மையென்றால் நீதான் அதிகம் பாதிக்கப்படப் போறாய். நீ விளையாட்டாய் எடுக்காதே.

மாமி விடயங்களை தீர அறியாமல் முடிவுகள் எடுத்தால் உங்களைப் போலத் தான் எல்லாரும் கவலைப்படுவினம். என்ன சொல்லுறாய் பிள்ளை? முதலில் எல்லாரும் வாருங்கோ. அப்பா அம்மாவும் வாருங்கோ. எவ்வளவு காலமாய்ப் போய்ச்சு. இப்படி நாங்களெல்லாம் ஒன்றாய்க் கூடிச்சாப்பிட்டு.

சரி... சரி... இப்ப சொல்லு என்ன நடக்குது இங்கை? மாமா, மாமி எல்லாரும் கேட்டுக்கொள்ளுங்கோ. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இவர் எனக்கு தொலைபேசியில் எல்லாம்கூறினார். உங்களையெல்லாம் ஏன் சங்கடப்படுத்துவான் எண்டு நான் தான் ஒன்றும் கூறாமலிருந்து விட்டேன். என்னவாம்? என்ன நடந்ததாம்?

மாமி இவருடைய கல்வித்தரத்துக்கு இங்க வேலை கிடைக்காதது ஒருபுறமிருக்க, நாட்டில் அந்தக் காலங்களில் நிலவிய சூழ்நிலைகளால் அவர் இஷ்டப்படாத போதும் அங்கினை இங்கினை கடன்பட்டு அவரை வெளிநாடு போகவென்று அனுப்பிவிட ஏஜென்சிக்காரன் மலேசியாவில் கொண்டு போய்விட்டுட்டு தலைமறைவாகிப் போக, அங்க சட்டத்துக்கும் பொலிசுக்கும் பயந்து சீவிக்கிற அகதிப் பிள்ளைகளுடன் அகதியாய் திரிந்து சாப்பாடும் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வேளை மாமியின் பிரார்த்தனை விரதங்களின் பயனாய் கப்பலொன்றில் ஏறி எங்கு போறதென்று தெரியாமல் அலைந்து ஒருவாறு லண்டனில் இறங்கிவிட்டார். அகதியென்று பதியப்போக தொடர்ச்சியாகவும் பொருந்தக் கூடியவாறும். பொய்சொல்லத் தெரியாத காரணத்தால் அகதியாக பதியமுடியாமல் போக அனுமதியின்றி களவாக வேலைகள் செய்துதான் இங்க காசு அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இதுக்கும் இடைஞ்சல் வாற மாதிரி இவரைப் பிடித்து சிறைக்குள் வைத்துவிட்டார்கள். எந்த நேரத்திலும் நாடு கடத்தப்படலாம் என்ற சூழ்நிலையில் இந்த மனுஷி அஞ்சலாதான் இவரை பிணை எடுத்ததாம். தன்னுடைய பண்ணையில் வேலையும் போட்டுக் கொடுத்ததாம். இவர் விவசாயத்தில் விலங்கு வேளாண்மையும் கற்றிருந்ததால் பண்டி வளர்க்கவும் கோழி வ்ளர்க்கவும் அமர்த்தப்பட்டாராம். நல்ல சம்பளமும் தந்தாவாம். இவருடைய ஆற்றல், அறிவு, பழக்கவழக்கங்களையும் கண்டு இவர்மேல் தனி கரிசனமும் கொண்டு வதிவிடச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்க இவரைப் பதிவுத்திருமணம்செய்து கொண்டாராம்.

அவருடைய புருசன் இவரை விவாகரத்துப் பண்ணிவிட்டு வேறு திருமணம் செய்து கொண்டமையும் எல்லாவற்றுக்கும் வசதியாய் இருந்தது. இவரைப் போல பல பண்ணையாளர்கள் இடைக்கிடை எவ்வாறு சிறைச்சாலைக்கு வருவினமாம். தங்கள் மனதுக்குச் சரிப்பட்டு வருவார் எனக் கருதுபவர்களை பிணை எடுத்துச் செல்வார்களாம். இவர்களை அடிமை போல நடத்துவினமாம். குழப்படி விட்டால் மீண்டும் பிடித்துக் கொடுக்கலாம் என்றும் கருதுகிறார்களாம். நாங்கள் வெள்ளைக்காரர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்த பரம்பரை தானே. எசமான விசுவாசமும் ஒழுங்கும் கடும் உழைப்பும் எங்களுக்கு அவைதானே கற்றுத் தந்தவர்கள். அதனால் இவரை அவவுக்குப் பிடிச்சுப் போட்டுதாம். அவரைப் போல பல அகதிகள் வதிவிடச் சான்றிதழுக்காக பேப்பர் கல்யாணம் செய்து கொண்டு இருக்கினமாம். பேப்பர் கல்யாணம் கிடைப்பது அங்கு ஒவ்வொருவருக்கும் அதிர்ஷ்டம் கிடைச்சமாதிரித்தான் என்று கூறுவார்.


மாமா அடிக்கடி கூறுவது போலக் கடவுள் நல்லவர்களைத் தண்டிப்பது நல்லது செய்வது போல இப்ப எல்லாம் நல்லது நடந்து முடிந்து இப்ப இவரது பெயரில வீடும் வாங்கித் தரமுயல்வதுடன் ஒருபண்ணையும் இவருக்கென அமைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளாவாம். கடவுள் உருவில் வந்த அந்தப் பெண்ணை பொண்டாட்டி என்று சொன்னால் கடவுளுக்கே அடுக்குமா? சொன்னவன்ட நாக்கு அழுகிப்போகாதா?

வீடு வாங்கியதும் எங்களை பொன்சர் பண்ண உள்ளாராம். இவை அனைத்தும் நடந்து முடிந்த பின்னர் சொல்லலாம் என நான் எண்ணியது பிழைதான். செய்தி முன்னமே தெரிந்திருந்தால் இவ்வளவு குழப்பங்களும் கவலைகளும் வந்திருக்காது. என்னை மன்னித்துவிடுங்கள்.

என்ன பிள்ளை சொல்லுறாய்? நீ கூறுவதெல்லாம் எம்மை ஆறுதல் படுத்துவதற்கு இல்லைதானே. ஓமோம் மாமி நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை என்று கூறி மகிழவே முழுக்குடும்பமும் மகிழ்ந்து கொண்டாடியது.

மயூரதன்
யாழ்ப்பாணம்

## அந்தக் கால ஐன்ஸ்டீன் ஹீரோ





பேசினாலோ, அலட்டிக்கொண்டாலோ, 'பெரிய ஹீரோன்னு நெனப்பு' எனச் சொல்வோம். சினிமாவில், கதையின் நாயகனா நடிப்பவரை ஹீரோ எனச் சொல்வோம். அந்தப் பெயர் வரக் காரணமான மனிதர் தான், ஹீரோ. Hero of Alexandria எனச் சொல்லப்படும் சுப்பர் விஞ்ஞானி. பலவகையான கண்டுபிடிப்புகள் மூலம், அந்தக் காலத்தின் ஐன்ஸ்டீனாக மிளிர்ந்தவர்.

கி.பி.1000இல் பிறந்தவர், ஹீரோ. உலகெங்கும் சென்று, கல்வி கற்றதாக வரலாறு சொல்கிறது. 19 வயதிலேயே அலெக்சாந்திரியாவின் பிரபல கல்வியகமான 'முசியேம்' பள்ளியில் கணித ஆசிரியர் ஆனார்.

அந்த முசியேமில் உலகின் முதல் அருங்காட்சியகத்தை 21 வயதில் ஒரு மைல் நீளத்துக்கு அமைத்து, அனைவருக்கும் ஆச்சர்ய அதிர்ச்சியைக் கொடுத்தார் ஹீரோ. உலகம் முழுதும் அருங்காட்சியம் எங்கே வைத்தாலும், அதற்கு மியூசியம் (முசியேம்) என்ற பெயர் வந்தது அங்கிருந்துதான். அந்தக் காலத்தில் கணிதம், இயற்பியல். இயந்திரவியல் மற்றும் இறப்பர் குறித்த அறிவியலில் மாமேதையாக மிளிர்ந்தவர், ஹீரோ.

தானியங்கி பொருட்கள் அறிமுகமானது இருபதாம் நூற்றாண்டில்தான். ஆனால், அப்போதே அலெக்சாந்திரியாவில் ஏழு



விதமான தானியங்கி சாதனங்களை அறிமுகம் செய்திருந்தார் ஹீரோ. அவற்றில் முக்கியமானது, தானியங்கிக் கதவுகள்.

அலெக்சாந்திரியா நூலகம் உலகப் பிரசித்திபெற்றது. அங்கே வரும் ஒருவர், மூடிய கதவின் முன்பு நிற்பார். அவரது எடையில், அந்த இடத்தின் அடிப்பகுதியில், மிக அழுத்தத்தோடு தண்ணீர் வெளியேறி, காற்றினால் புறந்தள்ளப்படும். அது தரும் மிகு அழுத்தம் குழாய் வழியே, மேலும் வேகத்தோடு நீரைத் தள்ளி, பிரமாண்ட கதவுகளைத் திறக்கும். பிறகு, நிற்பவர் கடந்தால், பழையபடி எதிர்த்திசையில் இதே விடயம் செயற்பட்டு கதவு மூடிக்கொள்ளும். நூலகத்துக்கு புத்தகம் படிக்கச் சென்றவர்களைவிட தானாகக் கதவு திறக்கும் சூட்சுமத்தை அனுபவிக்கச் சென்றவர்களே அதிகம்.

'ஹீரோ இயந்திரம்' என ஒரு கருவி போற்றப்படுகிறது. அதுதான், முதல் நீராவி இன்ஜின். கி.பி.1027 ஆம் ஆண்டில், ஹீரோ உருவாக்கிய அதிசயம். குறுகிய துளை வழியே நீராவி வெளியேறி, உருளையைச் சுழல வைக்கும் இந்தக் கருவிதான், பிற்கால நீராவி ரயில் இன்ஜினாகவும் கப்பலாகவும் உருமாறிய அடிப்படை அறிவியல். இதுபோல அலெக்சாந்திரியா கோயிலில் ஒரு தானியங்கிக் கருவி வைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட வெள்ளிக்காசு போட்டால், புனித நீர் சரியாக ஒரு குவளை கொட்டி நின்றுவிடும். ஹீரோ கண்டுபிடித்தவை கருவிகள் மட்டுமல்ல. கணித நிபுணராக அவர், முக்கோணங்களின் பரப்பளவை காண, தனியே ஒரு சமன்பாட்டை வழங்கியவர். அதற்கு, 'ஹீரோ சமன்பாடு' என்றே பெயர். ஒரு எண்ணின் வர்க்க மூலம் காணும் முறையை முதலில் தந்தவர் இவரே.

அதுமட்டுமா? உண்டிவில் என்கிற இறப்பர்-கல் கருவியைத் தந்தவர், இவர்தான். அதையே பெரிய அளவில் செய்து பிரமாண்ட கற்களை எதிரி படை மீது வீசி கிரேக்கப் போர் வீரர்கள் அசத்தினார்கள்.

இப்படி அறிவியலின் அற்புதங்களைச் சாதித்த ஹீரோ, அந்தக் கால ஐன்ஸ்டீன் என்பதில் சந்தேகமே இல்லை.

# இராணுவத் தளபதி நிய… இழுபறியின் உச்ச…



கடுமையான இழுபறிகளுக்குப் பின்னர், இலங்கை இராணுவத்தின் 23 ஆவது தளபதியாக, லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார். இராணுவத் தளபதி ஒருவரின் நியமன விடயத்தில், இலங்கையின் ஜனாதிபதி ஒருவர் எதிர்கொண்ட மிக நெருக்கடியான தருணம் இதுவாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு முன்னரும் இராணுவத் தளபதி நியமனங்களின் போது இழுபறிகள், முரண்பாடுகள், குழிபறிப்புகள் நிகழ்ந்திருக்கின்றன.

சேவை மூப்பின் அடிப்படையில் முன்னால் இருந்த திறமைமிக்க பல அதிகாரிகள் வாய்ப்பு அளிக்கப்படாமல் ஓரம்கட்டப்பட்டிருக்கின்றனர். சேவை மூப்பில், பின்வரிசையில் இருந்தவர்கள், அரசியல் செல்வாக்கின் அடிப்படையில், தளபதி ஆகியிருக்கிறார்கள்.

எனினும், எந்தவொரு இராணுவத் தளபதி நியமனத்தின் போதும், புற அழுத்தங்களை ஜனாதிபதியோ, அரசாங்கமோ இதுவரை எதிர்கொண்டதில்லை.

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனம் தான், கடைசி நேரம் வரை முடிவெடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிக்கும் முடிவு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், எடுக்கப்பட்டது இப்போது தான் என்றில்லை. அந்த முடிவு, ஜூலை 14ஆம் திகதியுடன் ஓய்வுபெறவிருந்த அவருக்கு, ஆறு மாத சேவை நீடிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியபோதே, எடுக்கப்பட்டு விட்டது.

ஆனால், சர்வதேச அழுத்தங்களைச் சமாளித்து, அவருக்கு இந்த நியமனத்தை அளிப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அரசியல் சூழல் மாற்றங்களும், மேற்குலகுடனான உறவுகளில் ஏற்பட்டு வந்த விரிசல்களும், லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிக்கும் முடிவை எடுப்பதற்கு ஒரு காரணியாக இருந்தது.

அந்த முடிவை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான உள்ளக நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்த நியமனம் நடக்கப் போவதை அறிந்து கொண்ட கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் பலரும், அதனை தடுக்க முயன்றனர். இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்தும் அவர்கள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கத் தவறவில்லை.

ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவின் ஓய்வு அல்லது சேவை நீடிப்பு மற்றும் புதிய இராணுவத் தளபதி குறித்த நியமனம் குறித்து அறிவிப்பு, கடந்த வாரத்துக்கு முந்திய வாரமே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வழக்கத்துக்கு மாறாகவே எல்லாம் நடந்தன.

ஓகஸ்ட் 17ஆம் திகதியுடன் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஓய்வுபெற்றுவிட்ட போதும், அவருக்கான பிரியாவிடை இராணுவத் தலைமையகத்தில் ஒழுங்கு செய்யப்படவில்லை. அவர் சேவைநீடிப்பில் இருக்கிறாரா? ஓய்வு பெற்று விட்டாரா? என்று அறிவிக்கப்படவும் இல்லை.

இதனால், இராணுவத் தளபதி ஒருவர் இல்லாத குழப்பம், கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் வரை நீடித்தது. 18ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், புதிய இராணுவத் தளபதிக்கான நியமனம் 19ஆம் திகதி மதியம் தான் ஜனாதிபதி செயலகத்தில், வைத்து, வழங்கப்பட்டது.

இதனால், 20ஆம் திகதியே ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுக்கு பிரியாவிடை அளித்து, வழியனுப்பும் நிகழ்வும், இராணுவத் தளபதிக்குரிய அடையாளச் சின்னமான 'பிரம்பு' கையளிக்கும் நிகழ்வும் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றன.

லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமிக்கும் முடிவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னரே எடுத்து விட்டாலும், அதனை நடைமுறைப்படுத்துவதில் கடுமையான அழுத்தங்களை எதிர்கொண்டதே இந்த இழுபறிக்குக் காரணம்.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் இராஜதந்திரிகள் இந்த நியமனத்தை எதிர்த்தனர். அதன் விளைவாக, இலங்கையுடனான இராணுவ உறவுகள் பாதிக்கப்படும், என்று எச்சரித்தனர். இதனால் தான், ஜனாதிபதியினால் முடிவெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. கடைசியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியான முடிவை எடுத்தபோது, அதற்கு கடுமையான எதிர்வினைகள் சர்வதேச மட்டத்தில் இருந்து வந்தன.

இந்த நியமனத்துக்கு எதிர்ப்புகள், கண்டனங்கள், எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். ஆனால் இந்தளவுக்கு எதிர்ப்புகள் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

லெப். ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமனத்துக்கு எதற்காக சர்வதேச அளவில்- குறிப்பாக மேற்குலக மட்டத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது என்பதற்கு இரண்டு காரணங்க்ள் சொல்லப்படுகின்றன.

ஒன்று- லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள்.

இரண்டு- அவர், வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவராக இருப்பது.

இறுதிக்கட்டப் போரில் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவின் பங்களிப்பு அபரிமிதமானது. அவரது போர்த்திறன், படை நிர்வாக ஆளுமை என்பன கேள்விக்கிடமற்றது.



1984ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த அவர், இலங்கை இராணுவம் முதன்முதலாக பெயரிட்டு நடத்திய 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையில் இருந்து, கடைசியாக மேற்கொண்ட முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் வரை- எல்லா முக்கியமான சண்டைகளிலும் பங்கேற்றவர்.

இறுதிக்கட்டப் போரில், மன்னாரில் தொடங்கி, முள்ளிவாய்க்கால் வரை- 58 ஆவது டிவிசனை வழிநடத்தியவர்.

இந்தப் போரின்போது தான், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறினார் என்று ஐ.நாவினால் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர் என்று இவர் குற்றம் சாட்டப்பட்டு வருகிறார்.

# யமனம் சம்

இவர், மீதான குற்றச்சாட்டுகளுக்கு நம்பக மான ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஐ.நா. விசாரணை அறிக்கைகள் கூறியிருந்தன. இவ் வாறான ஒருவர், இராணுவத் தளபதியாக நிய மிக்கப்பட்டுள்ளமை தான் பிரச்சினையை ஏற் படுத்தியுள்ளது.

இதன் மூலம், பொறுப்புக்கூறல் முயற்சிகள் தடைப்படும், கடந்த நான்கரை ஆண்டுகளாக இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த மறு சீரமைப்புகள் முடங்கும், நல்லிணக்க செயற்றிட் டங்கள் பாதிக்கப்படும், இவற்றுக்கு அப்பால், குற் றம்சாட்டப்பட்ட ஒருவர் தளபதியாகும் போது, பாதிக்கப்பட்டவர்கள் அச்சமடைவர். அது ஒட்டு மொத்த நல்லிணக்க முயற்சிகளையும் தடம் புரளச் செய்யும் என்பதே சர்வதேச கரிசனை யாகும்.

போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்கப்ப டும் என்று ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் உறுதி அளித்திருந்தது. ஆனால் அதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயத்தில், கடந்த நான்கரை ஆண்டு களில் அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தங் களும் போதியளவு கொடுக்கப்படவில்லை.

இந்தநிலையில், பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்து, போர்க்குற்றம்சாட்டப்படும் ஒருவரை துணிச்சலுடன், இராணுவத் தளபதியாக நிய மித்ததை ஐ.நாவினாலும் சரி, மேற்குலகினாலும் சரி பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பெற்



துக் கொண்ட காலஅவகாசத்துக்கு அடுத்த ஆண்டு பொறுப்புச் சொல்ல வேண்டியுள்ள நிலையில் டுள்ள அரசாங்கம், அதிலிருந்து நழுவி, போர்க் குற்றம்சாட்டப்பட்டவர்களை முன்னுரிமைப்படுத் துவது, சர்வதேசத்துக்கு தவறான முன்னுதாரண மாக அமையும் என்பது ஐ.நா. தரப்பின் நிலைப்பாடு.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவோ வேறு விதமாகச் சிந்திக்கிறார்.

அவர், 2015இல் ஆட்சிக்கு வந்தபோது இருந்த மனோநிலையில் இப்போது இல்லை. அப்போது அவர் பலரையும் சமாளிக்க வேண்டியிருந்தது. மன துக்குப் பிடிக்காதவற்றையும் செய்ய வேண்டி யிருந்தது.

அத்தகைய சூழலினால், பல படை அதிகாரிகள் விலகிச் செல்ல நேரிட்டது, பாதுகாப்புத்துறையில் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால் இப்போது அவர் அதையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு நடந்து கொண்டிருக்கிறார். தான் பதவியேற்கும் போது, எவ்வாறான நிலை யில் நாடு இருந்ததோ அதேநிலையில் கொண்டு போய் ஒப்படைக்க முனைகிறார்.

சிங்கள மக்களின் மன நிலை, விருப்புகளை ஒட்டியே அவர் முடிவுகளை எடுக்கத் தொட ங்கியிருக்கிறார். லெப். ஜெனரல் சவேந்திர சில்வாவின் நியமன மும் அவ்வாறானதொரு முடிவு தான்.

இந்த நியமனம் குறித்து அதி கம் நெருக்கடிகளைச் சந்தித்தா லும், அவர் அதனைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனென் றால், அதன் விளைவுகளை எதிர்கொள்ளும் போது, பொறுப்பு வாய்ந்த இடத்தில் அவர் இருக்கப் போவதில்லை. எனவே, கண்ணை மூடிக் கொண்டு அவர், முடிவை எடுத்து விட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த முடிவை எடுக்க வைப்பதில், பல்வேறு தரப்புகள் செல்வாக்குச் செலுத்தியதாக பேசப்படுகிறது.

லெப்.ஜெனரல் சவேந்திர சில் வாவை இராணுவ நியமிப்ப தில், ஜனாதிபதியின் மகள் சதுரி க்கா சிறிசேனவும் செல்வாக்குச் செலுத்தினார் என்றும், அவரு க்காக ஆதரவு தேடினார் என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் முடிவுகளில் சதுரிக்கா சிறிசேன செல்வாக்குச் செலுத்துவதாக முன்னரே பல முறை தகவல்கள் வெளியாகியி ருந்தன.

அதைவிட, லெப்.ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணு வத் தளபதியாக நியமிக்க வேண் டும் எனக் கோரி சமூக வலைத் தளங்களின் மூலமும் கடுமை யான பிரசாரங்கள் முன்னெடுக் கப்பட்டிருந்தன. இதற்குப் பின் னால் கோத்தபாய ராஜபக்ஷ - மகிந்த தரப்பு இருந்திருக்கலாம்.

ஏனென்றால், இந்த நியமன த்தில் மகிந்த தரப்பின் செல்வா க்கு இருந்ததாக வலுவான சந் தேகங்கள் உள்ளன.

காரணம், கோத்தாபய ராஜ பக்ஷவும் சவேந்திர சில்வாவும் மிக நெருக்கமானவர்கள். போர்க் காலத்தில்மிகநெருக்கமாக இணை ந்து செயற்பட்டவர்கள். ஒருவரின் இரகசியத்தை மற்றவர் அறிந்தி ருக்கும் அளவுக்கு இந்த நெருக் கம் இருந்தது.

இறுதிப்போரின் போது கோத் தபாய ராஜபக்ஷவின் நேரடி உத் தரவின் கீழ் லெப்.ஜெனரல் சவே ந்திர சில்வா செயற்பட்டார், அவ ரது உத்தரவுகளை நடைமுறைப் படுத்தினார் என முன்னர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறி யிருந்தார்.

ஆரம்பத்தில் இருந்தே, இரு வரும் முதலாவது கஜபா ரெஜி மென்ட்டில் பணியாற்றிவர்கள். எனவே லெப்.ஜெனரல் சவேந் திர சில்வா இராணுவத் தளபதி யாவதை, ஜனாதிபதி தேர்தலில் நிற்கும் கோத்தபாய ராஜபக்ஷ நிச்சயம் விரும்புவார்.

அதற்காகவே, இந்த நியம னம் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.


அவ்வாறு கோத்தபாய ராஜ பக்ஷவின் விருப்பத்தை, எதிர் பார்ப்பை பூர்த்தி செய்யும் வகை யில், இந்த நியமனம் வழங்கப் பட்டிருந்தால், அது ஒரு வகை யில் வரும் ஜனாதிபதி தேர்தலு க்கும், ஜனநாயகத்துக்கும் கூட அச்சுறுத்தலாக அமையக் கூடும்.

-சுபத்ரா-

## இது நம்ம கதைகள்... 55

# வைச்ச குறி

குறி வைத்தல் என்பது எம் வாழ்வுடன் பின்னிப்பிணைந்த ஒரு விடயம். குழந்தைப் பருவத்திலிருந்து முதுமை வரை ஒவ்வொரு காலகட்டத்திற்குமேற்ப எம் இலக்கு மாற்றம் பெற்றிருக்கலாம், ஆனால் அந்த இலக்கின் மீது நாம் வைத்த குறி வெறித்தனமானதாகவிருந்திருக்கும்.



"வைச்ச குறி" மீது நாம் அசராமல் கண் வைத்திருந்தாலும், பல தடவைகளில் அக்குறி தவறிப் போனதே எம்மவர் பலரின் அனுபவமாகும். சிறுவயதில் மாங்காய்க்குக் குறி வைத்து எறிந்த கல் அயல்வீட்டுக் கூரை ஓட்டைப் பதம் பார்த்தது முதல் பருவ வயதில் கண் வைத்த நம் காதல் கைவிட்டுப் போனது வரை பல குறிகள் தவறிப் போய் வலிகளாய்- வடுக்களாய் இன்னும் மனதில் நீங்காதிருக்கும்.

வைச்ச குறி தவறிப் போனவர்களை ஆங்கிலத்தில் "Born loser" என்ற சொற்றொடரால் அழைப்பது வழக்கம். அது தொடர்பாக "Born loser" என்ற பிரபலமான சித்திரக்கதைத் (cartoon) தொடரே உண்டு.

இனி இவ்வாரக்கதை....

இன்று நட்பு நாடுகளுக்கிடையில் வர்த்தக உடன்படிக்கைகள், கலாசாரப் பரிமாற்றங்கள், இராணுவப் போர் ஒத்திகைகள் என பல பரஸ்பர செயற்பாடுகள் நடைபெறுவது வழமையாகிவிட்டது.



இந்த வகையில் மூன்று நாடுகள் ஒன்றிணைந்து இராணுவ ஒத்திகையை நடத்தின. இதில் பங்குபற்றிய மூன்று விமானிகளுக்கிடையே நட்பு பலமாகியது. ஒத்திகையின் இறுதி நாளில் விமானக்குண்டு வீச்சுப்பயிற்சி நடைபெற்றது. இந்த பயிற்சியை சாட்டாக வைத்து தம் வாழ்விற்கு இடைஞ்சலாக இருப்பவர்களை தீர்த்துக்கட்டுவதென விமானிகள் மூவரும் தமக்குள் தீர்மானித்தனர்.

அமெரிக்க விமானி சொன்னார் "என் முன்னேற்றங்களுக்கு பெரும் இடைஞ்சலாக இருப்பவர் என் மேலதிகாரிதான். அதனால் இப்பயிற்சியின் போது அவர் வீட்டின் மீது குண்டு வீசப்போகிறேன். அத்துடன் அவர் தொல்லை நீங்கிவிடும்."

இந்திய விமானி சற்றுச் சிந்தனைவயப்பட்டவராகச் சொன்னார் "என் வாழ்விற்கு பரமவைரி என் மாமியார் தான். சாந்தமாகவிருக்கும் என் மனைவியை அவ்வவ்போது ஏதாவது கதை சொல்லி உசுப்பேத்தி பத்திரகாளியாக்குவதே என் மாமியார் தான். எனவே அவள் வீட்டை பயிற்சியின் போது நிர்முலமாக்கப்போகிறேன். அதன்பின் தான் என் வாழ்வில் நிம்மதி பிறக்கும்."

இவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நம்ம விமானி சொன்னார் "என் சந்தோஷங்களுக்கு வில்லங்கம் என் மனைவிதான். எனவே என் வீட்டின் மீது குண்டு போடப்போறேன். அதன்பின் என் வாழ்வே ஜாலிதான்".

மூவரும் தத்தமது விமானங்களில் மேலெழுந்து பறந்தனர். தாம் நினைத்தபடி துல்லியமாகக் குண்டுவீசிய திருப்தியுடன் திரும்பினர். மறுநாள் மூவரும் தத்தமது நாடுகளுக்குத் திரும்பினர்.

தன் மேலதிகாரியின் வீடு நிர்மூலமாகி, அந்த அனர்த்தத்தில் அவரும் மாண்டுவிட்டார் என்ற செய்தியை அறிந்து அமெரிக்கர் உள்ளூர மகிழ்ச்சியுற்றார். "இனி நான்தான் Boss" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

இந்தியர் வீட்டையடைந்த போது தன் தாய் இறந்த செய்தியை ஒப்பாரியாகச் சொல்லி கட்டிப்பிடித்துக் கதறியழுதாள் அவர் மனைவி. "தொலைந்தது சனியன்" எனத் தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

நம்மாள் வீடு திரும்பினார். வீடே தரைமட்டமாகியிருக்கும் என நம்பி வந்தவருக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியம். வீடு அப்படியேயிருந்தது. அவர் மனைவி இடுப்பில் கைவைத்தபடி வாசலில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தாள். அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியில் சிலையானார். "என்னப்பா பேயறைந்ததுபோல் திகைச்சுப்போய் நிக்கிறியள்" என்று மனைவி அவரை உலுப்பியபோதுதான் சுயநினைவிற்கு வந்தார். "நேற்று இங்கு விபரீதமேதும் நிகழவில்லையா?" என மனைவியைப் பார்த்துத் திகைப்புடன் கேட்டார். "பெரும் விபரீதமே நிகழ்ந்தது....அதோ அங்கே பாருங்கள்" என்று மனைவி சுட்டிக்காட்டினாள். அவள் சுட்டிய திசையில் திரும்பிப் பார்த்தார் நம்மாள். அங்கே பக்கத்துவீடு தரைமட்டமாகியிருந்தது. ஒரு கணம் திகைத்துப்போனார். பின் சுதாகரித்துக் கொண்டார். "சரி நடந்தது நடந்துவிட்டது இனி இதுதான் நான் வைச்ச குறியென்று கதையளக்க வேண்டியதுதான்" எனத்தன்னை திடப்படுத்திக்கொண்டு வீட்டினுள் காலடிவைத்தார் நம்மாள்.

**நீ விரும்பிய வாழ்க்கை உனக்கு கிடைக்கவில்லையென்று வருந்தாதே,**
**உனக்கு கிடைத்த வாழ்வை விருப்பாக்கிவிடு.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# அமேசன் காடு எரிப்பு மானுடத்திற்கு எதிரான குற்றம்!



அமேசனில் இந்த ஒகஸ்ட் மாதம் வெளியேறியுள்ள காபனின் அளவு எவ்வளவு என்பது, சில நாள்களில் தெரிந்துவிடும்.

2019 ஜூன், ஜூலை மாதங்களில் மரங்கள் வெட்டப்படுவது தொடர்பில், அமேசன் காட்டு மரங்களே உலகின் பேசுபொருளாகியிருந்தன. இப்போது கடும் தீயில் சிக்கித் தவிக்கிறது அமேசன் காடு. இரண்டும் நல்லதல்ல. கடந்த ஜூலை மாதம் மட்டும் அமேசனில் சுமார் 1,345 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு மரங்கள் வெட்டப்பட்டு, காடுகள் அழிக்கப் பட்டன. இது டோக்கியோ நகரத்தைவிட இரண்டு மடங்கு பெரியது. கிட்டத்தட்ட ஒரு நிமிடத்துக்கு இரண்டு முதல் மூன்று கால்பந்தாட்ட மைதானம் அளவுக்கு காடுகள் அழிக்கப்பட்டன.

அமெரிக்க நாட்டின் நிலப்பரப்பில் பாதியளவு இருக்கும், அமேசன் காடுக ளின் பரப்பளவு. புதிதாகப் பொறுப் பேற் றுள்ள பிரேசில் அரசும் சட்டத்துக்குப் புறம்பாக வெட்டப்படும் மரங்களைப் பறிமுதல் செய்வது கிடையாது. சென்ற ஆண்டு சுமார் 8,83,000 கன அடி மரங்கள் கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை வெறும் 1,410 கன அடி தான். காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவி ல்லை என்பதையே இது காட்டுகிறது.

அமேசன் காடுகள், கடந்த இரு வாரங் களாகப் பற்றியெரிகின்றன. 2018ஆம் ஆண்டு இதே மாதத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயைவிட சுமார் 86 சதவிகிதம் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. பிரேசில் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவ னம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்த ஆண்டு மட்டும் இதுவரை 72,843 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அதுவும் கடந்த வாரம் மட்டும் 9,000 காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள காட் டுத்தீ, எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதைக் கணிக்க முடியவில்லை.

ஆனால், நாசா வெளியிட்டுள்ள செயற் கைக்கோள் படங்களின் மூலம் புகையை விண்வெளியிலிருந்து காண முடிகிறது. அமேசன் காடுகளிலிருந்து சுமார் 2,500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சாவ்பாலோ நகரத்தை, கரும்புகை சூழ் ந்துள்ளது. கோப்பர்நிக்கஸ் செயற்கைக் கோள் புகைப்படம், கரும்புகை வடக்கு முதல் தெற்கு வரை கத்தி கிழித்துக் கொண்டுச் செல்வதுபோல் காட்டுகிறது.

“அமேசனில் இதுவரை இந்தளவுக்கு காட்டுத்தீ ஏற்பட்டதற்கான தரவுகள் கிடையாது. கடந்த சில மாதங்களாக நிகழ்ந்துவரும் காடு அழிப்பும் இதற்கு முக்கியமான காரணம்” என்கிறார் சூழ லியலாளர் தாமஸ் லவ்ஜாய். இவர் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள சூழலியல் செயற்பாட்டாளர்கள் பலரும் அமேசன் சீரழிவுகள் குறித்து எச்சரிக்கை செய்துவருகின்றனர். அதுவும் கடந்த ஆண்டு பிரேசில் ஜனாதிபதியாக போல் சோனரோ பதவியேற்ற பிறகு, இந்தச் சீரழிவு அதிகமாகியுள்ளதாகத் தெரிவிக் கிறார்கள். வலதுசாரி சிந்தனைகொண்ட அதிபர், ‘அமேசன் காடுகளில் உள்ள கனிமங்கள் முழுமையாகப் பயன்படுத் தப்படும். முதலீட்டுக்கு அமேசன் காடுகள் திறந்துவிடப்படும்’ என்று பிரசாரத்தில் அறிவித்தே தேர்தலில் வெற்றிபெற் றுள்ளார். பிறகென்ன, கேட்கவா வேண்டும்?

இந்த மாதத் தொடக்கத்தில் பிரேசிலின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் வெளி யிட்ட தரவுகளின்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற காடு அழிப்பை விட, இந்தக் கோடையில் நடைபெற்ற காடு அழிப்புதான் மிக அதிகம் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. “கோடை காலங்களில் காட்டுத்தீ மூள்வதற்கு முக்கியமான காரணம், ஈரப்பதம் இல் லாததுதான். ஆனால், இந்த ஆண்டு ஈரப்பதம் இருந்தும் காட்டுத்தீ பற்றியிரு க்கிறது. இதற்குக் காரணம் காடு அழிப் பாகத்தான் இருக்க முடியும்” என்கிறார் அமேசான் காடுகள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டுவரும் சூழலியலாளர் அட்ரியானே முயல்பெர்ட். “மரங்களை வெட்டி காடுகளை அழிப்பது, மாடுகளை வளர்க்கும் பெரிய பண்ணைகள் அமைப் பதற்கு உதவிபுரிவது மட்டுமல்ல... பல்வேறு கனிமங்களை எடுப்பதற்கும் வசதியாகிறது. காடு அழிப்பின் மூலம் இந்த நிலம் மேலும் வறண்டுபோகும். அது, காட்டுத்தீயை அதிகரித்து மோசமான சுழற்சியில் நிறுத்திவிடும்” என்கிறார் லவ்ஜாய்.

அமேசான் காடுகளில் ஏற்படும் மழை பொழிவுக்குக் காரணம், அந்தக் காடுகளே. காடுகளின் அளவு குறைய குறைய, மழைப்பொழிவு குறைந்து, காடுகள் அழிந்து, மீட்டெடுக்க முடியாத சவன்னா காடுகள்போல் ஆகிவிடும் என்று கவலை கொள்கின்றனர் சூழலியல் செயற்பாட்டா ளர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டு மெனில், மீட்டெடுக்க முடியாத கடைசிப் புள்ளியை நோக்கி அமேசன் காடுகள் சென்றுகொண்டிருக்கின்றன.

காடு அழிப்பும் மோசமான மேலா ண்மையும் தொடர்ந்தால், இதைப் போன்ற காட்டுத்தீ மேலும் அதிகமாகும். அதன் தாக்கம் உலகம் முழுவதையும் பாதிக் கும். காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ள, அமேசன் காடுகளைக் காப்பது முக்கியத்துவம் பெறுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் அல்லது தீக்கிரை யாவதால், அவை தேக்கிவைத்துள்ள கார்பனை வெளியேற்றுவது மட்டும ல்ல... உலகம் வெளியிடும் காபனை உள்வாங்கும் சக்தியும் குறைந்து, கால நிலை மாற்றத்தைத் துரிதப்படுத்தும்.

அமேசனில் இந்த ஒகஸ்ட் மாதம் வெளியேறியுள்ள கார்பனின் அளவு எவ்வளவு என்பது, சில நாள்களில் தெரிந்துவிடும். ஆனால், ஐ.பி.சி.சி இந்த மாதத் தொடக்கத்தில் வெளியிட்ட அறிக் கையில், “நாம் வெளியிடும் காபனை உள்வாங்க, இந்தப் பூமியில் போதிய காடுகள் இல்லை’ எனத் தெரிவித்துள்ளது.

தீ பற்றிப் பரவுவதற்கு எரிபொருள், ஒட்சிசன், வெப்பம் ஆகிய மூன்று விட யங்கள் தேவை. இவை இயற்கையா கவே அமேசன் காடுகளில் கிடைத்து விடுவதால், தீ வேகமாகப் பரவுகிறது. அதுவும் இப்போது ஏற்பட்டுள்ள காட்டுத் தீக்கு முக்கிய காரணமாகப் பார்க்கப்ப டுவது, பிரேசில் நாட்டில் பாரா மாகா ணத்தில் விவசாயிகள் ஒகஸ்ட் இரண்டாவது வாரத்தில், ‘டே ஆஃப் ஃ பையர்’ என அறிவித்து காடுகளை தீவை த்து அழிக்க ஆரம்பித்ததுதான். இப்படி அழிக்கப்படும் காடுகளில், பெரும்பண் ணைகளை அமைத்து கால்நடைகளை வளர்த்து, விவசாயம் செய்ய தொடங்கு கிறார்கள். இதுபோதாதென பெரிய அணை களை அமைத்து நீர்மின்சாரம் தயாரிக்கப் போவதாக பிரேசில் அரசாங்கமும் அறி வித்துள்ளது.

அமேசன் காடுகளில் சுமார் 10 லட்சம் பூர்வகுடி மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். அவர்களுக்கு இந்தக் காடுகள்தான் எல்லா மும். சுமார் 30 இலட்சம் உயிரின ங்களின் வாழ்விடமாக உள்ளன இந்தக் காடுகள். சென்ற ஆண்டு மக்கள் மற்றும் இயற்கைக்கான அறிவியல்கொள்கை அமைப்பு **(IPBES)** வெளியிட்ட அறிக் கையில், “இன்னும் சில ஆண்டுகளில் சுமார் 10 லட்சம் உயிரினங்கள் அழிந்து போய்விடும்’ எனத் தெரிவித்தது. இதை அமேசான் காட்டுத்தீ உறுதிப்படுத்துகிறது.


அமேசான் காடுகளில் பற்றியெரியும் தீயைக் கட்டுப்படுத்த கவனம் செலுத்த வேண்டிய பிரேசில் நாட்டின் அதிபர், ‘தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அமேசான் காடுகளில் தீயைப் பற்ற வைக்கின்றன’ என்ற ஆதாரமற்ற மோச மான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். இது உலகெங்கிலும் அதிர்ச்சியை ஏற்ப டுத்தியுள்ளது. ஒரு பிரச்சினை இருப்பதை ஒப்புக்கொண்டால், அதற்கான தீர்வுகளை நோக்கிப் பயணிக்க முடியும். அப்படி பிரச்சினை இருப்பதுபோல ஜனாதிபதி காட்டிக்கொள்ளவில்லை.

சர்வதேச அள வில் பல்வேறு அரசுகள் குரல்கொடுத்த தோடு, டிகாப்ரியோ உள்ளிட்ட ஹொலிவுட் நடிகர்க ளும் கண்டனம் தெரிவித்தனர். அதன் பிறகே பிரேசில் ஜனாதிபதி இப் போது உலக நாடுகளிடம் அமேசனைக் காப்பாற்றுவதற்கு உதவி கோரி இருக் கிறார்.

பூமிக்குத் தேவையான ஒட்சிசன் அளவில் 20 சதவிகிதம் தயாரிக்கும் அமே சன் காடுகளே, இந்த உலகின் நுரையீரல். அதற்கு இழைக்கப்படும் தீங்கு, இந்தப் பூமிக்கு எதிரான குற்றம் மட்டுமல்ல... ஒட்டுமொத்த மானுடத்துக் கும்கூட!

**காடுகளின் அளவு குறைய குறைய, மழைப்பொழிவு குறைந்து, காடுகள் அழிந்து, மீட்டெடுக்க முடியாத சவன்னா காடுகள்போல் ஆகிவிடும் என்று கவலை கொள்கின்றனர் சூழலியல் செயற்பாட்டா ளர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டு மெனில், மீட்டெடுக்க முடியாத கடைசிப் புள்ளியை நோக்கி அமேசன் காடுகள் சென்றுகொண்டிருக்கின்றன.**

# சிலந்தி வலையில் சிதம்பரம்!



நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வென்று, மன்மோகன் சிங் பிரதமராகப் பதவியேற்கும் வைபவம் நடந்துகொண்டிருந்தது. இணை அமைச்சராகப் பதவியேற்றிருந்த, மகாராஷ்டிராவைச் சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் பிருத்விராஜ் சவானிடம் பேசிக்கொண்டிருந்தார் பத்திரிகையாளர் சஞ்சய பாரு. “உங்களுக்கு என்ன துறை?” என சஞ்சய பாரு கேட்க.. .“நிதித்துறை தருவதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்” என்றார் பிருத்விராஜ். “அப்படியானால் புதிய நிதி அமைச்சர் யார்?” என சஞ்சய பாரு கேள்வியைப் போட... “பிரதமரே நிதித் துறையை வைத்துக்கொள்ளப்போகிறார்” என சஞ்சய பாரு காதில் கிசுகிசுத்தார் பிருத்விராஜ்.

அமைச்சர்களின் துறைகள் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகாத நிலையில், ‘நிதிப்பொறுப்பைப் பிரதமரே வைத்துக் கொள்ளப்போகிறார். பிருத்விராஜ் சவான் நிதித்துறை இணை அமைச்சர் ஆவார்’ என முக்கியமான செய்தியை, தான் வேலை செய்யும் பத்திரிகையில் வெளியிட்டார் சஞ்சய பாரு. செய்தி வெளியான காலையில் சஞ்சய பாருவுக்கு ப.சிதம்பரத்திடமிருந்து போன். “உங்க நியூஸ் உண்மையா?” எனக் கேட்டார் சிதம்பரம். “சம்பந்தப்பட்ட நபரிடமிருந்தே தகவல் கிடைத்தது” என்றார் சஞ்சய பாரு. “பிரதமரே நிதித்துறையைத் தன்னிடம் வைத்துக் கொண்டால், எனக்கு என்ன கிடைக்கும்?” எனச் சத்தமாகக் கேட்டார் சிதம்பரம். “உங்களுக்கு வர்த்தகம் அல்லது தொலைத்தொடர்பு கிடைக்கும் எனப் பேசிக்கொள்கிறார்கள்” என சஞ்சய பாரு சொல்ல... “நான் ஏற்கெனவே நிதி அமைச்சராக இருந்திருக்கிறேன். அதைவிடக் குறைந்த ஒரு கேபினட் அந்தஸ்தை ஏற்றுக் கொள்வேன் என நினைக்கிறீர்களா?” எனக் கோபத்துடன் கேட்டார் ப.சிதம்பரம்.

பிரதமருடன் நிதி, வெளியுறவு, பாதுகாப்பு, உள்துறை அமைச்சர்கள் முக்கியமான ரெய்சினா ஹில் அலுவலகத்தில் இருப்பார்கள். பாதுகாப்புக்கான கேபினட் குழுவில் இவர்கள் அனைவரும் உறுப்பினர்கள். அப்படிப்பட்ட ரெய்சினா ஹில் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்பது ப.சிதம்பரத்தின் ஆசையாக இருந்தது. அன்று மாலை இலாக்காக்கள் அறிவிக்கப்பட்டபோது சிதம்பரம் நிதி அமைச்சர் ஆகியிருந்தார். பிருத்விராஜ் சவான் .பிரதமர் அலுவலக இணை அமைச்சர் ஆக்கப்பட்டார். பின்னணியில் என்ன நடந்திருக்கும் என்பதை யூகிக்க வேண்டியதில்லை. அப்போது ப.சிதம்பரம் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டதற்காகத் தான் இப்போது சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

மும்பையைச் சேர்ந்த மீடியா நிறுவனம் ஐ.என்.எக்ஸ். இந்த நிறுவனம், ‘வெளிநாட்டு முதலீட்டு மேம்பாட்டு வாரியத்தின் (Foreign Investment Promotion Board - எஃப்.ஐ.பி.பி) விதிமுறைகளை மீறி 305 கோடி ரூபாய்க்கும் மேலாக வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றது எனக் குற்றச்சாட்டு கிளம்பியது. அதுபற்றி ஐ.என்.எக்ஸ் மீடியாவிடம் எஃப்.ஐ.பி.பி விளக்கம் கேட்டது. இதையடுத்து கார்த்தி சிதம்பரத்தைத் தொடர்பு கொண்டு ஐ.என்.எக்ஸ் உதவி கோரியது. கார்த்தி சிதம்பரம், ஐ.என்.எக்ஸ்.மீடியாவுக்குச் சில ஆலோசனைகளை வழங்கினார். அத்துடன் அப்போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தின் உதவியோடு, ஐ.என்.எக்ஸ் மீடியாவை அந்த விவகாரத்திலிருந்து காப்பாற்றினார்.

அதற்காக, கார்த்தி சிதம்பரத்துக்குச் சொந்தமான ‘அட்வான்டேஜ் ஸ்ட்ராட்டஜிக்’ நிறுவனம் பெரும் தொகையை ஆலோசனைக் கட்டணமாகப் பெற்றது. இந்த விவகாரத்தைக் கண்டுபிடித்த சி.பி.ஐ., கார்த்தி சிதம்பரத்தின் வீடு மற்றும் அலுவலகங்களில் அதிரடிச்சோதனை நடத்தியது. வழக்கும் பதிவு செய்தது. பணப்பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் அமுலாக்கத்துறையும், முறைகேடு நடந்தது தொடர்பாக சி.பி.ஐ-யும் வழக்கு பதிவு செய்தன. ஐ.என்.எக்ஸ் உரிமையாளர்களில் ஒருவரான இந்திராணி முகர்ஜியிடம், சி.பி.ஐ. விசாரணை நடத்தியபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அது ப.சிதம்பரத்தின் கைதில் முடிந்திருக் கிறது.

தான் உள்துறை அமைச்சராக இருந்தபோது திறந்து வைக்கப்பட்ட சி.பி.ஐ தலைமை அலுவலகத்திலேயே ப.சிதம்பரம் சிறை வைக்கப்பட்டார். சி.பி.ஐ கட்டடத் திறப்பு விழாவுக்குப் போனபோது அங்கே இருந்த பார்வையாளர் புத்தகத்தில் வாழ்த்துச் செய்தியைத் தன் கைப்பட எழுதினார் சிதம்பரம். ‘1985ஆம் ஆண்டு முதல் சி.பி.ஐயுடன் நெருங்கிப் பணியாற்றி வருகிறேன். இந்தப் புதிய அலுவலகத்தைப் பார்ப்பது எனக்குப் பெருமையாக உள்ளது. இந்த அலுவலகம் சி.பி.ஐ-யை மேன்மேலும் வலிமைப்படுத்தும்’ என்று குறிப்பிட்டிருந்தார். ஐ.என்.எக்ஸ் மீடியா வழக்கில் இன்றைக்குச் சிதம்பரத்தை நெருங்க அவர் வீட்டுச் சுவர் ஏறிக் குதித்திருக்கிறது சி.பி.ஐ.

ஊழல் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள். ஊழல் செய்த அனைவரும் பதில் சொல்ல வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

ப.சிதம்பரத்தின் மீதான நடவடிக்கையை ‘பழிவாங்கும் அரசியல்’ எனக் காங்கிரஸைத் தாண்டி எதிர்க்கட்சிகள் பலவும் கண்டித்தி ருக்கின்றன. உண்மையில் இது பழிக்குப் பழி அரசியல்தானா?

குஜராத்தில் மோடி முதல்வராக இருந்தபோது சில காலம் மத்திய உள்துறை அமைச்சராகச் சிதம்பரம் இருந்தார். அவரின் கட்டுப்பாட்டில்தான் சி.பி.ஐ இருந்தது. அப்போது குஜராத்தில் சொராபுதீன் ஷேக் போலி என்கவுன்டர் விவகாரத்தை சி.பி.ஐ விசாரித்துக் கொண்டிருந்தது. இந்த வழக்கில் குஜராத் உள்துறை அமைச்சராக இருந்த அமித் ஷா கைது செய்யப்பட்டு, மூன்று மாதங்கள் சிறையில் இருந்தார். அமித்ஷா குஜராத்தில் இருக்கவும் தடை விதிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் குஜராத்துக்குள் அமித்ஷா நுழைய முடியவில்லை.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய உள்துறை அமைச்சராக வந்து அமர்ந்திருக்கிறார் அமித்ஷா. பழிக்குப் பழி அரசியலின் முக்கியமான திருப்பம் இது என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்யும் மசோதாவை மாநிலங்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கொண்டு வந்தபோது, ‘நீங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்துக்கொள்ளலாம். ஆனால், நீங்கள் தவறு செய்துள்ளீர்கள். இந்த முடிவு தவறு என்பதை வரலாறு நிரூபிக்கும். இந்தியா சிதைவதற்கான தொடக்கம் இது” எனக் காட்டமாகப் பேசினார் சிதம்பரம். “காஷ்மீர் விவகாரத்தைத் திசை திருப்பவே சிதம்பரம் கைது நடவடிக்கை” என்கிறார் அவரின் மகன் கார்த்தி சிதம்பரம்.

குஜராத்தில் நரேந்திர மோடி ஆட்சிக்கு எதிராகப் பல வழக்குகளில் சாட்சி சொன்ன முக்கிய அதிகாரிகள் மூன்று பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். குஜராத் கலவரத்தில் மோடிக்கு எதிராகச் சாட்சி சொன்ன ஐ.பி.எஸ் அதிகாரி சஞ்சீவ் பட், கோத்ரா கலவரத்தை விசாரிக்கும் நானாவதி கமிஷனிடம் மோடி குறித்த தகவல்களை வெளியிட்டு சாட்சியம் அளித்த ஐ.பி.எஸ்



அதிகாரி ராகுல் ஷர்மா ஆகியோர் நீக்கப்பட்டார்கள். இப்படி அடுத்தடுத்த அதிரடிகளை குஜராத் முதல்வர் மோடி நடத்திக் கொண்டிருந்தபோது, “பதவிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் மத்திய அரசிடம் முறையிட்டால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்று உள்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் 2011 ஒகஸ்ட் 12 ஆம் திகதி தெரிவித்தார். கோபமடைந்த மோடி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதிய கடிதத்தில், ‘குஜராத் விஷயத்தில் சிதம்பரம் தலையிடக் கூடாது. அவரின் பேச்சு ,குஜராத் அரசுக்குக் களங்கம் விளைவிப்பதுபோல் இருக்கிறது’ எனத் தெரிவித்திருந்தார். 2011 ஒகஸ்டில் நடந்த இந்த விவகாரத்துக்கு 2019 ஒகஸ்டில் எதிர்வினை நடந்திருக்கிறது.

இன்னொருபுறம் இந்தமுறை மோடி பதவியேற்றதிலிருந்தே ப.சிதம்பரம் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். தன் முதல் பட்ஜெட்டை நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தபோது, புள்ளி விபரங்களுடன் நிதித் துறைக்கு எதிராக வாள் சுழற்றினார் சிதம்பரம். அந்த பட்ஜெட்டின் தவறுகளைப் பட்டியலிட்டார். பட்ஜெட் மீதான விவாதத்துக்குப் பிறகு பேசிய நிர்மலா சீதாராமன், நிதிநிலை அறிக்கையின் அம்சங்களை விளக்குவதற்குப் பதிலாக, சிதம்பரத்தின் குற்றச்சாட்டுக்குப் பதில் கொடுக்கவே அதிக நேரத்தை எடுத்துக் கொண்டார். அந்த நிர்மலா சீதாராமன் கட்டுப்பாட்டில் இருக்கும் அமுலாக்கத்துறை தான், சி.பி.ஐயுடன் சேர்ந்து கொண்டு சிதம்பரத்துக்கு செக் வைத்திருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தல் நெருக்கத்தில் கன்னியாகுமரி வந்து நலத்திட்டங்களைத் தொடங்கிவைத்தார் பிரதமர் மோடி. சிதம்பரத்தின் பெயரைக் குறிப்பிடாமல் அவரைக் கடுமையாக விமர்சித்த மோடி, ‘ஹரீ கவுன்டிங் மினிஸ்டர் மக்கள் பணத்தைக் கொள்ளை அடித்துவிட்டார். கட்சித் தலைமையைப் போலவே அவரின் குடும்பமும் ஊழல் குடும்பம். ஐஸ்கிரீம், சிம்கார்ட் ஆகியவற்றுக்கு ‘பமிலி பக்கேஜ்’ முறை இருப்பதைப்போல் ரீ கவுன்டிங் மினிஸ்டர் ‘பமிலி பேக்கேஜ்’ முறையில் ஒட்டுமொத்தக் குடும்பத்துக்கும் ஜாமீன் பெறுவதற்காக நீதிமன்றப்படிகளை ஏறிக் கொண்டிருக்கிறார். ஊழல் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள். ஊழல் செய்த அனைவரும் பதில் சொல்ல வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. அந்த முன்னாள் அமைச்சரும் பதில் சொல்வார்” என்றார். அப்போது சிதம்பரத்துக்கு விட்ட சவாலை மோடி இப்போது நிறைவேற்றிவிட்டார். இதற்குப் பின்னணியில் அரசியல் இருந்தாலும் ப.சிதம்பரத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும் சாதாரணமானவையல்ல.

ஐ.என்.எக்ஸ் மீடியா வழக்கில் சிதம்பரத்தின் பங்கு குறித்து டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி சுனில்கவுர் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். சிதம்பரத்தின் முன்ஜாமீன் மனுக்கள் நிராகரிக்கப்படுவதற்காக அவர் சொன்ன காரணம் முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் **Kingpin** என்கிற வார்த்தை பிரயோகிப்பட்டிருக்கிறது. ‘முறைகேடுகள் அனைத்துக்கும் மனுதாரர் தலைமையேற்றிருக்கிறார். அவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் முன்ஜாமீன்வழங்குவதற்கான நியாயத்தை எடுத்துக்கூறவில்லை. பொருளாதாரம் சார்ந்த குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அணுக வேண்டும். இதுபோன்ற பெரிய அளவிலான பொருளாதாரக் குற்றங்களில் விசாரணை அமைப்புகளின் கரங்களைக் கட்டிவைக்க முடியாது’ எனச் சொல்லியிருக்கிறார் நீதிபதி சுனில்கவுர்.

ஆனால், சிதம்பரம் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடிவிடுவார் என்பதுபோல் லுக் அவுட் நோட்டீஸ் கொடுப்பதும் இரண்டு மணி நேரத்தில் ஆஜர் ஆக வேண்டும் என நோடீஸ் ஒட்டுவதும் சுவர் ஏறிக் குதிப்பதும் சி.பி.ஐ-யின் நியாயமான நடவடிக்கையாகத் தெரியவில்லை.

ஒருபுறம் ஊழல் முறைகேடுகள், இன்னொருபுறம் பழிவாங்கும் அரசியல். இவற்றுக்கிடையில்தான் எங்கேயோ நீதி இருக்கிறது.

**ஜூனியர் விகடன்**

## இங்கிலாந்து–அமெரிக்கா

# பூமியைக் காப்பாற்ற 16 வயது சிறுமியின் 2 வார படகுப் பயணம்







**உலகின் பருவநிலையில் மோசமான மாற்றங்கள் ஏற்பட்டதற்கு, சென்ற தலைமுறையினரே காரணம். நீங்கள் செய்தவற்றை நாங்கள் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எங்களைப் பார்த்து "நார்மல் குழந்தைகளாக இருங்கள்" என்று சொல்லாதீர்கள்.**

துளியும் புகை வராத, சோலாரில் இயங்கும் படகில் கடந்த இரண்டு வாரங்களாக இங்கிலாந்தின் பிளைமோத்திலிருந்து நியூயோர்க் வரை சென்றிருக்கிறார் கிரேட்டா தன்பெர்க். சுவீடனைச் சேர்ந்த 16 வயதேயான இவர் இந்த வயதில் உள்ள எல்லாப் பிள்ளைகளையும்போல மாணவி மட்டுமல்ல, காலநிலை ஆர்வலரும் கூட. அதிலும் 2019 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரையில் கிரேட்டாவின் பெயரும் இருக்கிற அளவுக்கு, உலகின் காலநிலையின் பாதுகாப்புக்காக, புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்காக அமைதி வழியில் போராடி வருகிறார் இந்தச் சிறுமி. இது தொடர்பான விழிப்புணர்வை உலகம் முழுக்க ஏற்படுத்துவதற்காக பாடசாலையைப் புறக்கணித்து விட்டு சுவீடன் நாடாளுமன்றத்தின் முன்னால் தனியொரு சிறுமியாகத் தன் அமைதிப் போராட்டத்தை ஆரம்பித்தார். பிறகு, இவருடன் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இணைந்து கொள்ள, அது இயக்கமாகவே மாறியது.

உலகின் பருவநிலையில் மோசமான மாற்றங்கள் ஏற்பட்டதற்கு, சென்ற தலைமுறையினரே காரணம். நீங்கள் செய்தவற்றை நாங்கள் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எங்களைப் பார்த்து "நார்மல் குழந்தைகளாக இருங்கள்" என்று சொல்லாதீர்கள்".

பருவநிலை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா.எனப் பல கூட்டங்களில் கலந்துகொண்டு பேசி வருகிற கிரேட்டா தன்பெர்க், பிரதமர் மோடிக்குக்கூட "நமக்கு இருப்பது ஒரு உலகம் தான். அதைக் காப்பாற்றுங்கள்" என்று வேண்டுகோள் வீடியோ ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார். போராட்டங்களை அமைதி வழியில் நடத்தினாலும் "உலகின் பருவ நிலையில் மோசமான மாற்றங்கள் ஏற்பட்டதற்கு சென்ற தலைமுறையினரே காரணம். நீங்கள் செய்தவற்றை நாங்கள் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எங்களைப் பார்த்து "நார்மல் குழந்தைகளாக இருங்கள்" என்று சொல்லாதீர்கள் என்று தன் வார்த்தைகளில் ரௌத்ரம் காட்டுகிறார் கிரேட்டா.


கிரேட்டா தன்னுடைய 8 வயதில் இருந்து காலநிலை மாற்றங்கள் குறித்துப் பேசத் தொடங்கியுள்ளார். விமானங்கள் பறக்கும் போது வெளிப்படுகிற அளவுக்கு அதிகமான சூடு, சத்தம், வாயு போன்றவை சுற்றுப்புறத்தைப் பாதிக்கும் என்று கிரேட்டா சொன்னதால், பாடகியான அவருடைய அம்மாவும் நடிகரான அவருடைய அப்பாவும் தங்கள் வெளிநாட்டு நிகழ்வுகளையே தவிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த அளவுக்கு சுற்றுப்புற சூழல் மீதும் காலநிலை மீதும் காதலுடன் இருக்கிற கிரேட்டா தன்பெர்க், "நியூயோர்க்கில் நடக்க விருக்கிற காலநிலை தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, கடந்த இரண்டு வாரங்களாகத் துளியும் புகை வராத, சோலாரில் இயங்கும் படகில் இங்கிலாந்தின் பிளைமோத்திலிருந்து நியூயோர்க் வரை சென்றிருக்கிறார். உடன் அவருடைய அப்பா மற்றும் உதவிக்கு இரண்டு பேர் சென்றிருக்கிறார்கள். அட்லாண்டிக் கடலில் இது சூறாவளி சீஸன். இவற்றையெல்லாம் தாண்டித்தான் அமெரிக்கா, தென்னமெரிக்கா, பிரேசில் என்று பயணம் செய்யவிருக்கிறார் கிரேட்டா. தவிர, டிசெம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாநாடு ஒன்றிலும் கலந்து கொள்ளவிருக்கிறார்.

"இந்தப் பயணம் சற்றுக்கடினமாகத்தான் இருந்தது. நல்ல வேளை எனக்குக் கடலில் பயணம் செய்யும் போது வருகிற உடல் பிரச்சினைகள் எதுவும் வரவில்லை. நான் லக்கி" என்கிற இந்தச் சிறுமியைப் பாராட்டுவதோடு நின்றுவிடாமல், அவர் வழியில் செல்வது தான் பூமிக்கும் நம் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நல்லது.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : திருவருட்செல்வர்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன்




நாதர்முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே
உனக்கு நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே
நாதர்முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே
உனக்கு நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே
ஆதிசிவன் தலை அமர்ந்த ஆணவமா
ஆதிசிவன் தலை அமர்ந்த ஆணவமா
அவன் அங்கமெல்லாம் விளையாடும் தைரியமா
அவன் அங்கமெல்லாம் விளையாடும் தைரியமா
நாதர்முடி மேல் இருக்கும் நல்ல பாம்பே
உனக்கு நல்ல பெயர் வைத்தவர் யார் சொல்லு பாம்பே

ஊர் கொடுத்த பால் குடித்து உயிர் வளர்த்தாய்
பால் உண்ட சுவை மாறும் முன்னே நன்றி மறந்தாய்
ஊர் கொடுத்த பால் குடித்து உயிர் வளர்த்தாய்
பால் உண்ட சுவை மாறும் முன்னே நன்றி மறந்தாய்
வஞ்சமற்ற தொண்டருக்கே வஞ்சனை செய்தாய்
வஞ்சமற்ற தொண்டருக்கே வஞ்சனை செய்தாய்
அவர் பிஞ்சு மகன் நெஞ்சினுக்கே நஞ்சு கொடுத்தாய்
அவர் பிஞ்சு மகன் நெஞ்சினுக்கே நஞ்சு கொடுத்தாய்

பெயருக்கு தகுந்தாற் போல் மாறிவிடு
எங்கள் பிள்ளையை மறுபடியும் வாழவிடு
பெயருக்கு தகுந்தாற் போல் மாறிவிடு
எங்கள் பிள்ளையை மறுபடியும் வாழவிடு

நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு
நெஞ்சம் மாறிவிடு பிள்ளையை வாழவிடு

சாங்கம் அமைத்தொரு முத்தமிழ்
பாடிய சங்கரன் மீதினில் ஆணை
சங்கப் புலவர் தம் நாவினில் அடங்கிய
செந்தமிழ் மீதினில் ஆணை
மங்கள குங்குமம் மஞ்சள் நிறைந்த
சங்கரி மீதினில் ஆணை
மாதொரு பாதன் சூடிய நாகப்பாம்பே
உன்மேல் ஆணை
தேவன் மீதில் ஆணை
அவன் திருவடி மீதும் ஆணை
திருமறை மீதில் ஆணை
என் திருநாவின் மேல் ஆணை
பண்மேல் ஆணை சொல் மேல் ஆணை
என் மேல் ஆணை உன் மேல் ஆணை

# திரை விமர்சனம்




**கெ**ன்னடி க்ளப் சுசீந்திரன் இயக்கத்தில் சசிகுமார் நடிப்பில் வெளிவந்துள்ள படம். சுசீந்தீரனுக்கு முதல் படத்தில் கைக்கொடுத்தா கபடி இதிலும் கைக்கொடுத்ததா? பார்ப்போம்.

ஒட்டன்சத்திரம் ஊரில் பாரதிராஜா தலைமையில் கென்னடி க்ளப் என்று ஒரு பெண்கள் கபடி அணி உள்ளது. அந்த அணியில் உள்ள பெண்களை நல்ல நிலைக்கு கொண்டு வர பாரதிராஜா போராடி வருகிறார்.

அந்த சமயத்தில் அவரின் உடல்நிலை பாதிக்கப்பட அப்போது பாரதிராஜாவின் முன்னாள் மாணவர் கோச் சசிகுமார் அந்த அணியை வழி நடத்துகிறார்.

மாநில அளவிலான போட்டியில் சிறப்பாக செயற்பட்ட கென்னடி க்ளப்பை சார்ந்த ஒரு பெண் இந்திய அணிக்கு செலக்ட் ஆகின்றார். ஆன்ால், அவர் இந்திய அணியில் விளையாட ரூ 30 லட்சம் லஞ்சம் கேட்கின்றனர்.

இதனால் அந்த பெண் விளையாட முடியாமல் போக தற்கொலை செய்துக்கொள்ள முயற்சிக்கின்றார். இதைத் தொடர்ந்து அந்த க்ளப் என்ன ஆனது, சசிகுமார் பாரதிராஜா கனவை நிறைவேற்றினாரா இது தான் மீதிக்கதை.

சுசீந்திரன் கடந்த சில வருடங்களாகவே தனக்கான இடத்தை தொலைத்து வெற்றிக்காக போராடி வந்தார், அந்தச் சமயத்தில் அவர் கையில் எடுத்திருக்கும் ஆயுதமே கபடி, இதே நிலை தான் சசிகுமாருக்கும்.

அதனாலேயே இவர்கள் வெற்றி கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் சொல்லி அடித்திருக்கிறார்கள், சசிகுமார் ஒரு கோச்சாக மனதில் நிற்கின்றார், தன் அணிக்காக வேலையே தூக்கி எறியும் இடம் விசில் பறக்க வைக்கின்றார்.

அதே நேரத்தில் பாண்டியநாடு படத்தில் பார்த்த பாராதிராஜா இதில் மிஸ்ஸிங், ஏதோ அவர் படம் முழுவதும் வந்தும் பெரிதாக மனதில் நிற்கவில்லை, கபடி ஆரம்பித்த கதையில் தொடங்கி அது வளர்ந்து தற்போது எப்படி ஒரு விளையாட்டு அரசியலாக மாறியுள்ளது.

இதன் பின் எப்படி பணம் விளையாடுகின்றது என்பதை தெளிவாக காட்டியுள்ளனர்.

படத்தில் ஹீரோயின் என்று தான் யாருமில்லை, நடித்தவர்கள் அனைவருமே ஹீரோயின் தான், கபடி காட்சிகள் அனைத்தும் அத்தனை தத்ரூபம், அதில் ஒரிஜினல் கபடி வீராங்கனைகளையே நடிக்க வைத்தது பாராட்டத்தக்கது.

அதிலும் டுவின்ஸாக நடித்திருக்கும் இருவர், பாராதிராஜா மகளாக வருபவர், சாப்பாடு தான் முக்கியம் மானம் முக்கியமில்லை என வெகுளியாக சொல்லும் பெண் என பலரும் மனதை கவர்கின்றனர்.

எப்படியும் இந்த மாதிரி விளையாட்டு போட்டி படம் என்றாலே கிளைமேக்ஸ் சீட்டின் நுனிக்கு வர வைப்பார்கள், படத்தில் ஆரம்பத்திலிருந்து பெரிதும் அப்படி எந்த காட்சி இல்லை என்றாலும், கிளைமேக்ஸில் கண்டிப்பாக அனைவரும் சீட்டின் நுனிக்கு வருவது உறுதி.

படத்தின் ஒளிப்பதிவு நாமே கபடி அரங்கில் சென்ற அனுபவம், டி.இமான் பின்னணியில் கலக்கியுள்ளார், ஆனால், விஸ்வாசம் ஹாங் ஓவர் இன்னும் போகவில்லை போல.

படத்தின் கதைக்களம், சொல்லி அடிக்கும் ஹிட் மெட்ரீயல்.

படத்தின் ஒளிப்பதிவு மற்றும் பின்னணி இசை.

படத்தில் நடித்திருக்கும் கபடி வீராங்கனைகள்.

பல்ப்ஸ்

பாரதிராஜா கதாபாத்திரம் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக இருந்திருக்கலாம். கிளைமேக்ஸ் வேண்டுமென்ற வைக்கப்பட்டது போன்ற டுவிஸ்ட்.

மொத்தத்தில் இந்த கென்னடி க்ளப் நம்பி இந்த களத்தில் அனைவரும் இறங்கலாம்.

---

**பா**குபலி என்றே ஒரே படத்தின் மூலம் ஓவர் நைட்டில் உலக பேமஸ் ஆனவர் பிரபாஸ். ஆனால், அதற்காக அவர் ஏதோ லக்கில் ஜெயித்தார் என்று சொல்ல முடியாது. தன் 5 வருட உழைப்பை பாகுபலிக்காக கொடுத்தார் பிரபாஸ். அப்படி மீண்டும் தன் PAN இந்தியா மார்க்கெட்டை தக்க வைத்துக்கொள்ள பிரபாஸ் எடுத்த களமே சாஹோ, இது அவர் முயற்சிக்கு வெற்றியை கொடுத்ததா? பார்ப்போம்.



ராய்(ஜாக்கி ஷெரப்) உலகின் மிகப் பெரும் கேங்க்ஸ்டர், இவர் இந்தியாவில் காலடி எடுத்து வைக்க முயற்சி செய்யும் நேரத்தில் சிலரால் தாக்கப்பட்டு இறக்கின்றார். இதைத் தொடர்ந்து அவர்கள் இந்தியாவிற்குள் கொண்டு வந்த பல இலட்சம் கோடி பணமும் எரிந்து நாசமாகின்றது.

அதே நேரத்தில் பணம் இன்னும் இருக்கின்றது, அதை எடுக்க வேண்டும் என்றால் ப்ளாக் பாக்ஸ் வேண்டும் என ராய் மகனாக வரும் அருண்விஜய் மற்ற கேங்ஸ்டர்களிடம் சொல்ல, அந்த ப்ளா க்பாக்ஸை எடுக்க பல கேங்ஸ்டர்கள் குறி வைக்கின்றனர். மேலும் அடுத்த ராய் யார் என்ற போட்டியும் தொடங்குகின்றது.

அப்போது பிரபாஸ் இந்த கேஸை கையில் எடுக்க, அதிரடியாக ஒரு திட்டத்தை தீட்டி அந்த ப்ளாக்பாக்ஸை பிரபாஸ் கைப்பற்ற, அதன் பின் பல மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க, பிரபாஸ் யார், எதற்காக அந்த ப்ளாக்பாக்ஸை எடுத்தார், அதை வைத்து என்ன செய்யப்போகிறார் என்று கதை நீள்கின்றது.

முதலில் பிரபாஸ் 5 வருடமாக இரண்டு படத்தில் நடித்த பிரபாஸ், அடுத்து மீண்டும் 3 வருடம் சாஹோவிற்கு கொடுக்க, அது அவருக்கு எந்த அளவிற்கு பயனை அளித்தது என்பது தான் கேள்விக்குறி, பாகுபலியில் இருந்த கிரேஸ் கொஞ்சம் கூட இதில் பிரபாஸிடம் இல்லை, ஒருவேளை தெலுங்கு ஆடியன்ஸிற்கு பிடிக்குமா என்று தெரியவில்லை.

படம் பிரமாண்டமாக எடுக்க வேண்டும் என்று மட்டுமே தான் இயக்குநர் சுஜித் நினைத்துள்ளாரே தவிர,

படத்தின் திரைக் கதையில் கவனம் செலுத்த மறந்துவிட்டார் போல, அதிலும் படத்தின் முதல் பாதி, அட எப்படா இடைவேளை விடுவீர்கள் என்ற மனநிலைக்கு வந்த பிறகு வரும் ஆக்ஷன் காட்சிகள் கொஞ்சம் நிமிர வைக்கின்றது.

அதை விட ஷரதா கபூர் கொஞ்சம் கூட பிரபாஸிற்கு மேட்ச் இல்லை, இருவரின் கெமிஸ்ட்ரியும் நம்மை சோதிக்க தான் செய்கின்றது.

குறிப்பாக சேஸிங் டைமில் டூயட் சாங் பாடுவது தியேட்டர் கேண்டி னுக்கு நல்ல லாபம். ஒரு ஹீரோ என்றால் ஒரு முறையாவது தோற்க வேண்டும், பிறகு எழுந்து வரும் போது தான் நமக்கே விசில் அடிக்க தோன்றும்.

இதில் பிர பாஸ் 2000 பேரை கொள்கின்றார், அவர் மீது 10 ஆயிரம் புல்லட் சுடப்படுகின்றது, அதில் ஒரு புல்லட் மட்டுமே அவர் மீது படுகின்றது மொத்த படத்தில், இப்படி லொஜிக் பூ சுத்தலாம், ஆனால், இங்கு பூக்கடையே மாட்டியுள்ளனர்.

படத்தின் ஆறுதலான விஷயம் கிளைமேக்ஸ் காட்சிகள், அதன் ஆக்ஷன் காட்சிகள், அடுத்தடுத்து வரும் திருப்பம் இது படம் முழுவதும் இல்லாதது பெரிய மைனஸ், மேலும், ஜிப்ரானின் பின்னணி இசை மிரட்டல், மதியின் ஒளிப்பதிவு தனித்துவம்.

க்ளாப்ஸ்

பின்னணி இசை மற்றும் ஒளிப்பதிவு

படத்தின் கிளைமேக்ஸ்

பல்ப்ஸ்

லொஜிக்கே இல்லாமல் சோர்வாக செல்லும் திரைக் கதை.

அருண்விஜய், ஜாக்கி ஷெரப், நீல் நிதின் முகேஷ் என பல பிரபலங்களை பெரியளவில் பயன்படுத்தாது.

மொத்தத்தில் ரூ 300 கோடி பணத்தை ஒரு குழந்தை கையில் கொடுத்தால் என்ன செய்யும் என்பதன் அவுட்புட் தான் இந்த சாஹோ.



# மனிதநேயம் சாகவில்லை

போகும் வழியில் ஒரு மின் கம்பத் தில் ஒரு சிறு துண்டு காகிதம் எழுதி தொங்க விட பட்டி ருந்தது. அப்படி என்னதான் அதில் எழுதியிருக்கு என்ற ஆர்வத்தில் நானும் போய் படித்தேன்.

அதில் என்னுடைய 50 ரூபாய் தொலைந்து விட்டது. யார் கையி லாவது கிடைத்தால் தயவு செய்து இந்த விலாசத்தில் தருமாறு கேட்டு கொள்கிறேன். எனக்கு கண் பார்வை அவ்வளவு சரியில்லை" என்று விலாசத்துடன் எழுதியி ருந்தது.

எனக்கும் பொழுது போகவி ல்லை, அந்த குறுக்கு வழியில் பார்த்த ஒரு நபரிடம் விலாசம் கூறி வழிகேட்டேன். "இந்த அம்மாவா, கொஞ்சம் தூரம் போனால் ஓர் பழைய வீடு இருக்கும். அங்க தான் அந்த கண் தெரியாத அம்மா இருக்கு".

அங்கே ஓர் சிறிய கீத்து கொட்டகை. ஒரு நாள் மழைக்கு கூட தாங்காது. வெளியில் , கண்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக வயதான ஓர் அம்மா. என் காலடி சத்தம் கேட்ட தும், யாருப்பா நீ? அம்மா நான் இந்த வழியாக வந்தேன், எனக்கு 50 ரூபா கீழே விழுந்து கிடைத்தது. அது உங்களிடம் தரலாம் என்று வந்தேன். கேட்டதும் அந்த அம்மா அழ ஆரம்பித்து விட்டார்.

தம்பி ரெண்டு நாளா கிட்டத் தட்ட முப்பது முப்பத்தஞ்சு பேர் வந்து 50 ரூபா கீழே விழுந்து கிடைச்சது என்று சொல்லி குடுத் துட்டு போறாங்க.. அந்த கடிதம் நான் எழுதவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. பரவா யில்ல அம்மா நீங்க வச்சிக்கி ங்க என்று சொல்லி கொடுத்து திரும் பினேன். தம்பி நீ போகும் போது மின்கம்பத்தில் இருக்கும் அந்த கடிதத்தே மறக்காமல் கிழித்து போட்டு விடு என்று அறிவுரைத் தாள் அந்த தாய்.

என் மனதில் வித விதமான எண்ணங்கள். யார் அந்த கடித த்தை எழுதி இருப்பார். அந்த கடித்ததே கிழித்து விடு என்று அந்த அம்மா ஒவ்வொருவரிட மும் கூறி கொண்டு தான் இருப் பார். ஆனால் யாரும்அப்படி செய்ய வில்லை. யாரும் இல்லாமல் அநா தையாக வாழும் ஓர் உயிருக்கு கடித வடிவில் உதவி செய்த அந்த நண்பருக்கு மனத் தால் நன்றி சொல்லி கொண்டேன். நன்மை செய்யவேண்டும்என்ற மனம்இருந் தால் அதற்க்கு ஆயிரம் வழி.

மனதில் யோசித்து கொண்டே வரும்போது வழியில் ஒருவர் என்னிடம் "அண்ணே இந்த விலா சம் எங்கே என்று சொல்ல முடி யுமா? கீழே இருந்து 50 ரூபாய் கிடைத்தது. அந்த அம்மா கிட்டே குடுக்கணும். வழி சொல்றீங் களா?

மனித நேயம் சாகவில்லை.

# அப்பாவுக்காக...



இது அப்பாவை நேசிப்பவர்க ளுக்கான்து கண்ணீர் இல்லாமல் வாசிக்கவும்.

ஆணழகன்

❖ அப்பாவிற்கு அழத் தெரியாது!!

❖ குடும்பத்திற்காக மாடாய் உழைத்த போதும்!

❖ பிள்ளைகளின் பசியாற்ற ஓடாய்.தேய்ந்த போதும்!

என்னடா வாழ்க்கை இது என

❖ ஒருநாளும் அழுதிருக்க மாட்டார்!

❖ மனைவியை நெஞ்சில் சுமந்து!

❖ பிள்ளைகளை தோளில் சுமந்து!

❖ குடும்பப் பொறுப்புகளை தலையில் சுமந்து!

போகும் வழி தெரியாமல்

விழிபிதுங்கி நின்ற போதும்!

தான் கலங்கினால் குடும்பம் உடைந்துவிடும் என கல்லாய் நின்றவர்!நாம் அவரை கல்லெ னவே நினைத்துவிட்டோம்!

❖ அம்மாவிடம் ஒட்டிக் கொள் வோம்!

❖ அப்பாவிடம் எட்டி நிற்போம்!

❖ முகம் கொடுத்து பேசிய வார்த்தைகள்

சொற்பம் என்போம்!

ஆனால்,

தோல்வியில் துவளும் போது பிடித்துகொள்ள அப்பாவின் கை களை தான் முதலில் தேடுவோம்!

நம்மை அள்ளி அணைத்து முத்தமிட்டதில்லை என்றாலும்!

தள்ளி நின்று உணர்ச்சி வெள் ளத்தில் ததும்பும்ஜீவன்அது!

❖ நாம் உண்ணும் சோறும்!

❖ உடுத்தும் உடையும்!

❖ படித்த படிப்பும்!

அப்பாவின் வேர்வையில்தான் என ஒருநாளும் அவர் சொல்லிக் காட்டியதில்லை!

நேரில் நம்மிடம் நாலு வார் த்தை கூட பேசாதவர்!

ஊர்முழுக்க நம்மை பற்றிதான் பெருமையாக பேசி திரிவார்!

அம்மாவின் பாசத்தை அங்க லாய்க்கும் நாம்!

அப்பாவின் பாசத்தை உண ரக்கூட இல்லையே!

❖ நமக்கு மீசை முளைத்தால் அவர் குதூகலிப்பார்!

தோளுக்கு மேல் வளர்ந்து விட்டால் அவரே உயரமானதாக உணர்வார்!

வாழ்க்கையில் நம்மை முன் னே நடக்கவிட்டு பின்னே நின்று பெருமிதத்துடன் ரசிப்பார்!

நம் வாழ்க்கையின் பின்னால்...

அப்பா எப்போதுமே இருப்பார்!

❖ அப்பாவிற்கு பாசத்தை வெளிப்படுத்த தெரியாது!

❖ அப்பாவிற்கு கொஞ்ச தெரி யாது!

❖ அப்பாவிற்கு போலியாய் இருக்க தெரியாது!

❖ அப்பாவிற்கு தன் கஷ்டத்தை வெளிக்காட்ட தெரியாது!

❖ அப்பாவிற்கு தனக்காக' எதையும் சேர்த்து வைத்துகொள்ள தெரியாது!

அந்த பைத்தியத்திற்கு அழவும் தெரியாது!

❖ வளர்த்த கெடா மாரில் பாய்ந்த போதும்!

ஒருவேளை சோற்றுக்காக மருமகளுக்கு வேலைக்காரனாய் மாறிப்போன போதும்!

முதியோர் இல்லத்திற்கு. தூக்கி வீசப்பட்ட போதும்! அவர் அழுத வரில்லை!

நம் சந்தோசத்திற்காகவே எதை யும் தாங்கும் ஆன்மா அவர்!

❖ பாசமோ!

❖ மன்னிப்போ!

❖ அழுகையோ!

உணர்வுகளை அவரிடம் உடனே வெளிப்படுத்தி விடுங்கள்!

❖ ஒருவேளை உங்கள் நண்பனின் அப்பாமரணமோ!

❖ உங்கள் அப்பா வயதுடைய யாரோ ஒருவரின் மரணமோ!

❖ உங்களை புரட்டி போட்டு!

அவர் பாசம் புரிந்து!அப்பாவை தேடி ஓடிரும்போது!

❖ வீட்டில் அப்பா... சிரித்துக் கொண்டிருக்கலாம்...

புகைப்படத்தில்!!

I love my அப்பா

பாவம் அவருக்குத்தான்.. அழத்தெரியாதே!!

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1817

### ராகவன்

விட்டுக்கொடு... உன்னை மதிக்கவில்லையெனில் விட்டுவிடு... உறவுகள் முக்கியம்தான், ஆனால் அதை விட தன்மானம் முதன்மையானது



### சுரேஷ்

இங்கு பலர் புரிந்துகொள்ளாமல் இருப்பது ஒன்றுதான்... தான் செய்தால் சரி... அதுவே பிறர் செய்தால் தவறு



### வனஜா

கணவனுக்கு போன் வந்தால் மனைவியின் காது இரண்டும் இப்படித்தான் இருக்குமாம்



### மீனாட்சி

பார்க்கக் கண்களைக் கொடுத்த் ஆண்டவன் பாராதிருக்க இமைகளையும் கொடுத்திருக்கிறான்... இரண்டையும் சரியான சமயத்தில் பயன்படுத்துபவனே புத்திசாலி



### ஜானகி

நெருங்கியவர்களிடம் தீர்க்கப்படாத வலியென்பது உடனிருந்துகொண்டே ஏமாற்றிவிட்டார்கள் என்பதாகத் தானிருக்கும்



### சுவேதா

உதவிக்கு யாரும் இல்லை என வருந்தாதே உனக்கு துணையாக நான் இருக்கிறேன் தைரியமாகப் போராடு- தன்னம்பிக்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# என் ஷட்டில்... என் கோர்ட்... என் தங்கம்!

ஒவ்வொரு முறையும் ஏமாற்றிப் போகும் வெற்றியைக் கைப்பற்ற வேண்டுமெனில், அணையாத ஒரு தீ மனதுக்குள் எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.

அதன் பிம்பம் விழிகளின் வழி தெரிய வேண்டும். அந்த உஷ்ணம், இரும்பாய் நிற்கும் எதிராளியை உருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வெற்றி வசப்படும். பனிகள் சூழ்ந்த சுவிட்சர்லாந்தின் பேசல் நகரில், பெரும்பசி கொண்ட அந்த நெருப்பின் தாக்கத்தை உணர்ந்திருக்கிறார் நசோமி ஒகுஹாரா.


பி.வி.சிந்துவின் வழியாக..!

கடைசி 16 இறுதிப்போட்டிகளில் 11 இல் தோற்றிருந்த சிந்து, இப்போது உலக சம்பியன். இந்திய பட்மிண்டன் வரலாற்றில், உலக அரங்கில் தங்கம் வென்றிருக்கும் முதல் வீரர்.

நசோமி, தன் வாழ்நாளில் இப்படியொரு இறுதிப்போட்டியைச் சந்தித்திருக்க மாட்டார். கனவில்கூட எதிர்பார்த்திருக்கவும் மாட்டார். சிந்துவின் தீவிர ஆட்டம் அவரைச் சுக்குநூறாக உடைத்தது. 21-7, 21-7 என்ற ஸ்கோர் போர்டுகூட சிந்துவின் தீவிரத்தை முழுதாய்ப் பறைசாற்றாது.

ஆட்டத்தின் போது, நிராயுதபாணியாய் நின்ற நசோமியின் முகம் அதைத் தெளிவாய் உணர்த்தும். ஒருகட்டத்தில், சிந்துவின் ஸ்மேஷை எடுக்க முடியாமல் விட்டுவிட, நின்ற இடத்திலிருந்து நகராமல், தோள்கள் தளர்ந்து, தன் ரொக்கெட் தாழ்ந்து கிடக்க, 'இதற்கு மேல் நான் என்னதான் செய்வது' என்பது போல் பாவமாய் அரங்கைப் பார்ப்பார். அந்த இடம் உணர்த்தியது, சிந்துவுக்குள் எரியும் தீ எவ்வளவு உஷ்ணத்தைக் கக்கிக் கொண்டிருக்கிறது என்று.

ஒரு முன்னாள் உலக சம்பியனை 38 நிமிடங்களில் வீழ்த்துவது என்பது சாதாரண விடயமல்ல. 200 சதவிகிதத் துல்லியத்தோடு தன் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். எதிராளியின் திட்டத்தையும் சரியாகக் கையாண்டு தகர்க்க வேண்டும். சிந்து, நசோமியின் திட்டத்தை எந்த இடத்திலும் செயற்படுத்த விடவேயில்லை. ஆட்டம் தொடங்கியது முதல், அந்த முதல் சர்வீஸ் முதல், தான் இழுத்த இழுப்புக்கெல்லாம் நசோமியை ஆடவைத்தார். ஒரு நொடிகூட அவரைச் சிந்திக்க விடவில்லை.



இருவருக்குமான உயர வித்தியாசத்தை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தினார் சிந்து. அந்தக் கோர்ட்டின் நான்கு மூலைகளுக்கும் மாறி மாறி அடித்தார். முதலில், வலது புறம் ஒரு லோங் ஷொட், அடுத்து இடது புறம் ஒரு டிராப். நசோமி, அதை அடித்துத் திரும்பும் முன், இடது புறம் ஒரு லோங் ஷொட். அடுத்த நொடியே வலது பக்கம் ஒரு டிராப். ஒவ்வொரு ஷொட்டுக்கும் ஓடிக்கொண்டே இருந்தார் நசோமி. இன்னும் சொல்லப்போனால், நசோமியின் கைகளும் கால்களும் சிந்துவின் சொல் கேட்டு நகர்ந்தன.


ஒவ்வொரு ஸ்மேஷும் புயலாகப் பறந்து நசோமியைத் தாக்கியது. மிகச் சிறந்த 'ரியாக்ஷன் டைம்' கொண்ட வீராங்கனையான நசோமியால், சிந்துவின் அந்த தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. சுமார் 400 கிலோமீற்றர் வேகத்தில் பாய்ந்த அந்த ஷொட்கள், நசோமியின் நம்பிக்கையையும் கனவையும் தகர்த்தெறிந்தன.

பொதுவாக, எதிராளியின் கோர்ட்டில், நெட்டுக்கு அருகே ஷட்டில்காக் விழுந்தால், அந்த வீரர்தான் எடுத்துக்கொடுப்பார். சர்வீஸ் போடப் போகும் வீரர், எடுத்துக் கொடுக்கும் வரை தன் இடத்தில்தான் நிற்பார். சிந்து நேற்று அப்படியில்லை. டிராப்களால் பொயின்ட் எடுத்தபோது, நசோமி ஷட்டிலை எடுக்கும் முன்பு, இவரே விரைந்து சென்று எடுத்தார். ஒரு நொடி தாமதம் இல்லை. தன் செயலில், தன் வேகத்தில் அந்த ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினார்.

நசோமிக்கு, அந்த ஷட்டிலை எடுப்பதற்கான அவகாசம்கூடத் தரவில்லை சிந்து. 'இது என் ஷட்டில்... இது என் கோர்ட்... இது என் தங்கம்... இன்னும் கொஞ்ச நேரம்தான், எல்லாம் முடிந்துவிடும்.' இதுதான் இந்த இறுதிப் போட்டியில் சிந்துவின் அட்டிட்யூட்!

சிறப்பான சம்பவம் சிந்து!

# 140 கிலோ எடையில் களமிறங்கிய வீரர்



மேற்கிந்தியத் தீவுகளில் அணியில் அதிக எடை கொண்ட ஓல் ரவுண்டர் வீரர், இந்தியாவுக்கு எதிரான நேற்றைய போட்டியில் அறிமுகமானார்.

மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி, கிங்ஸ்டனில் நேற்று முன்தினம் தொடங்கிய 2 ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கியது.

இந்தப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியில் 6 அடி 5 அங்குலம், 140 கிலோ எடை கொண்ட ஓல்-ரவுண்டர் வீரர் ரஹீம் கார்ன்வல் (வயது26)என்பவர்அறிமுகமானார். அந்த அணியின் 319 ஆவது டெஸ்ட் வீரராக அவர் களமிறங்கினார்.

டெஸ்டில் அதிக எடை கொண்ட வீரராக அறியப்படும் இவர், நடைபெற்ற போட்டியில் இந்திய வீரர் புஜாராவின் விக்கெட்டை வீழ்த்தி, டெஸ்டில் தனது விக்கெட் கணக்கை தொடங்கினார்.

லீவார்ட் தீவுகள் அணிக்காக முதல் தர 55 போட்டிகளில் விளையாடியுள்ள ரஹீம், 2224 ஓட்டங்களுடன் 260 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். கடந்த 2016 ஆம் ஆண்டு சிறந்த ஓல்-ரவுண்டர் திறமையை வெளிப்படுத்தியதால் இவர் கவனிக்கப்பட்டார்.

இதற்கு முன்பு, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் வார்விக் ஆம்ஸ்ட்ராங் 133 முதல் 139 கிலோ வரை எடை கொண்டிருந்ததே அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.




# ஞாபக மறதி நோய் (Dementia)

மறதி என்பது வயோதிபத்தின் ஒரு இயல்பு என்பது எம்மில் பலரது கணிப்பாகும். அதனால் ஞாபக மறதியை இயல்பாகக் கருதி பெரும்பாலானோர் உதாசீனப்படுத்தி விடுகின்றனர். ஞாபக மறதி என்பது ஒரு நோய் என்பதைச் சிலரே அறிந்து வைத்திருக்கிறார்கள்.

மறதி நோயும், நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள் போன்றே தவிர்க்கக்கூடிய அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய ஒரு நோய்தான். ஆனால் இந்த நோய் முக்கியமாக மூளையைப் பாதிப்பதால் பலரும் இதனை ஒரு நோயாகவே உணர்வதில்லை.

மறதி நோய் (Dementia) என்பது 'சிதைவடையும் மனம்" என்று பொருள்படும். வயது கூடும் போது இந்த நோயால் பாதிப்படையும் சாத்தியக் கூறும் படிப்படியாக அதிகரிக்கும். ஐக்கிய இராச்சியத்தில் 65 வயது முதல் 69 வயதுக்கு இடைப்பட்டோரில் இந்நோயினால் பாதிக்கப்படக்கூடியோரின் சாத்தியக் கூறு (prevalence)1.3 % ஆகும். இந்த விகிதாசாரம் படிப்படியாக அதிகரித்து 95 வயது உள்ளவர்களில் 32.5 வீதம் வரை செல்லும். உலகளாவிய ரீதியில் 60 வயதுக்கு மேலானவர்களில் மறதி நோயால் பாதிக்கப்படுவோரின் வீதம் 3.9 ஆகும்.

ஞாபக சக்தியை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.குறுகிய கால நினைவாற்றல் (Short Term Memory )

2.நீண்டகால நினைவாற்றல் (Long Term Memory )

### குறுகிய கால நினைவாற்றல்

ஞாபக மறதி நோயால் பாதிக்கப்படும் பெரும்பாலானோரில் குறுகிய கால நினைவாற்றலே முதலில் பாதிப்புக்குள்ளாகும். இவர்கள் அறிந்தவர்களின் பெயர்கள், அண்மையில் நடந்த சம்பவங்கள், கணக்கு வழக்குகள் என்பவற்றை மறந்து விடுவார்கள். இதனால் இவர்கள் குழப்பமடைந்தவர்களாகவும் இலகுவில் பதற்றமடைபவர்களாகவும் இருப்பார்கள் சில வேளைகளில் மனத்தளர்ச்சிக்கும் (Depression) ஆளாவார்கள்.

### நீண்டகால நினைவாற்றல்

நீண்டகாலமாக வெளிப்படையான நினைவாற்றல் (Explicit) Memory /Declarative memory ) நடைமுறை அல்லது உள்ளக நினைவாற்றல் (Implicit Memory / Procedural Memory) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

### வெளிப்படையான நினைவாற்றல்

1.உபகதை நினைவாற்றல் (Episode Memory)-இதில் ஞாபக சக்தி சம்பவங்களையும் அதனோடு சம்பந்தப்பட்ட இடம், நேரம், உணர்ச்சி மற்றும் சூழ்நிலை அறிவு போன்றவற்றையும் தீர்மானிக்கிறது.

2.பொருள் நினைவாற்றல் (Semantic Memory)-இது குரத்து சார்ந்த அறிவு அர்த்தங்களின் ஞாபகம் பொதுவாக வாழ்க்கை முழுவதும் கற்ற விடயங்கள் பற்றிய அறிவு. உதாரணமாக நிறங்களின் பெயர்கள், எழுத்துக்களின் ஒலிகள், பொருள் அல்லது விலங்குகளின் பெயர்கள் என்பவற்றின் ஞாபகமாகும்.

### நடைமுறை நினைவாற்றல்

இந்த வகை ஞாபக சக்தியானது எம்மையறியாமல் நாம் இயல்பாகச் செய்யும் அன்றாட நடவடிக்கைகளை உதாரணமாக சைக்கிள் ஓடுதல் "கைப்பழக்கம்" போன்றவற்றை நினைவில் இருத்துதலைக் குறிக்கும்.

ஞாபக மறதி நோயின் தாக்கத்தால் இந்த நீண்ட கால நினைவாற்றலும் நாளடைவில் பாதிப்படையக் கூடும். ஆரம்பத்தில் ஞாபக மறதியால் அவதிப்படுபவர் காலக்போக்கில் படிப்படியாக மொழியாற்றல், சிந் திக்கும் திறன், கற்கும் ஆற்றல், அவதானம் உட்பட்ட நீண்டகால ஞாபக சக்தியை இழக்க ஆரம்பிப்பார். படிப்படியாக அவரது செயற்பாட்டு நினைவாற்றலும் பாதிக்கப்படும். எனவே பலசரக்கு கடையில் சாமான்கள் வாங்குதல், பணத்தைப் பயன்படுத்துதல், பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்துதல் போன்ற பல நாளாந்த கடமைகள் இதனால் பாதிப்படையும்.

அன்றாட அடிப்படை நடவடிக்கையான உணவுண்ணல், மலசல கூடத்தைப் பாவித்தல், குளித்தல், சுகாதாரம் ஆகிய செயற்பாடுகள் கூட நாளடைவில் பாதிக்கப்படக் கூடும். அவதானம் குறைவடையும். குடும்பத்தின் புதிய உறுப்பினர்களையும் குழந்தைகளையும் அடையாளம் காண்பதில் நோயாளி சிரமப்படுவார். அவரது வழமையான குண நலன் மாற்றமடையக் கூடும். மிகவும் அன்பான, அமைதியான, கனிவான மனிதராக அதுவரை காலமும் சமூகத்தில் வாழ்ந்த அவர் மிகவும் ஆவேசமான, கோபக்காரனாக சண்டைக்காரனாகவும் இருப்பவர் படிப்படியாக அமைதியான நபராக மாறவும் இந்நோய் இடமளிக்கும்.

### மறதிநோய்க்கான காரணிகள்

மறதி நோய் என்பது உடலில் சில தற்காலிக மாற்றங்களால் அல்லது நிரந்தரமான மாற்றங்களால் ஏற்படுகின்றது. முதலில் தற்காலிக மாற்றங்களை எடுத்துக்கொள்வோம். தற்காலிக காரணிகளால் ஏற்படும் ஞாபக மறதியானது சிகிச்சையின் பின்பு மாறக்கூடியது. எனவே சரியான மருத்துவ பரீட்சிப்பும் சிகிச்சையும் இன்றியமையாதன. உதாரணமாக பின்வரும் தற்காலிக ஞாபகசக்திக் குறைபாட்டுக்கான காரணிகளை குறிப்பிடலாம்.

1.சித்தப் பிரமை (Delirium)

குறியை உடைய எவராவது பெரும்பாலும் வயோதிபப் பருவத்திலுள்ளவர்களுக்கு கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் சித்தப்பிரமை ஏற்படுவதை அவதானிக்கலாம்.

1)தோற்று நோயால் அல்லது நுண்கிருமிகளின் தாக்கத்தால்

2)எலும்பு முறிவால்

3)சத்திரசிகிச்சையின் பின்பு அல்லது கடும் உபாதையால் அவதியுறும் போது

4)மதுபானப் பாவனையால் அல்லது அப்பழக்கத்தை விடும் போது இதனை அவதானிக்கலாம்.

பாதிப்புற்றவர் நிதானமிழந்து (Confused) நேரம், இடம் மற்றும் மக்களை அறியாதவராய் மாயத் தோற்றங்களை உணர்கின்றராய் இருப்பார். இவர்களது நோய் அறிகுறியானது நோய்க்கான காரணி சிகிச்சையளிக்கப்படுமிடத்து இலகுவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

2.மனத்தளர்ச்சி (Depression)

இந்நோயானது வயோதிப வயதில் பொதுவானது. இன்று இலகுவில் சிகிச்சை அளிக்கப்படக்கூடிய மன நோயும் ஞாபக மறதி நோய்போலவே குணம் காட்டும்.

3.வைரஸ் என்செப்லைட்டிஸ் (Viral Encephalitis) மூளைக் காய்ச்சல் (Memintis)

HIV, சிபிலிஸ் (syohilis) போன்ற நுண்ணுயிர் தொற்றுக்கள்.

4.மூளை வீக்கம் (Encephalopathy)

5.வலிப்பு (epilepsy)

6.மூளைக்கட்டிகள்

7.வலிப்பு நோய்க்கான மருந்துகள் உள்ளிட்ட சில வகை மருந்துகளின் உபவகைகள் (side effects)

8.மூளைச்சவ்வுக்குக் கீழான இரத்தக் கசிவு (Subdural Heamarage)

9.இயல்பு அழுத்த மூளையில் நீர் சேரல் (Normal Pressure Hydrocephalus)

10.உடல் வளர்ச்சியை மாற்றும் (Metabolic) காரணிகள் - ஈரல் சிறுநீரக செயலிழப்பு

11.அளவுக்கு அதிகமான மதுபாவனை

12.குருதிக் கனிமங்களில் மாற்றம்

13.குருதியில் கல்சியம் அதிகரிப்பு

14.உடலில் சில விற்றமின்களின் குறைபாடு (Vitamin B2 Fulati Thaiam Niadacin)

15.மூளைச் சேதம்.

பெரும்பாலான மேற்கூறப்பட்ட காரணிகளால் உருவாகும் ஞாபக மறதிக் குறைபாடுகள் மாற்றப்படக் கூடியதாகும்.

### உண்மையான ஞாபக மறதி நோயின் வகைகள் (Real Dementia)

1.அல்செய்மர்ஸ் (Alzheimention Dimention)

இவ்வகை நோயானது அண்ணளவாக 60% ஆன ஞாபக மறதி நோய்க்கான காரணமாகும். இந்நோயானது பரம்பரையிலும் கடத்தப்படக்கூடியது. அதை விட எவரும் இந்நோயால் பாதிப்படையக் கூடும். இந்நோயானது மெதுவாக முதிர்ச்சியடைந்து இறுதியில் பாதிக்கப்பட்டவர் சுயநிலை மறந்தவராக எல்லாவகையான நாளாந்த கடமைகளுக்கும் மற்றவர்களில் தங்கியிருப்பவராக மாற்றமடைவார். சில சமயங்களில் இவர்கள் தமது நெருங்கிய உறவினரான மனைவி / கணவன் பிள்ளைகள் போன்றோரைக் கூட அடையாளம் காண முடியாதவராய் இருப்பார்கள். பொதுவாக இவர்கள் வேறு நோய்களின் பாதிப்புக்களால் இறப்பார்கள். இந்நோய் காரணமாக அவர்களது ஊட்டச்சத்து, நீர்ச்சத்து, சுகாதாரம , சாதாரண உயிர்வாழ்வதற்கான பொறிமுறைகள் (விழுங்குதல் மலசலம் கழித்தல்) என்பன பாதிப்படைவதால் இவர்கள் இலகுவில் நோய் வாய்ப்படக் கூடியவராக இருப்பர்.

இந்நோயானது விசேட வைத்திய நிபுணரால் (நரம்பியல் நிபுணர் / முதியோர் மனநல ஸ்வைத்திய நிபுணர் ) பரீட்சிக்கப்பட்டு மருந்து வரலாறு (History), ஞாபக சக்தி பரீட்சை (Connitive testing ), நரம்பியல் மனோதத்துவப் பரீட்சை (Neuro Psychology), இரத்தப் பரிசோதனைகள் (இவை பொதுவாக நோயாளியைப் பாதிக்கக்கூடிய மற்றைய நோய்களை அடையாளம் காண உதவுகின்றது) பல்வேறு ஸ்கான் பரிசோதனைகள் ( Ct,Mri, Spect, Pet Scan) உதவியுடன் இந்நோய் அடையாளம் காணப்படுகின்றது.

இந்நோய் பீடித்தவர்களின் மூளையில் நரம்புக்கலங்கள் (nerve cells) படிப்படியாக இறந்து போகின்றன. எனவே மூளையின் அளவு சிறிதாகின்றது. இந்நோயை முற்றாக மாற்றக்கூடிய சிகிச்சை கிடையாது. ஆனால் மூளையின் வினைத்திறனை முடிந்தளவிற்கு அதிகரிக்க மருந்துகள் தற்போது உள்ளன. இந்த மருந்துகளானது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை முடிந்தளவு உயர் ந்த நிலையில் இறக்கும் வரை பேணுவதாகும். ஆனால் இது எல் லோரிலும் வெற்றிகரமாக வேலை செய்வது கிடையாது .தற் சமயம் பல்வேறு உலகளாவிய ஆராய்ச்சிகள் இந்த நோயை மையமாக வைத்து மேற்கொள்ளப்படுகின்றன. மேலைத்தேய நாடுகளில் மிகவும் செலவு நோய் ஞாபக மறதி நோயாகும். உ-ம் பெருமளவு பணம் பாதிக்கப்பட்டவரைப் பராமரிப்பதற்கு செலவிடப்படுகின்றது. காலப் போக்கில் இந்த ஆராய்ச்சிகளின் விளைவாக இந்நோயைக் குணப்படுத்தக் கூடிய அல்லது தடுக்கக் கூடிய மருந்து ஒன்று கண்டுபிடிக்கப்ப டலாம் என்று நம்புவோமாக.

### இந்நோய்க்கான மருந்துகள்

1)Acetyl Chaline Esterace Inhibition -1.Donepezil 2.Galamatmin 3.Rivastigmim

2)Memantine

2.குருதிக் குழாய் அடைப்பு ஞாபக மறதி (Vascular Dementia)

இது இரண்டாவது பொதுவான வகை. சிறிய ரக பக்க வாத நோய்களால் (Tia) ஏற்படும் ஞாபக மறதி. இந்த வகையில் அறிகுறிகள் அல் செய்மர்ஸ் போலவே இருக்கும். ஆனால் பொதுவாக படிப்படியாக (Step Ladder Pattern ) அறிகுறிகள் மோசமடையும். இதற்கு அல்செய்மர்ஸ் மருந்துகளால் பயனில்லை. ஆனால் சாதாரண உயர்குருதி அழுத்த இதய நோய் மாற்றுக்கள் பாரிய பாதிப்புக்களை தடுக்க வல்லன. இந்நோய் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், உயர்கொலஸ்ரோல் மற்றும் புகைப்பிடிப்பவர்களை பெரிதும் பாதிக்கும். மேற்கூறிய நோய்களை கட்டுப்படுத்தினால் இந்த வகை ஞாபக மறதி நோயைத் தடுக்க முடியும்.

3.பார்க்கின்சன் நோய் சம்பந்தப்பட்ட மறதி நோய் (Dementia In Parkinson's Disease/Lewy Dementia)

இந்நோயானது பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டவர்களை தாக்குகின்றது. இவர்களது ஞாபக மறதி அறிகுறிகளானது நேரத்துக்கு நேரம் வேறுபடும். இவர்கள் சில வேளைகளில் மாயத்தோற்றங்களையும் காண்பார்கள். (Visual Hallucination) இந்நோய்க்கு குறிப்பிடத்தகுந்ததாக மருந்துகள் இல்லை. ஆயினும் அல்செய்மர்ஸ் நோய்க்கான மருந்துகள் சில சமயம் அறிகுறிகளை தற்காலிகமாக கட்டுப்படுத்த முடியும்.

4.முன்மூளை ஞாபக மறதி நோய் (Fronto Temporal Dementia)

பரம்பரையாக கடத்தப்படும் இந்நோய் பொதுவாக இளம் வயதினரையும் தாக்கும். இந்நோயில் முக்கியமாக பாதிக்கப்பட்டவரின் குணநலன்களில் மாற்றம் ஏற்படும். இந்நோய்க்கு மருந்து இல்லை. நோய் அறிகுறிகளை கட்டுப்படுத்தும் சில மனநோய் மருந்துகள் (Antipsychotic/ Anti Depression ) இதற்கு உதவக்கூடும்.

5.கண்டிங்டன் மறதி நோய் (Dementia –Huntington Desease)

இதுவும் பரம்பரையாக பரவும் நோய் இந்நோய்க்கும் மருந்து இல்லை.

ஞாபக மறதி நோயாளர்களுக்கு பொதுவாக முற்றாக மாற்றக்கூடிய மருந்துகள் இல்லாவிடினும் நடைமுறையில் எவ்வாறு அந்நோயால் பாதிக்கப்பட்டவரை பராமரிப்பது என்பது முக்கியமானது. பாதிக்கப்பட்டவரது நெருங்கிய உறவினர்களும் பராமரிப்பாளர்களும் இந்நோயைப் பற்றி பூரணமாக அறிந்திருப்பது மிகவும் முக்கியமானது. இந்நோய் முற்றும் போது நோயாளி சுய நினைவு அற்றவராக உணவு உண்பதை மலசலம் கழிவதை உணராதவராக இருப்பார். எனவே பராமரிப்பவர் நோயாளியின் இயலாமையை புரிந்து கொண்டு அவரை அன்பாகவும் பக்குவமாகவும் இறுதி வரையில் பராமரிக்க வேண்டும். பொதுவாக நோயாளியின் கணவன் அல்லது மனைவியும் கடுமையானதும் சலிப்புத்தன்மை ஏற்படுத்தக்கூடியதுமாகும். மேலை நாடுகளில் இவ்வகை நோயாளியைப் பராமரிப்பதற்கென தனியான வசதிகள் உள்ளன. (Care Agencires). இவை தனியார் மூலமாகவோ அரசாங்க சேவைகள் (Social Service) மூலமாகவோ வழங்கப்படும் ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் இச்சேவைகள் இன்னமும் பூரணமாக வளர்ச்சியடையவில்லை. எனினும் உற்றார், உறவினர்கள் இங்கே முன் வந்து உதவுவதால் மன நோயாளிகளை பராமரிப்பது சிறிது இலகுவானது.

என்னதான் சிகிச்சை அளித்தாலும் நோயின் இறுதிக்காலத்தில் நோயாளி மூளையின் மொத்த செயற்பாட்டையும் இழந்து படுத்த படுக்கையாகி (Bedfast Stage) விடுவார். இதனால் வேறுபல உப பாதிப்புக்களுக்கும் உள்ளாகி படுக்கைப்புண், நுரையீரல் அலர்ச்சி, சிறுநீரகத்தொகுதி நுண்ணுயிர் பாதிப்புக்களுக்கு உட்பட்டு மரணிக்க நேருகின்றன.

### மறதி நோய் வராமல் தவிர்ப்பது எப்படி?

இந்நோய் வருவதைத் தவிர்க்க முடியாது என்றாலும் தாமதப்படுத்த முடியும். எமது முன்னோர் சொல்லிச் சென்றது போல் ஒழுக்கமானதும் சமச்சீரானதும் (balanced) ஆரோக்கியமானதுமான வாழ்க்கை முறையை பொதுவாக எல்லா வகையான நோய்களையும் எம்மை அண்டவிடாது தடுக்கும்.

பின்வரும் எளிய நடைமுறைகளைப்பின்பற்றினால் மறதி நோய் வருவதை முடிந்தளவில் தாமதப்படுத்த முடியும்.

➢உணவில் கொழுப்பு, இனிப்பு, உப்பு மற்றும் செயற்கை உணவுகளைத் தவிர்த்தல்.

➢கூடியளவு மரக்கறி வகைகள், பழங்கள் என்பவற்றை முடிந்தளவு பச்சையாகவோ அல்லது அவித்தோ உண்ணல்

➢கொழுப்பு குறைந்த பால் (Semi Fat Milk) முட்டை, கடல் உணவுகளை முடிந்தளவு அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ளல்.

➢மது, புகைத்தல், போதைவஸ்து பாவனையை முற்றாக நிறுத்துல் .சிவப்பு வைன் (Red vine) சிறிதளவு அருந்திவந்தால் ஞாபக சக்தியை பாதுகாக்க முடியும் என்று ஒரு சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன

➢நாளாந்த உடற்பயிற்சி (Regular Exercise )

➢முடிந்தளவு உடலையும் உள்ளத்தையும் உற்சாகத்தையும் உபயோகமாகவும் வைத்திருத்தல் (Active And Occupied ) உம் ஓய்வு பெற்ற பின் பல்வேறு பொதுப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். ஊர்கோவிலில் பணி விடை செய்தல் கூட ஞாபக மறதி நோயை தாமதப்படுத்துவதில் பேருதவி செய்யும்.

➢தற்போது உலகளாவிய ரீதியில் இந்நோயை குணப்படுத்தவோ தடுக்கவோ பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்தடுத்த சந்ததிகளுக்காவது இதனால் நல்ல பயன் கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

வைத்திய கலாநிதி
ஸ்ரீ. நகுலேஸ்வரன்
முதியோர் மனநல
விசேட வைத்திய நிபுணர்
ஐக்கிய இராச்சியம்.